நீல வானில்
பசுமைமிகு விமான சேவை

Civil Aviation Authority Sri Lanka

Safe and Efficient Skies for All

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

ஆண்டறிக்கை 2023

CO_2

Civil Aviation Authority
Sri Lanka

Safe and Efficient Skies for All

உள்ளடக்கம்

கௌரவ துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரிடம் கையளிப்பு / 4

விமானப் போக்குவரத்து புள்ளிவிவர சிறப்பம்சங்கள் / 5

தலைவரின் செய்தி / 8

சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு / 10

பணிப்பாளர்கள் சபை / 14

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை பற்றிய கண்ணோட்டம் / 16

அலகுகள் மற்றும் பிரிவுகள் தொடர்பான மீளாய்வு / 20

செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு - முகாமைத்துவப் பணியாளர்கள் / 24

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆளுகையும் பொறுப்புடமையும் / 26

செயற்பாட்டுச் சிறப்பம்சங்கள் / 33

பாதுகாப்பைப் பலப்படுத்துதல் / 33

பாதுகாப்பு மற்றும் வசதியை மேம்படுத்தல் / 36

வினைத்திறனும் பயனுள்ள முகாமைத்துவமும் / 38

பசுமை விமானப் போக்குவரத்து / 40

விமானத்துறையின் வளர்ச்சி / 42

திறன் அபிவிருத்தி / 47

தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திகள் / 50

பணியாளர்களை ஊக்குவித்தல் / 51

நிதிச் சிறப்பம்சங்கள் / 54

நிதிக் கூற்றுக்கள் / 58

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2023 / 88

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் - 2023 / 101

இணைப்புக்கள் / 112

ஒழுங்குபடுத்தல் எல்லை / 112

CAASL யின் தொழில்நுட்ப செயற்திறன் பற்றிய சுருக்கம் / 114

முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் - 2023 / 116

போக்குவரத்து விபரங்கள் / 122

குறிப்புகள் / 123

CAASL ஆண்டறிக்கையைப் பார்வையிட ஸ்கான் செய்யவும்.
https://www.caa.lk/en/downloads/annual-reports

நீல வானில்
பசுமைமிகு விமான சேவை

இவ்வாண்டு நிறைவை முன்னிட்டு, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை (CAASL), பாதுகாப்பு நிலைத்தன்மை, தேசிய அபிவிருத்தி என்பவற்றை விமானத்துறைக்குள் முன்னேற்றுவதை நோக்கி எடுக்கப்பட்ட அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகளையிட்டு, கண்ணோட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெருமையடைகிறது.

நாம் காபன் உமிழ்வுகளைக் குறைப்பதற்கும், நிலையான விமான எரிபொருள்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், எமது தொழிற்பாடு அனைத்திலும் வலுவை வினைத்திறனுடன் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, பல்வேறு வகையான பசுமை முயற்சிகளை ஆரம்பித்ததன் மூலம், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டியுள்ளோம். மேலும், நாம், எமது விமானத்துறைத் தகைமைகளை விரிவாக்குதல் மற்றும் தேசிய - சர்வதேச, தொடர்புகளைத் துரிதமாக மேம்படுத்தி, நாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றோம். எமது துரிதமான அர்ப்பணிப்பு, விமானத்துறை அபிவிருத்தியில் முக்கியமான முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியுள்ளது. மேலும், பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் மற்றும் நிலையாதார நடைமுறைகளுடன் கூடிய, சுற்றாடலுக்கு உகந்த விடயங்களை அமுல்படுத்துதல், ஆகிய விடயங்களை எமது சொந்த வியாபாரப் பெயரான பசுமைமிகு விமான சேவை என்பதற்குள் எடுத்துச் செல்கின்றோம்.

கௌரவ துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானத்துறை அதிகார சபை சட்டத்தின் பிரிவு 15 இன் கீழ் உள்ள சட்டவாக்கத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யும் வகையில் வருடாந்த அறிக்கை - 2023 தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை, இலங்கை விமானத்துறை அதிகார சபை, 2023 ஜனவரி 01 இல் இருந்து 2023 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் நிறைவேற்றிய அனைத்து முக்கியமான நடவடிக்கைகளினதும் சாராம்சத்தையும், 2023 ஆம் நிதியாண்டுக்கான அதிகார சபையின் நிதிநிலைமைக் கூற்றையும் உள்ளடக்குகிறது.

ஜீ.எஸ்.விதானகே
தலைவர்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை
2024 பெப்ரவரி 27

விமானப் போக்குவரத்து புள்ளிவிபரவியல் சிறப்பம்சங்கள்

பிரயாணிகளின் நகர்வு



விமானப் போக்குவரத்து புள்ளிவிபரவியல் சிறப்பம்சங்கள்

பொருட்களின் நகர்வு (மெ.தொ)



விமானங்களின் நகர்வு



தலைவரின் செய்தி

"தேசிய விமானத்துறைப் பாதுகாப்புத் திட்டம் (NASP), தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்ற சிவில் விமானத்துறை பிரதான திட்டம் (CAMP) மற்றும் தேசிய நிலைத்தன்மை விமானத்துறை சுற்றாடல் கொள்கை (NSAEP) போன்ற உபாயநுட்ப முன்னெடுப்புகள், நிலையாதார வளர்ச்சி மற்றும் இலங்கை விமானத்துறைக்குள் உயர் பாதுகாப்புத் தரங்களைப் பேணுதல் ஆகியன தொடர்பான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இந்த முன்னெடுப்புகள், ஐநாவின் நிலையாதார அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய இலங்கையின் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது. அத்துடன், உலகளாவிய நிலையாதார முயற்சிகளுக்கு எம்முடைய சாதகமான அணுகுமுறையும் பிரதிபலிக்கிறது."

CAASL இன் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில், இலங்கை விமானக் கைத்தொழில் துறையில் கடந்த வருடத்தில் ஏற்பட்ட முக்கியமான முன்னேற்றங்களையும், அடைவுகளையும் நாம் பெருமிதத்துடன் எடுத்துக் காட்டுகின்றோம். பொருளாதார வீழ்ச்சி, கொவிட் தொற்றினால் ஏற்பட்ட பாதிப்பு என்பன உள்ளடங்கலாக, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாம் எதிர்கொள்கின்ற சக்தியையும், அதிலிருந்து மீண்டுள்ளமையையும் வெளிப்படுத்துகின்றோம். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என்பன பாராட்டத்தக்க வகையிலான வளர்ச்சியினை வெளிக்காட்டியது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் 70% பிரயாணிகளின் அதிகரிப்பையும், விமானங்களின் நகர்வுகளையும் எடுத்துக்காட்டியது.

சர்வதேச சிவில் விமானத்துறை அமைப்பினால் (ICAO) வழிகாட்டப்படுகின்ற பாதுகாப்பு விடயங்களுக்கு நாம் அர்ப்பணிப்பு வழங்கியமை, எமது தொழிற்பாடுகளில் பிரதான அம்சமாகும். இந்தத் தராதரங்களுக்கு இணங்கி நடக்கின்ற எமது முன்னேற்றகரமான அணுகுமுறை, விமானப் போக்குவரத்தில் வளர்ந்து வரும் கேள்விகளுக்கு உரிய விடயங்களைச் செய்வதில் பிரதான இடம் வகிக்கிறது. இதற்குச் சான்றாக, ICAO USAP-CMA கணக்காய்வை நாம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தமை எடுத்துக்காட்டுவதுடன், இங்கு இலங்கை 92% அசாதாரணமான, வினைத்திறனான பங்களிப்பை அடைந்து, தெற்காசிய வலயத்திற்குள் விமானப் பாதுகாப்புத் துறையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை விமானக் கைத்தொழில் துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் சட்டவாக்க முயற்சிகள் பிரதான இடத்தை வகிக்கின்றன. சிவில் விமானத்துறைச் சட்டம் மற்றும் விமானம் ஊடாக பொருட்களை எடுத்துச் செல்லுதல் சட்டம் என்பவற்றுக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், எமது நவீன மயப்படுத்தலுக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதுடன், கைத்தொழிற்துறை வளர்ச்சி மற்றும் புதிய விடயங்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குகின்றது. இங்கு குறிப்பிடப்பட்ட சட்டவாக்கத் திருத்தங்கள், குறிப்பாக, விமானத்துறைச் சேவைகளில் தனியார் துறையின் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதோடு, தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் உள்நாட்டு விமான சேவைகளில் போட்டித்தன்மையையும் உருவாக்குகிறது.

தேசிய விமானத்துறைப் பாதுகாப்புத் திட்டம் (NASP), தொடர்ந்து முன்னெடுக்கப்படும் சிவில் விமானத்துறை பிரதான திட்டம் (CAMP) மற்றும் தேசிய நிலைத்தன்மை விமானத்துறை சுற்றாடல் கொள்கை (NSAEP) போன்ற உபாயநுட்ப முன்னெடுப்புகள், நிலையாதார வளர்ச்சி மற்றும் இலங்கை விமானத்துறைக்குள் உயர் பாதுகாப்புத் தரங்களைப் பேணுதல் ஆகியன தொடர்பான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இந்த முன்னெடுப்புகள், ஐக்கிய நாடுகளின் நிலையாதார அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய இலங்கையின் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது. அத்துடன், உலகளாவிய நிலையாதார முயற்சிகளுக்கு எமது சாதகமான அணுகுமுறையையும் பிரதிபலிக்கிறது.

இந்த உபாயநுட்ப முன்னெடுப்புகளுடன் இணைந்து, விமானத்துறை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு உதாரணங்களாக, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமானப் போக்குவரத்து கேள்வியைப் பூர்த்தி செய்யும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு பிரயாணிகளின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் வெளியேறுகை முனைய வசதிகள் போன்ற திட்டங்கள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

ஐக்கிய அரசு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான புதிய விமான சேவைகளுக்கான உடன்படிக்கைகள், சர்வதேச பங்குடமை முயற்சிகளுக்கான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த உடன்படிக்கைகள், உலகளாவிய விமானத்துறையில் உள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு, அவற்றுக்கு ஏற்றவாறு துல்லியமாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விடயம், இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில் தொடர்பை அதிகரிப்பதற்கான புதிய வழிவகைகளையும் தொழிற்பாடுகளின் உச்ச அளவையும் ஏற்படுத்தியுள்ளது.

தொழிற்பாட்டு மேம்படுத்தல்களுக்கு மேலதிகமாக, நாம் விமானத்துறை விழிப்புணர்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். விமான நிலைய விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள், பாடசாலை நிகழ்ச்சிகள் மற்றும் “குவன் சரிசர” தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பன விமானத்துறை சம்பந்தமான கல்வி அறிக்கை பாடசாலை மாணவர்களுக்கிடையில் புகட்டுவதற்கான பெறுமதிவாய்ந்த கருவிகளாகும். மேலும், எமது நிதிச் செயற்திறன், எமது தன்னிறைவுத் தன்மையையும், நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. மேலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையில் விமானக் கைத்தொழில் துறை முக்கிய இடம் வகிக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட், எமது அதிகார சபையினால் சான்றுபடுத்தப்பட்டு, உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம், இலங்கையில் செயற்பட்டு வரும் அனைத்து விமானங்களுக்கும் உணவு வழங்கும் சேவைகளை அளிக்கின்றது. இந்த சான்றுபடுத்தல் செயன்முறையானது, நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தல் இணக்கம், நிறுவனக் கட்டமைப்பு, தகைமைகள், பொருத்தமான தகுதிவாய்ந்த பணியாட்களின் இருப்பு, பயிற்சியளிக்கப்பட்ட பணியாட்கள் போன்ற விடயங்கள் தொடர்பான விரிவான மதிப்பீட்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. இதனைவிட, நாம் தேவையான கருவிகள், உபகரணங்கள், ஏனைய வசதிகள், அவசியமான ஆவணப்படுத்துகை தொடர்பான பராமரிப்பு போன்ற விடயங்களையும், சான்றுபடுத்தல் செயன்முறைகளில் பயன்படுத்தியுள்ளோம்.

உபாயநுட்ப நகர்வு என்ற வகையில், நாம் விஷேட முகாமைத்துவ மட்டத்திற்கும், முக்கிய தொழில்நுட்ப இடங்களுக்கும் பொருத்தமான தகுதிவாய்ந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டுள்ளோம். இந்த முயற்சிகள், பொருத்தமான அமைச்சு மற்றும் அதிகார சபைகளிடம் இருந்து அண்மையில் பெறப்பட்ட அங்கீகாரம் மூலம் இயலுமாக்கப்பட்டது. இந்த உபாயநுட்ப ஆட்சேர்ப்பு முறையானது, எமது சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் முக்கிய தொழில்நுட்ப அணிகளில் வினைத்திறனையும், நிபுணத்துவத்தையும் அதிகரிப்பதன் மூலம், விமானத்துறை பாதுகாப்பு மற்றும் சேவையில் நாம் தொடர்ந்து அதியுயர் தராதரங்களைப் பேண எத்தனிக்கின்றோம்.

இறுதியாக, நான் CAASL யின் அனைத்துப் பணியாட்கள், கைத்தொழில்துறைப் பங்குதாரர்கள், அரசாங்க அலுவலர்கள் ஆகியோர் வழங்கிய ஆதரவுக்கும், கடமை உணர்ச்சிக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். DGCA மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை ஆகியோர் வழங்கிய எதிர்கால நோக்கைக் கொண்ட தலைமைத்துவத்திற்கு நான் விசேட அங்கீகாரத்தைத் தெரிவிக்கிறேன். மேலும், நான், கௌரவ துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் அனைத்து அமைச்சு அலுவலர்களுக்கும், அவர்கள் வழங்கிய அளப்பரிய சேவைகளுக்கும், ஒத்துழைப்புக்கும், வழிகாட்டுதல்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். இவையனைத்தும், இலங்கை விமானத்துறையில் எமது பகிர்ந்துகொள்ளப்பட்ட நோக்கை அடைந்துகொள்வதற்கு உதவியாக இருந்தன.



ஜீ.எஸ். விதானகே
தலைவர்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

சிவில் விமானத்துறையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

> “2023 மே மாதத்தில் இலங்கை ICAO USAP - CMA கணக்காய்வில் 92% மதிப்பெண்ணைப் பெற்று குறிப்பிடத்தக்க அடைவு மட்டத்தைப் பெற்றது. இது, விமானத்துறைப் பாதுகாப்பு முறைமைகள் மற்றும் அரச மேற்பார்வை இயலுமை என்பவற்றில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கிறது. ICAO விமானத்துறைப் பாதுகாப்பு நிபுணர்களால் நடத்தப்பட்ட இந்தக் கணக்காய்வு, எமது ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு, தேசியக் கொள்கைகள், விமான நிலையப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை நுணுக்கமாக மதிப்பீடு செய்துள்ளது. இந்த அசாதாரணமான பெறுபேறு, எம்மை ஆசிய பசிபிக் வலயத்திலுள்ள முன்னணி ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுடன் இணையாக நாங்கள் இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது”.

கடந்த வருடத்தில் நாம் மைற்கற்கள் மற்றும் சிறந்த அடைவுகளைப் பெற்றுள்ளமையினால், 2023 ஆம் ஆண்டு காலப்பகுதி இலங்கை சிவில் பாதுகாப்பு அதிகார சபையில் ஏற்பட்ட முக்கியமான முன்னேற்றத்தையும், நிலைமாற்றத்தையும் எடுத்துக்காட்டுகிறது. உலகளாவிய தொற்று நோய் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியில், CAASL நாட்டை முன்னேற்றுவதற்கான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு, புதிய விடயங்களால் உந்தப்பட்டு சிவில் விமானத்துறையின் அனைத்து விடயங்களிலும் சிறந்து விளங்குவதை அறிந்துகொள்ள முடிகிறது.

CAASL யின் உபாயநுட்ப முன்னெடுப்புகளில் முன்னணியாகத் திகழ்வது, தொடர்ந்து முன்னெடுக்கப்படும் சிவில் விமானத்துறை பிரதான திட்டத்தை (CAMP) விருத்தி செய்து அமுல்படுத்துவதாகும். இது, அடுத்த 10 ஆண்டுகளில் தேசத்தில் சிவில் விமானத்துறை அபிவிருத்தி பற்றிய முன்னோக்கிய பார்வையைக் கொண்ட திட்டம் ஒன்றாகும். சர்வதேச சிவில் விமானத்துறை அமைப்பின் (ICAO) பரிந்துரைகளுடன் இணங்கி நடந்து, CAMP இலங்கையின் விமானத்துறை உட்கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்கு முழுமையான அணுகுமுறையைக் கொண்டுள்ளதுடன், பாதுகாப்புத் தராதரங்களை உயர்த்துவதற்கும், நிலையாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும் எத்தனிக்கிறது. CAMP யினுடைய தயாரிப்பானது, CAASL இல் உள்ள நிபுணர்கள், அரசாங்க முகவர்கள், கைத்தொழில்துறை பங்குதாரர்கள் மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் ஆகியோரினால் ஒன்றிணைந்து எடுக்கப்பட்ட முயற்சியாகும். விரிவான ஆலோசனைகள், ஆய்வு மற்றும் பகுப்பாய்வு என்பன ஊடாக CAMP இலங்கையின் விமானத்துறை முறைமையிலுள்ள முக்கியமான விடயங்களையும், பல்வேறுபட்ட தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கான விரிவான ஒரு திட்டமாகும்.

CAMP யில் முக்கியமான கூறுகளாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி, அதாவது, விமான நிலையங்கள், விமான ஊடுருவல் முறைமைகள், துணைநிலைச் சேவைகள் என்பவற்றை உயர்த்துதலும், ஒழுங்கமைப்புச் சீராக்கம் அதாவது, செயன்முறைகளை நெறிமுறைப்படுத்தல், சட்டவாக்கங்களைப் புதுப்பித்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது. இவ்விடயங்கள், சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகள், பாதுகாப்பு முன்னேற்றம், அதாவது, விமானத்துறைப் பாதுகாப்பு, அவசர நிலைமைக்கான பதில்கள் என்பவற்றை ICAO யின் தராதரங்களுக்கு அமைய உருவாக்குதல் மற்றும் பசுமை விமானத்துறைக் கொள்கைகள், சுற்றாடல் தாக்கங்களைக் குறைப்பதில் நிலையாதார நடைமுறைகளைப் பிரயோகித்தல் போன்ற விடயங்களையும் உள்ளடக்குகிறது. CAMP தொழிற்பாட்டிற்குக் கொண்டுவருவதன் மூலம், CAASL இலங்கையை விமானத்துறையில் தெற்காசியப் பிராந்தியத்தில் ஒரு முக்கிய மையமாக உருவாகுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது, அதிகரித்து வரும் விமானப் பிரயாணங்கள், பொருட்களை ஏற்றிச் செல்லுதல் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றில் ஏற்படுகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும் தகைமையை உருவாக்குதலாகும். CAMP உபாய நுட்ப முதலீடுகள், கொள்கைத் தலையீடுகள், கூட்டுப் பங்குடமைகள் என்பவற்றுக்கு ஒரு வழிகாட்டும் கட்டமைப்பாகும். இதன் மூலம் நாடு செழுமை மற்றும் தொடர்பாடலை நோக்கி உந்தப்படும்.

உபாயநுட்பத் திட்டங்களுக்கு மேலதிகமாக, CAASL விமானக் கைத்தொழில் துறைக்குள் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நெருக்கடி முகாமைத்துவம், இதற்குரிய பதில் என்பவற்றில் முக்கியத்துவத்தை அங்கீகரித்திருக்கின்ற CAASL கடத்தல்கள், பணயக்கைதிகள் போன்ற சூழ்நிலைகளில் அவற்றை முறையாகக் கையாழுவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட பணயக் கைதிக்கான பேச்சுவார்த்தை அணி ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த விசேட அலகு, பயணிகள் விமானப் பணியாளர்கள், விமான நிலைய ஊழியர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு மற்றும் நெகிழ்வான விமானப் பணிச்சூழலை உருவாக்க எத்தனிக்கின்றது. இதனைவிட, CAASL (சிக்காகோ சமவாயத்தின்படி) அதிலுள்ள சர்வதேச தராதரங்கள், கடப்பாடுகளுக்கு அமைய, சுயாதீனமான விமான விபத்துப் புலனாய்வுப் பணியகம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்குரிய சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் காத்திருக்கின்ற அதேவேளை, CAASL விமான விபத்து மற்றும் ஏனைய சம்பவங்களை பாரபட்சமின்றி விசாரணை செய்வதற்காக இடைக்கால நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்துள்ளது. இந்த நடவடிக்கைகள், நிபுணத்துவக் குழுக்களை அமைத்தல், பயிற்சித் திட்டங்கள் மற்றும் சர்வதேச முகவர்களுடனான இணைப் பங்குடமைகள், வலுவான விபத்துக்கான விசாரணைக்கான அடித்தளத்தை இலங்கையில் உருவாக்குதல் போன்ற விடயங்களை உள்ளடக்குகிறது.

CAASL விமான நிலைய விடயங்களைக் கையாளுதல், விமானத்திற்குள் உணவு வகைகளைப் பகிர்ந்தளித்தல், விமானத்துறைப் பாதுகாப்பு உள்ளடங்கலாக, அத்தியாவசியமான அனைத்துச் சேவைகளையும் சான்றுப்படுத்த கடுமையான விதிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. விரிவான கணக்காய்வுகள், மதிப்பீடுகள் என்பவற்றின் மூலம் CAASL சேவை வழங்குநர்களுக்கு இறுக்கமான ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள், உயர்மட்டத்திலான பாதுகாப்பைக் கையாளுதல், தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைப் பேணுதல் ஆகிய விடயங்களை உறுதிப்படுத்துகிறது. விமான சேவைகளை சான்றுபடுத்துவதன் மூலம் CAASL விமான நிறுவனங்கள், பிரயாணிகள் மற்றும் கைத்தொழில்துறைப் பங்குதாரர்களிடையே நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை வளர்ப்பதன் மூலம் இலங்கையை விமானப் பிரயாணத்திற்கான முதன்மையளிக்கப்பட்ட இடமாக உருவாக்குவதை உறுதிப்படுத்துகிறது.

இதனைவிட, CAASL அதனுடைய பணிப் படையில் பரிசோதகர் சான்றுப்படுத்தல் மற்றும் தேசிய சிவில் விமானத்துறைப் பரிசோதகர் சான்றுப்படுத்தல் என்பவற்றைத் தரப்படுத்துதல் மூலமாக தொழில்முறைத் தன்மையையும், தகுதியையும் உயர்த்துவதற்கு கடமைப்பட்டுள்ளது. தொடர்ந்து வழங்கப்படுகின்ற பயிற்சிகள், அங்கீகாரம் மற்றும் தொழில் வளர்ச்சி வாய்ப்புகளை தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதன் மூலம் அதனுடைய பரிசோதகர்கள், பாதுகாப்பு மேற்பார்வை, ஒழுங்குபடுத்தலுடனான இணக்கம், தொழிற்பாட்டுச் சிறப்பம்சம் என்பவற்றில் உயர் தரத்தை உறுதிப்படுத்துகிறது. இந்த முன்னெடுப்புகள் ஊடாக CAASL இலங்கை விமானக் கைத்தொழில்துறை உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி தொடர்ச்சியாக மேம்படுத்தல்களையும், புதிய விடயங்களையும் வழங்குவதில் முன்னணி இடத்தைப் பெறுவதை உறுதி செய்கிறது.

விமானத்துறைச் சேவைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் முன்னனேற்றத்தை ஏற்படுத்தும் எமது கடமையில் ஒரு பகுதியாக நாம் தேசிய விமான தேடல் மற்றும் மீட்புத் திட்டத்தை (NASARP) உருவாக்கியுள்ளது. இத்திட்டமானது, விமானம் மற்றும் கடற்பகுதிகளில் தேடுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைககள் தொடர்பில் ஒருங்கிணைப்பை மேம்படுத்தக் கருதுகிறது. NASARP பங்குதாரர்களுக்கு தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் ஆகிய விடயங்களை சர்வதேச சிவில் விமானத்துறை சமவாயம் மற்றும் கடலில் உயிர் பாதுகாப்பு சமவாயம் மற்றும் கடல் சட்டம் சம்பந்தமான சர்வதேச சமவாயம் போன்ற உடன்படிக்கைகளில் இருக்கக்கூடிய பல்வேறு கடப்பாடுகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

NASARP ஊடாக இலங்கை விமானத்துறை அவசர சூழ்நிலைகளின் போது நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் வினைத்திறனான பதில் அளிக்கும் திறமை என்பவற்றை உருவாக்க இலங்கை எண்ணியுள்ளது. இந்தத் திட்டமானது, CAASL யின் வானூர்த்தி SAR கொள்கையை அமுல்படுத்துவது முக்கியமாகும். இந்த SAR கொள்கை, 2023 ஜனவரி 10 இல் உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இங்கு தேசிய விமானத்துறைத் தேடல் மற்றும் காப்பாற்றுதல் குழு மற்றும் ஏனைய முக்கியமான பங்குதாரர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதனுடைய பிரகடனத்தைத் தொடர்ந்து இத்திட்டம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுடன், அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக நிலுவையில் உள்ளது.

சிவில் விமானத்துறையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

2023 மே மாதத்தில் இலங்கை ICAO USAP - CMA கணக்காய்வில் 92% மதிப்பெண்ணைப் பெற்று குறிப்பிடத்தக்க அடைவு மட்டத்தைப் பெற்றது. இது, விமானத்துறைப் பாதுகாப்பு முறைமைகள் மற்றும் அரச மேற்பார்வை இயலுமை என்பவற்றில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்களைப் பிரதிபலிக்கிறது. ICAO விமானத்துறைப் பாதுகாப்பு நிபுணர்களால் நடத்தப்பட்ட இந்தக் கணக்காய்வு, எமது ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு, தேசியக் கொள்கைகள், விமான நிலையப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நடைமுறைகளை நுணுக்கமாக மதிப்பீடு செய்துள்ளது. இந்த அசாதாரணமான பெறுபேறு, எம்மை ஆசிய பசிபிக் வலயத்திலுள்ள முன்னணி ஒழுங்குபடுத்தல் அமைப்புகளுடன் இணையாக நாங்கள் இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது".

விமானத்துறைப் பாடசாலைகளில் வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, பாதுகாப்பு அனுமதிக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியமை காரணமாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதம அதிகாரி (CNI) ஆகியோருடன் இணைந்து நாம் புதிய அனுமதி பெறும் முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த நெறிமுறைப்படுத்தப்பட்ட செயன்முறையின் கீழ் விண்ணப்பதாரிகள் தமது ஆவணங்களை CNI காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். காரியாலயம் 14 நாட்களுக்குள் தற்காலிக அனுமதியை வழங்குவதன் மூலம் மாணவர்கள் முழுமையான பாதுகாப்பு அனுமதியைப் பெறுகின்ற வரையில் தமது தரைப் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை அங்கீகரித்து, நாம் சுற்றாடல் இடர்களைத் தவிர்த்து, நிலையாதாரத் தன்மையை மேம்படுத்துவதற்கு, பசுமை விமானத்துறைக் கொள்கையைத் தயாரித்துள்ளோம். இந்தக் கொள்கையானது, சுற்றாடல் பாதுகாப்பையும் போட்டித் தன்மையையும் கையாளுகின்ற அதேவேளை, இலங்கையின் விமானத்துறை வளர்ச்சி பற்றிய இலக்குகளையும், வழிகாட்டிகளையும் எடுத்துக்காட்டுகிறது. இக்கொள்கையானது, தேசிய மற்றும் சர்வதேச கடப்பாடுகள் என்பவற்றுடன் இணைந்து செல்வதோடு, அடுத்த 30 வருடங்களுக்கான நிலையாதார வளர்ச்சிக்கான உபாய நுட்பங்களையும் ஆதரிக்கின்றது.

ஹிங்குராக்கொட விமான நிலையத்தை, சர்வதேச தராதரத்திற்கு உயர்த்துவதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில், பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து, விமானத்துறை அமைச்சு CAASL I குறிப்பிட்ட திட்டத்தின் முதலாவது கட்டத்தில் ஹிங்குராக்கொட விமான நிலையத்தில் ஓடுபாதையை அபிவிருத்தி செய்ய தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குமாறு வேண்டியுள்ளது.

எனது வழிகாட்டல்களின் கீழ், எமது சிரேஷ்ட தொழில்நுட்ப பணிக்குழாம், விரைவு வெளியேறு டக்சிவழித் (Taxiways) திட்டத்தை இரண்டாவது ஓடுபாதையை அமைப்பதற்குப் பதிலாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA)அமுல்படுத்துவதற்கான சிபாரிசுகளைச் செய்து, கருத்துக்களைக் கொண்ட ஆவணம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த செலவு குறைந்த மற்றும் நிலையாதார தீர்மானமானது, விமான செயற்பாடுகள், எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் சுற்றாடல் நிலைத்தன்மை என்பவற்றையும், சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் நடந்துகொள்வதையும் உறுதிப்படுத்தும்.

விமான நிலைய கல்விசார் பயிற்சிப் பட்டறையை மேம்படுத்துவதற்காக நாம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை ஒன்றை உருவாக்கியுள்ளோம். இந்த முன்னெடுப்பானது, விமானக் கைத்தொழில்துறை பற்றியும், வேலைவாய்ப்புகள் பற்றியும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துவதாகும். இந்த பயிற்சிப் பட்டறையில் 10 பாடசாலை குழும மாணவர்கள் பங்குபற்றினர். இதற்கான விண்ணப்பங்கள், தேசிய தொலைக்காட்சியினால் விளம்பரப்படுத்தப்படும். இந்தப் பயிற்சிப் பட்டறைகள், நாடு பூராகவும் ஒலிபரப்பப்படுவதுடன், இது, விமானத்துறைக் கல்வி தொடர்பான பரந்த அறிவினையும் வழங்கும்.

அறிக்கையிடும் இக்காலப்பகுதிகளுள் எமது மொத்த வருமானம் ரூபா 5,530.64 மில்லியன் ஆகும். இது, 4,268.30 மில்லியனில் இருந்து அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு, தொழிற்பாட்டு வருமானம் (ரூபா 3,685.22 மில்லியனில் இருந்து (ரூபா 4,267.57 ஆக அதிரித்துள்ளது) மற்றும் தொழிற்பாடு அல்லாத வருமானம் (ரூபா 583.08 மில்லியனில் இருந்து ரூபா 1,263.07 ஆக அதிகரித்தது) இவற்றினால் ஏற்பட்டது.

எமது செலவுப் பக்கத்தைப் பார்க்கையில், நாம் விவேகமான நிதி முகாமைத்துவத்தைக் கையாண்டு, ரூபா 880.54 மில்லியனில் இருந்து ரூபா 973.44 மில்லியன் வரை ஓரளவு அதிகரித்துள்ளோம். குறிப்பாக, பணியாட்களின் செலவு ரூபா 457.97 மில்லியனில் இருந்து ரூபா 432.94 மில்லியனுக்கு ஓரளவு குறைந்துள்ளது. இவ்விடயமானது, நாம் பணிப்படை வினைத்திறனை உச்ச அளவில் பயன்படுத்துவதைக் கவனத்திற் கொண்டுள்ளோம் என்பதைப் பிரதிபலிக்கிறது. பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றின் செலவு ரூபா 7.51 மில்லியனில் இருந்து ரூபா 8.06 மில்லியனாக அதிகரித்துள்ளது. அதேவேளை, பயிற்சிகளுக்கான செலவுகள் ரூபா 1.47 மில்லியனில் இருந்து ரூபா 9.66 மில்லியன் வரை உயர்ந்துள்ளது. இவை, பணியாட்களின் அபிவிருத்தி தொடர்பான எமது கவனத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. நிர்வாக மற்றும் ஏனைய செலவுகளும் ரூபா 260.89 மில்லியனில் இருந்து ரூபா 365.42 வரை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இதேவேளை, தேய்மானம் மற்றும் பதிவழிப்புச் செலவுகள் ஒப்பீட்டளவில் நிலையான இடத்திலுள்ளது. இந்த முதலீடுகள், எமது தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கும், உபாயநுட்ப முன்னெடுப்புகளுக்கும் ஆதரவளிக்க அத்தியாவசியமானதாகும்.

வரிக்கு முன்னரான எமது இலாபம் ரூபா 3,387.76 மில்லியனில் இருந்து ரூபா 4,557.20 மில்லியன் வரை உயர்வடைந்துள்ளது. மேலும், வருமான வரி செலுத்தியதன் பின்னர் இந்தத் தொகை 208.92 மில்லியனாகும். இவ்வருடத்திற்கான ரூபா 2,743.24 மில்லியனில் இருந்து ரூபா 4,348.28 வரை அதிகரித்துள்ளது. எமது தேறிய இலாபம், இந்த அசாதாரமான செயற்திறனானது, எமது மூலோபாய அவதானம், செயற்பாட்டு வினைத்திறன் என்பவற்றையும், எமது முழுப் பணிக்குழாமின் அர்ப்பணிப்புடனான முயற்சிகளையும் எடுத்துக்காட்டுகிறது. நாம் எமது பாதையில் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், பங்குதாரர்கள் அனைவருக்கும் நிலையாதார வளர்ச்சியையும், பெறுமதியையும் தொடர்ந்து வழங்குவதில் உறுதியாக உள்ளோம்.

அதிகரித்து வரும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட மற்றும் போட்டி ரீதியான உலகளாவிய விமானத்துறையில் ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சி என்பன, வளர்ச்சி மற்றும் புதிய விடயங்களைக் கண்டுபிடித்தல் என்பன தொடர்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. CAASL அரசாங்க முகவர் நிறுவனங்கள், கைத்தொழில் பங்குதாரர்கள், சர்வதேச நிறுவனங்கள், கல்வியாளர்கள் ஆகியோருடன் அறிவினைப் பரிமாற்றம் செய்து கொள்ளவும், சிறந்த நடைமுறைகளைப் பங்கிட்டுக்கொள்ளவும் மற்றும் விமானப் போக்குவரத்து முழுவதுமான ஒருங்கிணைப்பை உருவாக்கவும் துடிப்புடன் செயற்பட்டு வருகிறது. உலகளாவிய விமானத்துறை சமூகத்தில் இலங்கையை முன்னணி இடத்தில் தக்க வைத்துக் கொள்வதற்காக CAASL மூலோபாயக் கூட்டணிகள், ஈடுபாட்டுடனான தளங்கள் என்பன ஊடாக இணைப்பை மேம்படுத்தி, புதுமைகளை வளர்த்து கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவித்து வருகிறது.

எதிர்காலத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் நாம், CAASL ஐ பாதுகாப்பு, வினைத்திறன், சிறப்புத் தேர்ச்சி என்பவற்றை இலங்கை விமானத்துறையில் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படும். மூலோபாயத் திட்டமிடல், ஒழுங்கமைப்பு மேற்பார்வை, பங்குதாரர்களுடனான ஈடுபாடு என்பவற்றின் ஊடாக CAASL தொடர்ந்து புதிய விடயங்களை அறிமுகப்படுத்தி, கூட்டு ஒத்துழைப்பை வளர்த்து, அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்காக புதிய வாய்ப்புக்களைத் திறந்து விடும். நிலையாதாரத் தன்மை, தொழில்நுட்பம், புதுமைகள் என்பவற்றைத் தழுவுவதன் மூலம், CAASL இலங்கை விமானக் கைத்தொழில் துறையில் நெகிழ்வுத்தன்மை, போட்டித்தன்மை கொண்டதாக தக்க வைத்துக்கொண்டு, எதிர்வரும் வருடங்களில் வெற்றியை நோக்கிப் பயணிக்கும். முன்னோக்கி வருகின்ற சவால்களையும், வாய்ப்புகளையும் கடந்து, இலங்கை சிவில் விமானத்துறையில் ஒளிமயமான மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவோம்.

இறுதியாக, CAASL இன் இலக்குகளை முன்னேற்றுவதற்கான அவர்களின் அசைக்க முடியாத ஆதரவு மற்றும் அர்ப்பணிப்புக்காக, அரசு நிறுவனங்கள், தொழில் பங்குதாரர்கள், விமானப் போக்குவரத்து வல்லுநர்கள் மற்றும் பரந்த சமூகம் உட்பட அனைத்துப் பங்குதாரர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்துக்கு ஒளிமயமான மற்றும் வளமான எதிர்காலத்தை வடிவமைப்பதில், எதிர்நோக்கியிருக்கும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை நாங்கள் ஒன்றுசேர்ப்போம்.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சர், அமைச்சுக்கான செயலாளர் மற்றும் அமைச்சு சார்ந்த அனைத்து அலுவலர்களின் பங்களிப்பு, வழிகாட்டல், ஒத்துழைப்பு என்பவற்றை மதிப்புடன் அங்கீகரிக்கிறேன்.

பீ.ஏ. ஜயகாந்த்

சிவில் விமானப் போக்குவரத்துத்துறையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை



பணிப்பாளர்கள் சபை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினர்கள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 14வது சபை அங்கத்தவர்கள்

01. திரு. ஜீ.எஸ்.விதானகே
தலைவர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2023.01.14 முதல்

02. திரு. டீ.டப்ளியூ.எஸ்.நாரங்கொட
உப தலைவர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2023.02.22 முதல்

03. எயார் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பீ கொட்டகதெனிய (ஓய்வு நிலை)
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2022.08.12 முதல்

04. கெப்டன் மிலிந்த ரத்நாயக்க
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2022.08.12 முதல்

05. திரு. மங்கள விஜேசிங்க
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2023.01.10 முதல்

06. ஜெனரல் கமல் கருணாரத்ன (ஓய்வு நிலை)
அமைச்சரின் பாதுகாப்பு விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - முன்னாள் அதிகாரி
2019.11.19 முதல்

07. திரு. ஏ.கே.செனவிரத்ன
அமைச்சரின் நிதி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்ட அமைச்சின் பிரதிநிதி
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2022.08.18 முதல்

08. திரு. பீ.ஏ.ஜயகாந்த்
சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை உறுப்பினர் - நியமனம்
2022.08.01 முதல்

04

07

06

01

08

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கண்ணோட்டம்

சுருக்கமான அறிமுகம்

“விமானத்துறையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் அதனுடைய செயற்பாடுகளின் நிலைத்தன்மை, கைத்தொழில் துறையின் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையைப் பேணுதல் என்பதே எமது முதன்மையான நோக்கமாகும்”.

இலங்கையின் விமான சிவில் விமானத்துறை அதிகார சபை என்ற வகையில் (CAASL), நாம் எமது நாட்டில் விமானக் கைத்தொழில் துறையை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துகின்றோம். விமானத்துறையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் அதனுடைய செயற்பாடுகளின் நிலைத்தன்மை, கைத்தொழில் துறையின் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையைப் பேணுதல் என்பதே எமது முதன்மையான நோக்கமாகும். நாம் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், சான்றுப்படுத்தல், உரிமம் அளித்தல், வானூர்த்திகளை மேற்பார்வை செய்தல், வானூர்திச் சேவைகள், பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேற்பார்வை உள்ளடங்கலாக, ஒரு தொகையான நடவடிக்கைகளை எமது பணியில் உள்ளடக்கியுள்ளோம்.

கடுமையான பாதுகாப்பு ஒழுங்கு விதிகளையும், தராதரங்களையும் அமுல்படுத்துவதன் மூலம், நாம் விமானத்துறைக்குள் பாதுகாப்பை உயர்த்துவதோடு, கிரமமான பரிசோதனைகள், கணக்காய்வுகள் என்பனவற்றை நடத்தி, இணக்கச் செயற்பாட்டை உறுதிப்படுத்துகின்றோம். நாம், வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளை உருவாக்குதல் என்ற விடயத்தை மேற்கொள்ள, பொருத்தமான அதிகார சபைகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றோம். இந்த நடவடிக்கைகள், கடுமையான திரையிடல் நடைமுறைகள், மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு முறைமைகள், தொடர்ச்சியான பாதுகாப்புப் பயிற்சிகள் என்பன உள்ளடங்குகின்றன.

ஒட்டுமொத்த வினைத்திறனையும் மேம்படுத்தும் பொருட்டு, நாம் செயன்முறைகளையும், நடைமுறைகளையும் நெறிப்படுத்துவதோடு, விமானப் போக்குவரத்து முகாமைத்துவ முறைமைகளை உச்ச பயன்பாட்டைப் பெறும் வகையில் பயன்படுத்துவதோடு, தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்பங்களையும் அமுல்படுத்தி வருகின்றோம். விமானத்துறையினால் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்பைக் குறைப்பதற்காக நாம் சூழல் நட்புடனான நடைமுறைகள், வினைத்திறனான எரிபொருள் தொழிற்பாட்டுப் பயன்பாடுகள், ஒலி மாசு குறைப்பு மற்றும் சிறந்த கழிவகற்றல் முகாமைத்துவ நுட்பங்கள் என்பவற்றை மேம்படுத்தி வருகின்றோம்.

விலையிடல், போட்டித்தன்மை, சந்தை நுழைவு போன்ற பொருளாதாரம் சார்ந்த அம்சங்களைக் கண்காணித்து, ஒழுங்குபடுத்தி வருகின்றோம். மேலும், நியாயமான மற்றும் போட்டித்தன்மை மிக்க சூழலையும் உறுதிப்படுத்துகின்றோம். பொருளாதார மதிப்பீடுகளை நடத்துதல், சந்தைப் போக்குகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டித்தன்மை, நிலையான வளர்ச்சி என்பவற்றை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை அமுல்படுத்தல் ஆகிய விடயங்களை மேற்கொள்வதன் மூலம், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதோடு, அனைத்துப் பிரசைகளுக்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நாம் தொழிற்படுகின்றோம்.

எமது வகிபாகமானது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டம் என்பனவற்றினால் வரையறை செய்யப்பட்டுள்ளது. எமது வகிபாகமானது, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினால் (ICAO) உறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச தராதரங்கள் மற்றும் நடைமுறைகளுடன் ஒருங்கிணைந்துள்ளது. எமது ஆளுகைக் கட்டமைப்பு, எட்டு (8) சபை உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. மேலும், சிவில் விமானத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஐந்து (5) ஆட்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதியமைச்சின் பிரதிநிதி மற்றும் விமானத்துறையின் செயலாளர் நாயகம் ஆகியோரையும் உள்ளடக்கியுள்ளது. தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ஆகியோர் அமைச்சரினால் நியமிக்கப்படும் அதேவேளை, செயலாளர் நாயகம் அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்படுவார். அவர், பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்பட்டு வருகிறார். நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களினதும் தொழிற்பாட்டுக் காலம் மூன்று (3) வருடங்களாகும்.

எமது விரிவான ஒழுங்கமைப்பு வகிபாகம் ஊடாக நாம் விமானத்துறையை மேம்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்திற்கும், இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கும் பங்களிப்புச் செய்து வருகின்றோம்.



தொலைநோக்கு

அனைவருக்கும் பாதுகாப்பு மிகுந்த ஆகாயத்தை உறுதிப்படுத்தி, வினைத்திறன்மிக்க மற்றும் நம்பகமான விமான சேவைப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்துனராதல்.

எமது செயற்பணி

சர்வதேச தராதரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தேசிய சட்டவாக்கத் தேவைகளுக்கு இணங்க பாதுகாப்பான, திறமையான, கிரமமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் செயற்பாட்டை மூலோபாய திட்டமிடல் மற்றும் பயனுள்ள ஒழுங்குமுறை மூலம் உருவாக்குதல்.

குறிக்கோள்

“அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க ஆகாயம்”

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கண்ணோட்டம்

சுருக்கமான அறிமுகம்

CAASL யின் உடனடியான இலக்குகள்

- வர்த்தக விமானத்துறைக்குள் மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை உயர்த்துதல்.
- சிவில் விமான சேவையில் கடத்தல் மற்றும் சட்டவிரோதத் தலையீட்டைத் தடுப்பதற்கு வலுவான பாதுகாப்பு நெறிமுறைகளை அமுல்படுத்துதல்.
- பொதுவான விமான விபத்துக்களைத் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- விமான நிலைய தரைப்பகுதிகளில் மரணத்தை ஏற்படுத்தக்கூடிய விபத்துக்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.
- பொறியியில் / பராமரிப்புப் பயிற்சிப் பட்டறைகளில் விபத்துக்களைக் குறைக்க பாதுகாப்பு நெறிமுறைகளை மேம்படுத்தல்.
- செயற்திறன்மிக்க நடவடிக்கைகள் ஊடாக பாதகமான விமானத்துறைச் சம்பவங்களைக் குறைத்தல்
- உரிய நேரத்தில் புறப்பாடுகளில் ஏற்படும் தாதமங்களைக் குறைக்கும் வகையில் வினைத்திறனை அதிகரித்தல்
- விமானப் பயண அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் சேவைகளின் தரத்தை உயர்த்துதல்.
- பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, நெரிசலைக் குறைத்து, பயணிகளின் விடயங்களைச் செற்படுத்துவதை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தொழிற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்காக உபாயநுட்பங்களை அமுல்படுத்துதலும், விமானப் போக்குவரத்தில் கழிவுகளைக் குறைத்தலும்
- விமானத்துறையினால் ஏற்படும் பாதகமான சுற்றாடல் தாக்கங்களைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்
- சிவில் விமானத்துறையின் அனுகூலங்களை எடுத்துரைக்க பாடசாலை மாணவர்களுக்கு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல்
- அடுத்த தலைமுறை விமானத்துறைத் தொழில் வல்லுநர்களை உருவாக்க வழிகாட்டித் திட்டங்களை உருவாக்குதல்

நிலைப்பாடு

எமக்கு மேலே உள்ள வான்வெளி, எமது அடிப்படைப் பொதுச் சொத்து ஒன்றாக அமைவதுடன், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை உந்துவதற்கு எடுக்கக்கூடிய செழுமைமிக்க வளம் ஒன்றாகும் என்பதையும் நாம் உறுதியாக நம்புகின்றோம். சிவில் விமானத்துறையின் பாதுகாவலர் என்ற வகையில், நாம் எமது தேசத்தின் வளர்ச்சி மற்றும் செழுமைக்கு உதவுவதற்காக மட்டுமல்லாது, எதிர்கால சந்ததியினருக்கு நீடித்து நிலைத்திருக்கும் வாய்ப்புகளை உருவாக்குவதற்காக விழிப்பான மற்றும் பொறுப்புடன்கூடிய முகாமைத்துவத்திற்காகவும் நாம் பரிந்துரை செய்கின்றோம். விசேடமான முறையில் இந்த வழக்கைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதன் மூலம், நாம் நிகழ்கால சந்ததியினருக்கு மட்டுமல்லாது, எதிர்கால சந்ததியினரின் அபிலாஷைகளுக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் நிலையான விமானச் சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றை உவாக்க எதிர்பார்க்கிறோம்.

குறிக்கோள்கள்

- பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்தலும், பாதுகாப்பு வெளிப்பாட்டு இலக்குகளை அடைதலும்
- போதுமான வளமிடலை உறுதிப்படுத்தல்
- தொழில்முறைத் தன்மையையும் தகுதியையும் பேணுதல்
- பரந்த நம்பகத்தன்மையையும் அங்கீகாரத்தையும் பெறுதல்
- தொடர்ச்சியான அடைவுகளை மேம்படுத்தல்
- அனைத்து நடவடிக்கைகளிலும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- சர்வதேச தராதரங்களுடன் உயர் இணக்கத்தை உறுதிப்படுத்தல்
- சிவில் விமானத்துறையின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கு ஒரு முன்னணி உதவியாளராகப் பணியாற்றுதல்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்

- சிவில் விமானத்துறையின் அரச சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்கி நடத்தலை உறுதிப்படுத்தலும், சர்வதேச தராதரங்களையும், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளையும் கடுமையாகப் பின்பற்றுவதன் மூலம் வினைத்திறனான ஒரு உயர்மட்ட SARPS அமுல்படுத்துகையை அடைதலும்.
- இலங்கை சிவில் விமானத்துறை அமைப்புக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பாதுகாத்தல், தடைகள் அல்லது கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரம் பெறுவதை உறுதிப்படுத்தல் மற்றும் ICAO மூலம் உருவாக்கப்பட்ட ஏதேனும் பாதுகாப்புக் கரிசனைகளைக் கருத்திற்கொள்ளல்.
- பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் மற்றும் தொழிற்பாடுகளின் வினைத்திறனை உயர்த்துதலும், விமானப் போக்குவரத்து முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுத்தலும்
- விமானத்துறைக்குள் நுகர்வோர் திருப்தி மட்டங்களை உயர்த்துதல்
- மூலோபாய முன்னேற்றங்கள் மூலம் அதிகார சபையின் நிதிச் செயற்திறனை மேம்படுத்துதல்.

உபாய நுட்பங்கள்

- பொருத்தமான சர்வதேச தராதரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக, சமூகக் கடமைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை, சட்டரீதியான பணிகளை ஒருசீராக அமுல்படுத்துவதை மேம்படுத்துதலும், உறுதிப்படுத்தலும்
- முக்கியமான விமானத்துறை சவால்களை நிவர்த்தி செய்வதற்கான வினைத்திறனான தீர்வுகளைக் கண்டுபிடித்தலும், அமுல்படுத்தலும்
- அமைப்புக்குள் சாதகமான மாற்றத்திற்காக குறிக்கோளாக்கப்பட்ட கலாசார மாற்றங்களுக்கான முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தல்
- விமானக் கைத்தொழில் துறையிலுள்ள பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பையும், பங்குடமையையும் வளர்த்தல்.
- உள்ளக ரீதியாகவும், வெளியக ரீதியாகவும், பயனுள்ள தொடர்பாடலை மேம்படுத்துவதற்கு வெளிப்படைத் தன்மையுடனும், ஒருசீராகவும் செயற்படுதல்
- அனைத்து ஆவணங்கள், பொருட்கள் மற்றும் உள்ளக நடைமுறைகளில் வினைத்திறனையும், ஒருசீர் தன்மையையும் உறுதிப்படுத்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனையும், பாதுகாப்புத் தராதரங்களையும் மேம்படுத்துவதற்காக புதுமைமிகு தொழில்நுட்பத் தீர்வுகளை அமுல்படுத்தல்
- வளர்ந்து வரும் கைத்தொழில்துறைப் போக்குகளைக் கையாளுவதன் மூலம், சவால்களை எதிர்கொண்டு தொடர்ச்சியான கற்கை மற்றும் தொழில்முறை அபிவிருத்தி என்பவற்றை வளர்த்தெடுக்கும் கலாசாரத்தை உருவாக்குதல்

- சுற்றாடல் தாக்கத்தைக் குறைப்பதற்கான நிலையாதார விமானத்துறை நடைமுறைகளுக்கான வாய்ப்புகளைத் தேடுதல்
- நட்புடன்கூடிய விடயங்களையும், நெறிமுறைப்படுத்தப்பட்ட செயன்முறைகளையும் அமுல்படுத்துவதன் ஊடாக வாடிக்கையாளரின் அனுபவங்களைத் தரமுயர்த்தல்.
- சிறந்த நடைமுறைகளைப் பகிரவும், உலகளாவிய விமானத்துறைத் தராதரங்களை அதிகரிக்கவும், சர்வதேச பங்குதாரர்களுடன் கூட்டுமுயற்சிகளை வளர்த்தெடுத்தல்
- விமானத்துறையில் ஏற்படக்கூடிய எதிர்கால சவால்களைப் பற்றி ஆய்வு செய்யவும், அபிவிருத்தி செய்யவும் முதலீடுகளை மேற்கொள்ளல்.
- தொழிற்பாடுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்களைத் தவிர்க்கவும், தடைகளை நீக்கவும் சாதகமான இடர் முகாமைத்துவ உபாயநுட்பங்களை அமுல்படுத்துதல்
- அதிகூடிய பிரதிநிதித்துவம் மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய விமானப் பணிப்படையை வளர்ப்பதற்கான பன்முகத்தன்மை மற்றும் அனைத்தும் உள்ளடங்கிய முன்னெடுப்புகள் என்பனவற்றைத் தழுவுதல்.
- மேம்பாட்டிற்காக பணியாளர்களின் கருத்துக்கள் மற்றும் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய சூழலை உருவாக்குதல்.

பெறுமதிகள்

- அனைத்து விடயங்களையும்விட விமானத்துறைப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்தலும், பாதுகாப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுத்தலும்
- எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளிலும் சிறந்த சேவையை உறுதிப்படுத்தல்.
- பொறுப்பேற்கும் ஒவ்வொரு பணியிலும் "எம்மால் இயலும்" என்ற மனப்பாங்கினை உருவாக்குதல்.
- எமது நடவடிக்கைகள் அனைத்திலும் நம்பகத்தன்மை, நடைமுறைச் சாத்தியத்தன்மை மற்றும் ஒருசீர் தன்மை ஆகியவற்றை உருவாக்குதல்.
- தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான மாற்றம் என்ற வழிமுறையைத் தழுவுதல்
- சவால்களை எதிர்கொள்ளவும், வெற்றியைப் பெறவும் ஒரு அணியாக ஒன்று சேர்தல்
- வெளிப்படையான, நேர்மையான மற்றும் வெளிப்படைத்தன்மையுடனான தொடர்பாடலைப் பாதுகாத்தல்
- எமது அனைத்து நடவடிக்கைகளிலும் வினைத்திறன், உற்பத்தித் திறன், ஒழுங்குமுறை என்பவற்றை ஊக்குவித்தல்
- அனைத்து சக ஊழியர்களிடையே நம்பிக்கை, மரியாதை மற்றும் குழுப் பணி கலாசாரத்தை உருவாக்குதல்
- ஒவ்வொருவருடைய பங்களிப்பையும் மதித்தலும், பெறுமதியளித்தலும்
- சமூகக் கடப்பாடுகளையும், பொறுப்புக்களையும் பூர்த்தி செய்தல்
- எமது பணியை அனுபவித்தலும் பூர்த்தி செய்தலும்
- தொழில்முறை அணுகுமுறையைப் பேணுவதில் பெருமையடைதல்
- வீடு மற்றும் பணிச்சூழலுக்கிடையே சமநிலை ஒன்றைப் பேணுதல்

வானூர்தித் தளப் பிரிவு

விமானத்தளப் பிரிவு

விமானத் தளப் பிரிவு, பிரதானமாக, இலங்கையில் உள்ள சிவில் விமானங்களுக்குப் பொறுப்பாக இருப்பதோடு, இலங்கையின் சிவில் விமானங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை விடயங்கள் தொடர்பான சிவில் விமானப் போக்குவரத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு (DGCA) உதவி வழங்கும் பிரதான பொறுப்பைக் கொண்டுள்ளது. தற்போது, ஐந்து சிவில் விமானங்கள் சட்ட சேவை வழங்குநரால் செயற்படுத்தப்படுகிறது. அவை இந்தப் பிரிவுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. CAASL யின் சான்றுபடுத்தல் செயன்முறை ஊடாக நான்கு விமானங்கள் சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுள்ளன. இது, விமானத் தொழிற்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனாக நடத்துதலை உறுதிப்படுத்தும் முக்கியமான நடவடிக்கையாகும். தரை விமானங்களுக்கு அப்பால் இந்தப் பிரிவு நீர் வானூர்திகளின் பாதுகாப்பு மேற்பார்வையிலும் தலையீடு செய்கிறது. பதினொரு (11) நீர் வானூர்திகள் தொழிற்பாட்டில் இருப்பதுடன், அவற்றின் தொழிற்பாட்டு அந்தஸ்து மற்றும் நடவடிக்கைகள் கண்காணிப்புச் செயற்பாடுகள் ஊடாக ஒழுங்குபடுத்தப்படுகிறது. சிவில் விமானங்களைச் சூழவுள்ள பரப்புகளில் முகாமைத்துவத்தைச் சுற்றியுள்ள விடயங்கள் மற்றுமொரு பொறுப்பாக அமைகிறது. இப்பொறுப்பு, இந்தப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டிருப்பதோடு, இதன் மூலம் பாதுகாப்பான வானூர்தித் தொழிற்பாடுகளுக்கு எவ்வித தடைகளையும் ஏற்படுத்தாது. அபிவிருத்தித்துறை உட்கட்டமைப்பு விருத்திகளை மேற்கொள்வதுடன், இலங்கையில் அனைத்து விமான நிலையங்களிலும் பயன்பாட்டுக் காரணியை அதிகரிக்கவும் உதவுகிறது. விமானக் கைத்தொழில் துறையை ஒழுங்கமைக்கவும், மேம்படுத்தவும், விமானத்துறை தளப் பிரிவு அமுல்படுத்தக்கூடிய தராதரங்களையும், வழிகாட்டி விடயங்களையும், நடைமுறைகளையும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) பிரசுரங்களுக்கு அமைவாக வடிவமைக்கிறது.

வான் வழிகாட்டல் சேவைப் பிரிவு

வான் வழிகாட்டல் சேவைப் பிரிவின் (ANS) முதன்மைப் பொறுப்பு யாதெனில், கொழும்பு விமானத் தகவல் பிரதேசத்திற்குள் (கொழும்பு FIR) விமானத் தரையிறக்கும் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் உருவாக்குதலாகும். இவை, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) பொருத்தமான சர்வதேச தராதரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்படும். மேலும், இப் பிரிவு, அனைத்துத் தராதரங்களும் இலங்கையில் விமான தரையிறக்கும் சேவை வழங்குநர்களால் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துகிறது.

விமானப் பதிகை மற்றும் வான்தகைமை பிரிவு

ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய, இலங்கையில் சிவில் வானூர்திகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் நியதிகளை உருவாக்கும் பொறுப்பு, விமானப் பதிகை மற்றும் வான்தகைமை பிரிவினைச் சாரும். பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள், தொடர் வான்தகைமை முகாமைத்துவ அமைப்புக்கள், விமானப் பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளிட்டனவற்றுக்கான அனுமதி வழங்குதல் மற்றும் அவற்றைக் கண்காணிக்கும் செயற்பாடுகளையும் இந்தப் பிரிவு தன்னகத்தே கொண்டுள்ளது.

பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் பிரிவு

பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் பணியாளர் உரிமம் பிரிவு (TOPL), சர்வதேச தராதரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாக, சிவில் விமானத்துறையுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு உணர்திறன்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆட்களுக்கும், பயிற்சி நிறுவனங்களுக்கும் உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் சான்றுபடுத்தலுக்கான நடைமுறைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்து, காலத்திற்குக் காலம் புதுப்பித்து வருகிறது. பாதுகாப்பு உணர்திறன் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கு உரிமங்களை வழங்கவும், மீள் மதிப்பீடு செய்யவும், புதுப்பிக்கவும் தேவையான சர்வதேச தராதரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் என்பவற்றுக்கு அமைவாக ICAO இணைப்பு 1 இல் உள்ள விடயங்கள் மற்றும் உள்நாட்டு ஒழுங்குவிதிகளை பயிற்சி நிறுவனங்கள் பின்பற்றுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் சான்றுபடுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு என்பவற்றுக்கு இது பொறுப்பாகும்.

ஐந்து பிரதான பணிசார் துறைகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு விடயங்களை இப்பிரிவு மேற்கொள்கிறது. அவையாவன - ஒழுங்குபடுத்தல், உரிமம் வழங்குதல், பயிற்சியளித்தல், பரீட்சைகளை நடத்துதல் மற்றும் நிர்வாகம் என்பனவே அவையாகும். CAASL யின் TOPL பிரிவு, விமானப் பணியாட்களுக்கு உரிமம் அளிக்கும் பொறுப்பையும், விமானத்தைப் பராமரிக்கும் ஆட்கள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள், விமான நிலைய தொழிற்படுநர்கள், விமான சேவை தொழிற்பாட்டு அலுவலர்கள் ஆகியோருக்கு உரிமம் அளிக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது. மேலும், விமானப் பணிப்படை, உரிமங்கள், விமானப் பராமரிப்பு உரிமங்கள், விமான விநியோக உரிமங்கள் என்பனவற்றை வழங்குவதற்கு அறிவுசார் பரீட்சைகளை நடத்துகிறது. மேலும், இப்பிரிவு, பயிற்சி நிறுவனங்கள், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பயிற்சி அமைப்புகள் மற்றும் விமான விநியோகப் பயிற்சி அமைப்புகள், விமானக் கண்காணிப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அமைப்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சான்றுபடுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. மேலும், TOPL இனால் வழங்கப்படுகின்ற உரிமங்களுக்கும் இப்பிரிவே பொறுப்பாகும். இதனைவிட, TOPL பிரிவு விபத்து ஒன்று நடைபெறும் பொழுது விசாரணைக்கான ஒத்துழைப்பு அல்லது உதவிகளை வழங்கவும் அழைக்கப்படலாம்.

விமான செயல்பாடுகள் பிரிவு

கொழும்பு விமான தகவல் பிராந்தியத்திற்குள் (கொழும்பு FIR) வான்வழிகாட்டல் சேவையை நிர்வாகம் செய்வது குறித்த விதிகள், ஒழுங்குவிதிகள் ஆகியனவற்றை உருவாக்குவதே வான்வழிகாட்டல் சேவைப் பிரிவின் அடிப்படைப் பொறுப்பாகும். பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட (ICAO) சர்வதேச தரநிர்ணயங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் (SARP) என்பனவற்றை பின்பற்றுவதுடன், இலங்கை வான்வழிகாட்டல் சேவை வழங்குனர்களினால் இந்தத் தர நிர்ணயங்கள் அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்தலும் இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

வான்பயண பாதுகாப்புப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்காக அனைத்து பன்னாட்டு குடிசார் வான்பயண பாதுகாப்புத் தரநிர்ணங்களையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், தேசிய சிவில் விமான போக்குவரத்து பாதுகாப்புத் திட்டத்தின் மேம்பாடு, பராமரிப்பு மற்றும் அமுல்படுத்தும் பணிகளை முதன்மை நோக்கமாக கொண்டு வான்பயண பாதுகாப்புப் பிரிவு செயற்பட்டு வருகிறது.

வானூர்தித் தளப் பிரிவு



வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பெருநிறுவன முகாமைத்துவப் பிரிவின் கீழ் வான்போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குமுறைப் பிரிவு செயற்படுகின்றது. இலங்கை விமானப் போக்குவரத்துத் துறையை ஒழுங்குபடுத்துவதே இந்த பிரிவின் பொறுப்பாகும்.

மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு சரியான ஆளணி வளத்தை நியமித்துள்ளதனை மனிதவள மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு (HRPM) உறுதி செய்கின்றது. அதிகார சபையில் தனிநபர்கள், ஊழியர் குழுக்களை வளர்ச்சியடையச் செய்வதற்கும், முன்னேறுவதற்கும் வழிவகுத்து ஊக்குவிக்கும் வாய்ப்புக்களை உருவாக்குகிறது. அதிகார சபையின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அலுவலக நிர்வாகத்துக்கும் இந்தப் பிரிவே பொறுப்பாகச் செயற்படுகின்றது.

நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அல்லது அரசாங்க கொள்கைகள், விதிகள், நடைமுறைகளுக்கு அமைய வரையறுக்கப்பட்ட நிதியியல் வளங்களைக் காத்திரமாகவும், வினைத்திறனாகவும் பொருளியல் ரீதியாகவும் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவினைச் சாரும். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை வெளியிட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கியல் கோட்பாடுகள், கணக்கீட்டு நியதிகள் என்பனவற்றுக்கு அமைவாக, கணக்குப் புத்தகங்களைப் பேணுதல் மற்றும் நிதியியல் கணக்குகளின் மெய்யான நிலைமையை வழங்குதல் ஆகியனவும் இந்தப் பிரிவின் பொறுப்புக்களாகும்.

சுற்றாடல், ஆய்வு மற்றும் செயற்திட்டப் பிரிவு

சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்திட்டப் பிரிவானது, விமானப் போக்குவரத்து தொடர்பான ஆய்வுகளை நடத்துதல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை புள்ளிவிவரத் திட்டத்தை நிர்வகித்தல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை நிகழ்வுகளை நடத்துதல், பௌதீக உட்கட்டமைப்பு மேம்பாடுகள், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை ஆவணங்கள், அறிக்கைகள், இதழ்களை வெளியிடுதல் மற்றும் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கான கார்பன் உமிழ்வு மற்றும் குறைப்பு (CORSIA) திட்டத்தைச் செயற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதோடு, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கான அனைத்து கொள்முதல்களையும் கையாளுகிறது.

தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் (ICT) பிரிவு

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் வர்த்தக மற்றும் சேவைத் தேவைகளுக்கான காத்திரமான, பாதுகாப்பான, நம்பகமான, பேண்தகு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வழங்குதல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பாகும்.

சட்டவிவகார மற்றும் அமுலாக்கல் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் சட்ட மற்றும் அமுலாக்கல் பணிகளைச் சீரமைப்பதனை பிரதான நோக்கமாக கொண்டு, சட்ட விவகார மற்றும் அமுலாக்கல் பிரிவு (LA&E) இயங்குகின்றது. பன்னாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஒப்பந்தங்களின் அங்கீகாரம் / அணுகலுக்குப் பொறுப்பாகவும், வான்போக்குவரத்து முதன்மை மற்றும் துணைச் சட்டங்களின் மதிப்பாய்வு, மேம்பாடு, இற்றைபடுத்தல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் அமுலாக்கல் கொள்கை மற்றும் திறனை வலுப்படுத்தல், இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல் ஆகியன சட்ட விவகார மற்றும் அமுலாக்கல் பிரிவின் முதன்மைப் பொறுப்புக்களாகும்.

தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் இடர் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறை என்பன காத்திரமான முறையில் இயங்குகின்றன என்பதனை தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு சுயாதீனமாக உறுதி செய்வதோடு, தேவையான தர தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதனையும் உறுதி செய்கின்றது.

வான்பயண பாதுகாப்பு கண்காணிப்புப் பிரிவு

விமான விபத்துகள், விபத்துக்கள் குறித்த விசாரணைகள் தொடர்பாக அரசாங்கத்தின் கடமைகளை உறுதி செய்வதும், ICAO இணைப்பு 13 மற்றும் இணைப்பு 19 என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச தரநிர்ணயங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய தேசிய பாதுகாப்புத் திட்டத்தைச் (SSP) செயற்படுத்தலும், நாட்டுக்குள் ஆளில்லா விமான செயற்பாடுகளை ஒழுங்கு நெறிப்படுத்துவதும், வான்பயண பாதுகாப்புக் கண்காணிப்புப் பிரிவினைச் சாரும்.

சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்பு மற்றும் ஊடகப் பிரிவு

பொதுமக்கள் மத்தியில் குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் உட்பட இளைய தலைமுறையினர் மத்தியில் தற்போதைய மற்றும் மிகவும் நம்பகமான புதிய ஊடக தளங்கள் மூலம் விமானப் போக்குவரத்து அறிவை மேம்படுத்துதல், விமானப் போக்குவரத்து தொடர்பான செய்திகளுடன் சமூகத்தைப் புதுப்பித்தல் மற்றும் CAASL இன் செயற்பாடுகளை இலத்திரனியல் அச்சிடப்பட்ட மற்றும் ஊடாக ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் இலங்கையில் விமானப் போக்குவரத்துக் கலாசாரத்தை உருவாக்குதல் சிவில் விமானப் போக்குவரத்து ஊக்குவிப்புப் பிரிவின் பொறுப்பாகும்.

வான்மருத்துவ சேவைப் பிரிவு

வான்மருத்துவ சேவைப் பிரிவானது, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உரிமம் வைத்திருப்பவர்களின் மருத்துவ மதிப்பீட்டிற்கான வசதிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஏனைய முக்கிய சிறப்புத் துறைகளான வான்மருத்துவப் பயிற்சி, ஆராய்ச்சி, ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களிடையே வான்மருத்துவ விழிப்புணர்வை உருவாக்குதல், நுழைவுப் பகுதிகளில் பொதுச் சுகாதார சேவைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஏனைய பிரிவுகள், வாடிக்கையாளர்கள், ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்களுடன் எளிதாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மேலும், வான்மருத்துவப் பிரிவானது, தேசிய மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கு வான்பாதுகாப்புத் தீர்வுகள் மற்றும் பொதுச் சுகாதார பாதுகாப்பு தீர்வுகளைத் தொடர்ந்து வழங்குகிறது. வான்மருத்துவ சேவைப் பிரிவின் அனைத்து அம்சங்களும் வான்வெளியில் பாதுகாப்பை உறுதி செய்வதை இன்றியமையாத இலக்காகக் கொண்டுள்ளன.

தொழில்நுட்ப நூலகப் பிரிவு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகமானது, உள்ளக ஆவணங்களை நிர்வகித்தல், ICAO வெளியீடுகள், நடைமுறை ஒழுங்குவிதிகள், அரசாங்க வெளியீடுகள், அதிகார சபையினதும், ஏனைய உள்ளூர் வான் போக்குவரத்துத் துறையினரதும் பொது ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தரவுப் பரிமாற்றல் செய்யும் பொறுப்புக்களை வகிக்கின்றது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரபூர்வ இணைய தளத்தினை நிர்வகித்தல் மற்றும் உள்ளடக்க முகாமைத்துவம் ஆகிய பணிகள் தொழில்நுட்ப நூலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம், பொதுமக்களுக்கு தகவல்கள் வழங்கப்படுகின்றன. ICAO மற்றும் APAC என்பனவற்றுடன் கடிதப் போக்குவரத்தினை முகாமைத்துவம் செய்தல், அகில பாதுகாப்பு கண்காணிப்பு கணக்காய்வு திட்டத்தினை நிர்வாகம் செய்தல், கடிதங்களை அனுப்பி வைத்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் சார்பில் தொடர்ச்சியாக கண்காணிப்பு (USOAP-CMA) நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

செயற்பாட்டு நிறுவனக் கட்டமைப்பு - முகாமைத்துவப் பணியாளர்கள்




Deputy Director General (DDG 3) (Corporate Management)
Deputy Director General (DDG 4) (Aviation Security Regulation)
Director (D 7) (Finance & Revenue Management)
Director (D 9) (Air Transport & Economic Regulation)
Director (D 8) (Aviation Security)
Director (D 10) (Environment, Research & Project)
Director (D 11) (Quality & Internal Audit)
Mgr 22 (Budgeting & Pro.)
AM 32 (Budgeting & Pro.)
Mgr 23 (Financial Ops.)
AM 33 (Financial Ops)
Mgr 24 (Air Serv. & Tffic Rt)
AM 34 (Air Serv. & Trffic Rt)
AM 35 (Air Transport Serv.)
SCAI 25 (Airport Security)
CAI 36 (Airport Security)
SCAI 26 (Airline Security)
CAI 37 & 38 (Airline Security)
CAI 39 & 40 (Av Sec Standards)
Mgr 27 (Research Dev. & Plan.)
AM 41 (Stat. & Forecasting)
AM 42 (Planning)
AM 43 (CA Promotion)
AM 44 (Sp. Programmes)
Mgr 28 (ICT)
AM 45 (ICT)
Mgr 29 (Legal Affairs & Enf)
AM 46 (Legal Affairs & Enf.)
AM 47 (International Relations)
Coordination Officers 51, 52 53 & 54
Mgr 30 (In Audit & Qlty Sur)
AM 48 (In Audit & Qlty Sur)
Mgr 31 (Aviation Safety Mon)
AM 49 (Aviation Safety Mon)
50 PA – Chm/ Board
Mgr 32 Exe Asst to DGCA
Legends
SCAI – Senior Civil Aviation Inspector
Mgr. – Manager
CAI – Civil Aviation Inspector
AM – Assistant Manager
Rev 03 – 09/07/2023

நீல வானில், பசுமை இலக்குகள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆளுகையும் பொறுப்புடைமையும்

	பக்கங்கள்
அதிகார சபையின் குழுக்கள்	27
அதிகார சபையின் வகிபாகம்	28
அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள்	28
சபை உறுப்பினர்கள்	28
பணிப்பாளர் சபையும் ஆளுகையும்	28
பங்குதாரர்களுடனான உறவுகள்	28
அதிகார சபையின் பொறுப்புக்களும் சிரேஷ்ட முகாமைத்துவமும்	28
பொறுப்புக்கூறல்	29
அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடு	29
தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு	29
சட்டவாக்க இணக்கம்	30
சட்ட விவகாரங்களும் அமுலாக்கல் நடவடிக்கைகளும்	30
ஒழுக்கவிதி	31

அதிகார சபையின் குழுக்கள்

பணியாட்கள் குழு

நோக்கம் : CAASL யினுள் மனிதவளங்கள், நிறுவன அபிவிருத்தி மற்றும் பணியாட்களின் நலன்புரி தொடர்பான விடயங்களை மேற்பார்வையிடுவதற்கு பணியாட்கள் குழு பொறுப்புடையதாகும்.

உள்ளடக்கம் : குறிப்பிட்ட குழு திரு. ஜீ.எஸ்.விதானகே அவர்களால் தலைமை வகிக்கப்படுவதோடு, இக்குழுவில் திரு. பீ.ஏ. ஜயகாந்த் மற்றும் திரு. டீ.டப்ளியூ.எஸ். நாரங்கொட ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

பொறுப்புகள் : பணியாட்கள் குழுவின் பொறுப்புகள், சம்பளங்களையும் ஆளணியையும் தீர்மானித்தல், ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான விடயங்களைக் கையாளுதல், ஒழுக்காற்று நடபடிகளை விருத்தி செய்தல், மேற்பார்வைப் பயிற்சி நிகழ்ச்சிகளைக் கண்காணித்தல், பணியாட்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சிகளையும், புலமைப் பரிசில்களையும் அங்கீகரித்தல் மற்றும் CAASL ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டங்களை விருத்தி செய்தல் என்பனவாகும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

நோக்கம் : கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, CAASL க்குள் நிதி முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வுப் பணிகளுக்குப் பொறுப்புடையதாகும்.

உள்ளடக்கம் : குறிப்பிட்ட குழு ஏ.கே.செனவிரத்தின (ஓய்வு பெற்ற) அவர்களால் தலைமை வகிக்கப்படுவதோடு, ஏ.வீ.எம். எச்.எம்.எஸ்.கே.பீ. கொட்டகதெனிய, கெப்டன் மிலிந்த ரத்நாயக்க, திருமதி எம்.எஸ்.குணதிலக மற்றும் திருமதி அச்சல பெரேரா ஆகியோர் அவதானிப்பாளர்களாக உள்ளனர்.

பொறுப்புகள் : இக்குழு, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தல், செலவுகளை வினைத்திறனாக உறுதிப்படுத்துவதற்கு செயற்திறனை மதிப்பீடு செய்தல், வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளல், இணக்கத்திற்கான நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், கணக்காய்வு அறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தல் மற்றும் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கான அறிக்கைளைத் தயாரித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

திட்டமிடல் குழு

நோக்கம் : திட்டமிடல் குழு, மூலோபாயத் திட்டமிடல், கொள்கை விருத்தி மற்றும் இலங்கையிலுள்ள சிவில் விமானத்துறை நிகழ்ச்சிகள் மற்றும் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும்.

உள்ளடக்கம்: : குறிப்பிட்ட குழு, ஓய்வுபெற்ற திரு. ஏ.வீ.எம். எச்.எம்.எஸ்.கே.பீ. கொட்டகதெனிய அவர்களினால் தலைமை வகிக்கப்படுவதோடு, கெப்டன் மிலிந்த ரத்நாயக்க மற்றும் திரு. மங்கள விஜேசேகர ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

பொறுப்புகள் : திட்டமிடல் குழு, தேசிய சிவில் விமானத்துறைக் கொள்கை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை விருத்தி செய்தல், சிவில் விமானத்துறை தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்தல், விமானத்துறைப் பாதுகாப்பு மற்றும் விமானத்துறைப் போக்குவரத்து வசதியாக்கல் நிகழ்ச்சிகளில் அமுல்படுத்துகையை மேற்பார்வை செய்தல், சிவில் - இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், வானூர்த்திச் சேவைத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் விமானத்தள சேவை வழங்குநர்களைக் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

CAASL யின் ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல்

அதிகார சபையின் வகிபாகம்

அதிகார சபையின் பிரதான வகிபாகம் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது, எனினும் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை குறித்த திட்டமிடல்களின்போது கௌரவ சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்க பங்குதாரர்களின் கருத்துக்கள் பிரதிபலிக்கப்படுவதனை உறுதி செய்யும் வகையிலான தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் கொள்கைகள் மற்றும் இலக்குகளை நிர்ணயம் செய்தல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அதன் நிறுவன செயற்திறனைக் கண்காணித்தல், சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் அரசாங்கத்தின் குறிக்கோள்களைப் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பெருநிறுவன திட்டத்தைப் புதுப்பித்தல்.
- பிரதம நிறைவேற்று அலுவலர் பதவியையும் வகிக்கும், சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திடமும், சபை உறுப்பினர்களிடமும் இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின், குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கான பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
- திறமையான, தகுதியான ஊழியர்களை பணிக்கு அமர்த்தல் மற்றும் அவர்களுக்கான ஊதியத்தை நிர்ணயம் செய்தல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொழிற்பாடுகள், கடமைகளை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் என்பனவற்றை நிர்ணயித்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பெருநிறுவனத் திட்ட அமுல்படுத்துகையை நோக்கிய சிவில் விமானப் போக்குவரத்துத் திட்டம் மற்றும் முன்னேற்றம் என்பனவற்றில் கௌரவ சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சருக்குப் பொறுப்புக்கூறல்.

சபையின் உறுப்பினர்கள்

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து கௌரவ அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு உறுப்பினர்களை நியமித்தார். திரு. ஜீ.எஸ். விதானகே மற்றும் திரு. டீ.டப்ளியூ.எஸ். நாரங்கொட ஆகியோர் முறையே தலைவர் மற்றும் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர்கள் சபை மற்றும் ஆளுகை

CAASL யின் பணிப்பாளர்கள் சபை, வர்த்தகம், நிர்வாகம், நிதி, சட்டம் மற்றும் விமானக் கைத்தொழில்துறை தொடர்பாக விரிவான தொழிற்திறனையும், நிபுணத்துவத்தையும் கொண்ட தொழில் வல்லுநர்களை உள்ளடக்குகிறது. இந்த விரிவான நிபுணத்துவமும், திறன்களும் ஒன்றிணைந்து, சிவில் விமானத்துறை தொடர்பான கொள்கைசார் விடயங்களை விரிவாக அணுகுவதை உறுதிப்படுத்துகிறது.

நியமனத்தைத் தொடர்ந்து, சபை உறுப்பினர்கள் கூட்டிணைந்த தீர்மானம் மேற்கொள்ளலுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கு அழுத்தம் கொடுத்து, அதிகார சபையின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றனர். அத்துடன், தனிப்பட்ட உறுப்பினர்கள் எவரும் சபைக்கு வெளியே சுயாதீன ஆளுகை அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை.

வினைத்திறனான கொள்கைகளையும், நடைமுறைகளையும் அமுல்படுத்துவதன் ஊடாக அதிகார சபை CAASL இன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அவசியமான அதிகாரங்களையும், பணிகளையும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அதிகார கையளிப்பு மூலம் வழங்கியுள்ளது. முழு வருடத்திற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வருடாந்த வேலைத் திட்டம், பயிற்சித் திட்டம், கொள்முதல் திட்டம், திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம், கணக்காய்வுத் திட்டம் என்பவற்றின் மூலம் அதிகார சபையின் மூலோபாயப் பாதை ட்ரீமியம் கோப்பரேட் (Triennium Corporate) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், அதிகார சபை, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்படாத விடயங்களுக்காக சபைத் தீர்மானங்கள் ஊடாக பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு வழிகாட்டிகளை வழங்கும். பிரதம நிறைவேற்று அதிகாரி இந்த விடயங்களை நிறைவேற்ற பொறுப்புடையவராவார்.

அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள்

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானத்துறை அதிகார சட்டத்தின் கீழ் அமைச்சரவை அமைச்சர்கள், சிவில் விமானத்துறையின் செயலாளர் நாயகத்தை நியமிக்க பொறுப்புடையதாகும். செயலாளர் நாயகம், அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பொறுப்பை வகிப்பார். செயலாளர் நாயகத்தின் பணி தொடர்பான நியதிகளும், நிபந்தனைகளும் அமைச்சரவை அமைச்சர்களினால் உருவாக்கப்படும். இந்த வகிபாகம் தொடர்பாக செயலாளர் நாயகம் இலங்கை சிவில் விமானத்துறை அதிகார சபை சட்டம் அல்லது ஏனைய ஏதேனும் பொருத்தமான எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அவருக்கு வழங்கப்படும் அனைத்துக் கடமைகளையும், பணிகளையும் நிறைவேற்ற பொறுப்புடையவராவார். இது, அதிகார சபையின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் பணிகளை முகாமைத்துவம் செய்தல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு செயலாளர் நாயகம் நிறைவேற்ற வேண்டிய சட்டப்பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான ஒப்புதலை அதிகார சபை வழங்கும். எனினும், இந்தக் கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்ற அதேவேளை, செயலாளர் நாயகம், CAASL யின் வளங்களைப் பயன்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார். ஆயினும், இத்தகைய பயன்பாடானது, சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் வழிகாட்டிகளுடன் இணங்க வேண்டும். இந்த ஏற்பாடானது, செயலாளர் நாயகம், அதிகார சபையின் தொழிற்பாடுகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்தும் அதேவேளை, சட்டரீதியான தேவைப்பாடுகள் மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்தும்.

பங்குதாரர்களுடனான உறவுகள்

சபை அதன் பங்குதாரர்களுடன் தொடர்ச்சியான உறவுகளைப் பேணுதலுக்கான முக்கிய பொறுப்பையும், பயனுள்ள ஈடுபாட்டையும் அங்கீகரிக்கிறது. இந்த அர்ப்பணிப்பானது, சிவில் விமானத்துறைக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் உருவாக்கப்படும் மூலோபாய இலக்குகள் மற்றும் ஒழுங்கமைத்தல் தேவைப்பாடுகள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து செல்வதை உறுதிப்படுத்தும்.

அதிகார சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் வினைதிறனான தொழிற்பாடுகளுக்கு அடிப்படையானது யாதெனில், பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமையிலான சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும், அதிகார சபைக்கும் இடையிலான வகிபாகம் தொடர்பிலான தெளிவான வரையறைகளேயாகும்.

உயர்மட்டக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வகுத்தலிலும், அந்த நோக்கங்களை அடைகின்றதா என்பதைக் கண்காணித்தலிலும் அதிகார சபை கவனம் செலுத்துகிறது. தற்போதைய கொள்கைகளில், ஒழுங்குமுறைகளில் அல்லது நெறிமுறைகளில் எந்த இடத்தில் குறிப்பிட்ட சில நடைமுறைகள் இருக்கக்கூடாது என்பதான வழிகாட்டல்களை அதிகார சபை வழங்குகின்றது.

இந்த உயர்மட்டக் கொள்கைகள், மூலோபாயங்கள் என்பவற்றை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கான பொறுப்பு பிரதம நிறைவேற்று அதிகாரி தலைமையிலான சிரேஷ்ட முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வான்பயண வழிகாட்டல் ஒழுங்குமுறைகள் அல்லது எழுதப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின்படி, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கான ஒழுங்குமுறைக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்புக்களை அதிகார சபை பகிர்ந்துகொள்ளாது.

எவ்வாறெனினும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு அமைய, ஒழுங்குபடுத்தல், கடப்பாடுகள், தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சிவில் விமானப் போக்குவரத்து சேவை பணிப்பாளர் நாயகத்துக்குத் தேவையான சகல அத்தியாவசிய வளங்களையும், உதவிகளையும் அதிகார சபை வழங்கும். குறிப்பாக, ஆளணி, கருவிகள், வசதிகள், சேவைகள் உள்ளிட்டன மட்டுமன்றி தேவையான சகல உதவிகளையும் அதிகார சபை வழங்கும்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், தொழிற்பாடுகளை ஒப்படைப்பதன் மூலமும் அவர்களின் வகிபாகத்தை அதிகார சபை தெளிவாக விளக்கியுள்ளது.

பொறுப்புடமை

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை, சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றதா, சரியாக நிர்வகிக்கப்படுகின்றதா, கணக்காய்வு செய்யப்படுகின்றதா என்பதனை உறுதி செய்யவும், மூலோபாயக் குறிக்கோள்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அதிகார சபையும், அதன் குழுக்களும் அடிக்கடி சந்தித்து கூட்டங்களை நடத்தி வருகின்றது. மூலோபாய வழிமுறைகள் மற்றும் பெருநிறுவன திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள் என்பன அதிகார சபையின் கொள்கைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுகின்றதா என்பது கண்காணிக்கப்படுகின்றது.

அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடு

அதிகார சபை அக்கறை தொடர்பான பதிவேடு ஒன்றைப் பேணி வருகிறது. இப்பதிவுப் புத்தகமானது, அதிகார சபையின் உறுப்பினர்கள் அனைவரும் அக்கறைகள் தொடர்பான தமது வெளிப்பாட்டை மேற்கொள்ளும் கடப்பாட்டை அறிந்துகொள்வதை உறுதிப்படுத்தும். இந்த அணுகுமுறையானது, சபை உறுப்பினர்கள் மற்றும் CAASL யின் அனைத்து உறுப்பினர்கள் ஆகியோருக்காக அக்கறைகளுக்கு இடையிலான முரண்பாடு தொடர்பான பதிவேட்டைப் பேணுவதன் மூலம் பிரதிபலிக்கப்படுகிறது.

தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபை, அதன் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு, கொள்கை முறைமைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளகக் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதிகார சபையும், சிரேஷ்ட முகாமைத்துவமும் விதிமுறையாக தமது பொறுப்பை குறிப்பிட்ட அறிக்கைக்குள் வழங்கப்படுகின்ற பொறுப்புக் கூற்று மூலம் உறுதிப்படுத்துகின்றன.

இந்தக் கடமையை அமுல்படுத்துவதற்கு அதிகார சபை கடமை உணர்ச்சியுடன்கூடிய தரம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்றை ஸ்தாபித்துள்ளது. இப்பிரிவானது. சிரேஷ்ட முகாமைத்துவத்தில் இருந்து சுயாதீனமாக செயற்படுகின்றது. இந்தப் பிரிவானது, CAASL யின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் வினைத்திறன் மற்றும் வலு என்பவற்றையும் கண்காணித்து மதிப்பீடு செய்யும் முக்கியமான கடமையை ஆற்றி வருகிறது.

CAASL உயர் தரத்திலான ஆளுகை, இடர் முகாமைத்துவம், இணக்கம் என்பவற்றைப் பேணுவதன் முக்கியத்துவத்திற்கு அழுத்தம் கொடுக்கிறது. இந்தப் பிரிவானது. உள்ளகக் கணக்காய்வை நடத்தவும், நிறுவனத்தின் அனைத்து தொழிற்பாடுகளிலும் தரம் உறுதிப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளது. இப்பிரிவு, செயலாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு வருகிறது.

ஓரேபார்வையில் உள்ளகக் கணக்காய்வுச் செயற்திறன் - வருடம் 2023



CAASL யின் ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல்

சட்ட இணக்கம்

அனைத்து சட்டங்களுடன் நிறுவனம், இணங்கி நடக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது என்பதை அதிகார சபை ஒப்புக் கொண்டுள்ளது. அதிகார சபையானது, இணக்கம் தொடர்பான விடயங்களை முறையாக இனங்காண்பதற்கான திட்டம் ஒன்றை விருத்தி செய்யவும், தொழிற்பாட்டுக்குக் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்க சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பைக் கையளித்துள்ளது. மேலும், அதிகார சபை, அனைத்து தொழிலாளர்களும் தமக்குப் பொருத்தமான சட்டவாக்கத் தேவைப்பாடுகளை அறிந்துகொள்வதையும் உறுதிப்படுத்துகிறது.

ஒவ்வொரு விடயத்திற்காகவும், அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பொதுவான அல்லது விசேட சுற்றறிக்கை அல்லது வழிகாட்டிகளைப் பிரயோகிப்பதற்கான தீர்மானங்களை அதிகார சபை மேற்கொள்கிறது. எனவே, அரசாங்க திணைக்களத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு சுற்றறிக்கையும், CAASL யின் முகாமைத்துவத்தினால் தன்னியக்கமாகப் பிரயோகிக்கப்படாது. மாறாக, அதிகார சபை, குறிப்பிட்ட சுற்றிக்கையின் உள்ளடக்கம், அதிகார சபையின் நெறிமுறையான அதிகாரங்களையும், பணிகளையும், கடமைகளையும் நிறைவேற்ற, தேவையான அத்தகைய பிரயோகங்களின் இயல்பையும், எல்லையையும் தீர்மானிக்கும்.

CAASL க்குள் அரசாங்க சுற்றறிக்கைகளின் தொழிற்பாட்டின் பிரயோகத்தை விரிவாக்குவதற்காக புதுப்பிக்கப்படுகின்ற சுற்றறிக்கையின் அட்டவணை ஒன்றைப் பேணுகின்ற பொறுப்பை CAASL இன் கூட்டுறவு விவகார மற்றும் பொருளாதார ஒழுங்குபடுத்தல் பிரிவு கொண்டுள்ளது.

சட்ட விவகாரங்களும் அமுலாக்க நடவடிக்கைகளும்

2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) வான்வழியாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கான சட்டம்

இந்தச் சட்டம், அதன் தாய் சட்டமான 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வான்வழி பொருட்களை எடுத்துச் செல்லும் சட்டத்தின் பிரிவு 5 க்கான திருத்தமாகும். இத்திருத்தம், சிவில் விமானத்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வான்வழி ஊடாக சர்வதேச பொருட்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்து, உள்நாட்டுப் பொருட்களை வான்வழி ஊடாக எடுத்துச் செல்வது தொடர்பான பொருத்தமான பொறுப்பு மட்டுப்பாடுகள் தொடர்பில் இதன் எல்லைகளை வர்த்தமானி ஊடாக காலத்திற்குக் காலம் பிரசுரித்து குறித்துரைக்கும் பொறுப்பை வழங்கியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சிவில் விமானத்துறைச் சட்டம்

இந்தச் சட்டம் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டத்தின் பிரிவு 6(3)(e) இனைத் திருத்தியுள்ளது. இந்தத் திருத்தம் மூலம், பிரிவு 31 இன் (i), (j), (k), (l), (m) ஆகியவற்றின் கீழ் வானூர்தி சேவைகளுடன் தொடர்புடைய சேவை வழங்குநர்களை நியமிக்கும் அதிகாரம் மீது சட்டரீதியான மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சிவில் விமானத்துறை (வானூர்திகளின் பயன்பாடு தொடர்பான சட்டம்) ஒழுங்குவிதிகளின் பிரகடனம் 2022 (2022.10.26 ஆம் திகதிய 2303/18 இலக்க மேலதிக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்). BIA, MRIA மற்றும் CIAR ஆகிய விமான நிலையங்களில், வானூர்திகளின் தரையிறக்கம் மற்றும் நிறுத்துவதற்கான கட்டணங்கள் தொடர்பாக எடுத்துரைக்கிறது.

சிவில் விமானத்துறை (வானூர்திகளின் பயன்பாடு தொடர்பான சட்டம்) ஒழுங்குவிதிகளின் பிரகடனம் 2022 (2022.11.02 ஆம் திகதிய 2304/46ஆம் இலக்க மேலதிக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்

இந்த ஒழுங்குவிதியானது, JIA யின் வானூர்திகளின் தரையிறக்கம் மற்றும் நிறுத்துவதற்கான கட்டணங்களை எடுத்துரைப்பதோடு, 2023.03.31 வரை BIA யில் அமுலாகியுள்ள தரை இறக்கம் மற்றும் நிறுத்துவதற்கான கட்டணங்களைத் தள்ளுபடி செய்துள்ளது.

சிவில் விமானத்துறை (வானூர்திகளின் பயன்பாடு தொடர்பான சட்டம்) ஒழுங்குவிதிகளின் பிரகடனம் 2022 (2023.02.07 ஆம் திகதிய 2318/14 ஆம் இலக்க மேலதிக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்

BTIA யில் தரையிறக்கம் மற்றும் நிறுத்துவதற்கான கட்டணங்களைக் குறித்துரைக்கிறது.

2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நீர் வானூர்தி ஒழுங்குவிதிகளின் பிரகடனம் (2022.08.09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அரசாங்க மேலதிக வர்த்தமானி பிரசுரம்)

இந்த ஒழுங்குவிதியானது, இலங்கையில் நீர் வானூர்திகளுக்காக வழங்கப்படும் உரிமத்தைப் பெற்றுக்கொள்ள பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகளையும், கடமைகளையும் எடுத்துரைக்கிறது.

2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விமானவழி ஊடான வசதிகள் கட்டண ஒழுங்குவிதிகளின் பிரகடனம் (2023.02.16 ஆம் திகதிய 2319/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு)

இலங்கையினால் வழங்கப்படுகின்ற விமானவழி வசதிகள் மற்றும் சேவைகளின் பயன்பாட்டிற்காக, கொழும்பு விமானத் தகவல் வலையம் (FIR) ஊடாகப் பயணிக்கின்ற விமானம் செலுத்த வேண்டிய கட்டணத்தைக் குறித்துரைக்கிறது.

2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து வழங்குநர் உரிமம் ஒழுங்குவிதிகளின் பிரகடனம் (2023.04.03 ஆம் திகதிய 2326/16 ஆம் இலக்க மேலதிக வர்த்தமானி அறிவிப்பு

இந்த ஒழுங்குவிதியானது, இலங்கையில் வானூர்தி சேவை வழங்குநர் (விமானவழி) உரிமம் மற்றும் வானூர்தி சேவை வழங்குநர் (விமானப் பாதுகாப்பு) ஆகியவற்றை வழங்குவதற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக எடுத்துரைக்கிறது.

வான்வழி ஊடாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கான உத்தரவை வழங்கும் 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டம் (2023.07.20 ஆம் திகதிய 2341/50 ஆம் இலக்க அரசாங்க மேலதிக வர்த்தமானி)

இந்தக் கட்டளையானது, வான்வழி ஊடாக பொருட்களை எடுத்துச் செல்லுதல் தொடர்பான பொறுப்பு வரையறைகளை எடுத்துரைக்கிறது. இது, சர்வதேச ரீதியாக பொருட்களை எடுத்துச் செல்வதற்கு உள்ளடங்காது.

ஒழுக்கவிதி

ஒழுக்க விதிக் கோவையை உருவாக்கியுள்ள அதிகார சபையானது, அனைத்து ஊழியர்களும் உயர்தரமான நெறிமுறை நடத்தைகளைப் பேணுவதையும், "சிறந்த பெருநிறுவன ஆளுகை" எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்துவதையும் தொடர்ந்து கண்காணிக்கிறது. ஒழுக்கவிதி தர நிர்ணயங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை முறைப்பாடுகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை அல்லது ஏனைய அறிக்கைகள் அல்லது ஒழுக்க விதிகள் குறித்த கொள்கைகளை மீறும் வகையிலான ஏதேனும் குறிகாட்டிகள் என்பனவற்றின் மூலம் கண்காணிக்கிறது.

சிறந்த பெருநிறுவன ஆளுகை என்பது, ஊழியர்கள் உள்ளிட்ட அதிகார சபையை உள்ளடக்கியதாகும். இது நிறுவனத்திற்கு வெளியே பல சமூகங்களின் உறுப்பினர் என்பதனை ஏற்றுக்கொள்ளல், வெளிப்படைத்தன்மை, தொடர்ச்சி, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆளுகையும் பொறுப்புடமையும் சுயாதீனத்தன்மையுடன் செயற்படுவதற்கான அர்ப்பணிப்பினை உறுதி செய்தல், பொறுப்பான முறையில் சமூகத்தின் அனைத்து பிரஜைகளதும் உரிமைகளை ஏற்றுக்கொண்டு பொறுப்பாக செயற்படுவதனை உள்ளடக்குகிறது.

நீல வானில் பசுமைமிகு தோற்றப்பாடு

தொழிற்பாட்டுச் சிறப்பம்சங்கள்

	பக்கங்கள்
பாதுகாப்பை வலுப்படுத்தல்	33
பாதுகாப்பு மற்றும் வசதிகளை உயர்த்துதல்	36
வினைத்திறனான மற்றும் பயனுள்ள முகாமைத்துவம்	38
பசுமை விமானத்துறை	40
விமானத்துறையின் வளர்ச்சி	42
தகைமை அபிவிருத்தி	47
தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திகள்	50
பணியாளர்களை மேம்படுத்தல்	51
நிதி சிறப்பம்சங்கள்	54

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

பாதுகாப்பை வலுப்படுத்தல்

சிக்காகோ சமவாயக் கொள்கைகளின்படி, சர்வதேச விமானத்துறைக் கைத்தொழிலை ஒழுங்கமைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட சர்வதேச சிவில் விமான நிறுவனத்தின் (ICAO) உறுப்பு நாடு என்ற வகையில், சிவில் விமானத்துறை அதிகார சபையில் (CAASL) நாம் இலங்கையின் விமானத்துறை முறைமையின் தொழிற்பாட்டுச் செயன்முறைகளை மேற்பார்வை செய்து வருகின்றோம். 2023 ஆம் ஆண்டில் சிறப்பான சேவைகளை வழங்குவதற்குக் கடமைப்பட்டுள்ள நாம், நாட்டிற்குள்ளும், விமானப் பயணத்தின் பாதுகாப்பையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

பாதுகாப்பு வழிமுறைகளை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான பாதையில் நாம் விமான விபத்து விசாரணை அணி ஒன்றினை உருவாக்குவதன் மூலம், இலங்கை விமானத்துறைப் பரப்பில் முக்கியமான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளோம். அர்ப்பணிப்புடன் செயற்படும் இந்த அணி, தேசத்தின் விமானத்துறை வரலாற்றில் முதல் முறையாக நியமிக்கப்பட்ட ஒன்றாகும். இவ்வணி, விமான விபத்துக்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்துவதற்கு உரிய அதிகாரத்தையும், விபத்துக்கு அடிப்படையான காரணங்கள் தொடர்பான தரவுகளையும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்யும் பொறுப்பையும் கொண்டுள்ளது. விபத்துக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளைக் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை அமுல்படுத்துதல் என்பவற்றின் மூலம், இலங்கையின் வான் பரப்பில், வான் பரப்பைப் பாதுகாக்கும் பொறுப்பையும், இடர்களைத் தணிக்கும் பொறுப்பையும் நோக்கமாகக் கொண்டு, விமானப் பயணிகளிடையே விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வளர்த்து வருகின்றோம்.

இதற்கு மேலதிகமாக, நாம், 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விமானப் போக்குவரத்துச் சட்டத்தில், உள்நாட்டு விமானப் போக்குவரத்திற்கான புதிய காப்புறுதி வரையறைகளை விதிக்கின்ற திருத்தங்களை உருவாக்குவதன் மூலம் எதிர்வுகூறும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளோம். இந்த முன்னோக்கிய நடவடிக்கையானது, பிரயாணிகளின் பாதுகாப்பு தொடர்பாக இருக்கின்ற எமது கடப்பாட்டிற்கு ஒரு உதாரணமாக மட்டுமன்றி, அனைத்துப் பிரயாணிகளுக்கும் பாதுகாப்பானதும், நம்பிக்கையானதுமான விமானப் பிரயாண அனுபவத்தை உறுதிப்படுத்துகிறது. இந்த முன்னெடுப்புகள் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகள் மூலம் நாம் பாதுகாப்பு வினைத்திறன் மற்றும் ஒழுங்குபடுத்தல் இணக்கப்பாடு என்பவற்றில் உயர்ந்த தராதரங்களைத் தக்க வைத்து, இலங்கை விமானத்துறையின் நிலையாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றோம்.

பாதுகாப்புக் கொள்கை மற்றும் இணக்கம் தொடர்பான புதுப்பித்தல்கள்

விமானத் துறைக்குள் பாதுகாப்பை அதிகரிக்க நாம் பல்வேறு வகையான முன்னெடுப்புகளைப் பொறுப்பெடுத்துள்ளோம். முதலாவதாக, நாம், விமான விபத்து விசாரணைப் பணியகம் (AAIB) தொடர்பான சட்டமூலத்தின் இறுதி வரைபைப் பூர்த்தி செய்துள்ளோம். இது, சர்வதேச சிவில் விமானத்துறை சமவாயத்தின் (ICAO) இணைப்பு 13 இல் உள்ள ICAO வினால் குறித்துரைக்கப்பட்டுள்ள அண்மைக்காலத் தராதரங்களுடன் ஒருங்கிணைந்து, சர்வதேச விமானப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுடனான இணக்கத்தை உறுதிப்படுத்துகிறது. மேலும், நாம், அரச பாதுகாப்புத் திட்டக் கொள்கை மற்றும் நடைமுறைக் கையேட்டின் மூன்றாவது பதிப்பைப் பிரசுரித்துள்ளோம். இக்கையேடு, பாதுகாப்புக் கொள்கை மற்றும் அமுலாக்கல் நடைமுறைகளின் புதுப்பித்தல்களை உள்ளடக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, விமானத் தொழிற்பாட்டாளர்களின் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக் கையேடுகள் ஆழமான மீளாய்வுக்கு உட்பட்டதுடன், இது, அமுலாக்கத் தராதரம் - SLCAIS 070 என்ற SMS கட்டமைப்புடன் இணங்கியுள்ளது. எமது தொழிற்பாட்டுப் பிரிவுகள் இவற்றை ஏற்றுக்கொள்ள முன்னர் அவற்றைப் பின்பற்றுதல் தொடர்பான விடயங்களைச் சரிபார்க்கும் இத்தகைய முயற்சிகளாவன, விமானக் கைத்தொழில் துறைக்குள் பாதுகாப்புத் தராதரங்களை மேம்படுத்தும் மற்றும் பேணுகின்ற எமது கடமைப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

இலங்கை ஆட்புல எல்லைக்குள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பதிவு செய்யப்பட்ட வானூர்திகள் தொடர்பான அனைத்து சம்பவங்களும் - 2023



சுருக்கங்கள்

ADRM: விமான நிலையம்	RAMP : விமான நிலைய கையாளுகை
ARC: அசாதாரண ஓடுபாதைத் தொடர்பு	RI : ஓடுபாதையில் ஊடுவல் - வாகனம், விமான அல்லது நபர்
ATM: ATM/CNS	SCF-NP: முறைமை/கூறு தொழிற்பாட்டிமை அல்லது செயலிழப்பு (மின்சாரம் அல்லாத)
BIRD: பறவை மோதல்	SEC: பாதுகாப்பு தொடர்பான
CABIN: கெபின் பாதுகாப்பு நிகழ்வுகள்	TURB: கொந்தழிப்பு எதிர்படுதல்
F-NI: தீ/புகை (பாதிப்பு அற்ற)	WSTRW: இடியுடன்கூடிய மழை அல்லது காற்றாடி
MAC: எயார்புரொக்ஸ்/ஏகாஸ் எச்சரிக்கை/பிரிவினையில் இழப்பு /(அருகில்)/விமானப் பயண இடைமோதல்கள்	NAV : ஊடுருவல் பிழை
MED : மருத்துவ	SCF-PP: மின்சாரம் அல்லது செயலிழப்பு
OTHR: ஏனைய	

ஐரோப்பிய ஒன்றியம் - தெற்காசிய விமானத்துறை பங்குடமைத் திட்டம் (EU - SA APP)

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தெற்காசியாவுக்கிடையில் விமானத்துறைப் பங்குடமையை வலுப்படுத்தல்

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தெற்காசியாவுக்கிடையில் விமானத்துறைப் பங்குடமையை வலுப்படுத்தும் திட்டம் பின்வரும் விடயங்களுக்கு அவதானம் செலுத்துகிறது.

- சிவில் விமானத்துறையில் தெற்காசிய மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தல்
- தெற்காசிய மற்றும் ஐரோப்பிய விமானக் கைத்தொழில் துறைகளுக்கிடையில் தொழில்நுட்பப் பரிவர்த்தனைகளை அதிகரித்தல்
- பாதுகாப்பு விடயங்களின் தகைமையை அபிவிருத்தி செய்ய தெற்காசியாவுக்கு ஆதரவளித்தல்
- தெற்காசிய விமானத்துறையின் சுற்றாடல் செயற்திறனை மேம்படுத்தல்

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

பாதுகாப்பை வலுப்படுத்தல்

ஐரோப்பிய ஒன்றியம் - தெற்காசிய விமானத்துறைப் பங்குடமைத் திட்டத்தின் (EU-SA APP) கீழ் கீழே தரப்பட்டுள்ள பயிற்சித் திட்டங்கள் CAASL மற்றும் கைத்தொழில்துறை சார்ந்த நபர்களால் 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இலங்கையில் AIR, OPS மற்றும் PEL என்பவற்றில் (SARI) தெற்காசிய வலய முன்னெடுப்பு நடவடிக்கைகள்

2023 டிசம்பர் மாதத்தில் மூன்று வெற்றிகரமான SARI நடவடிக்கைகள் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகள் ஐரோப்பிய ஒன்றியம் - தெற்காசிய விமானத்துறைப் பங்குடமைத் திட்டம் II யினால் அனுசரணை வழங்கப்பட்டது.

பகுதி ஆ பணிக்குழாம் உறுப்பினர்களின் கூட்டம் டிசம்பர் 13 - 15 வரை இலங்கையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் SARI ஐச் சேர்ந்த அஸ்மிர் குர்கோவிக் என்ற நிபுணர், ஐரோப்பிய ஒன்றிய விமானப் பாதுகாப்பு முகவராண்மையின் ஒழுங்குவிதிகளுக்கு (EASA) அமைவாக, புதிய திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்கள் என்பவற்றுடன் விமானப் பெறுமதி சார்ந்த ஒழுங்குவிதிகளைப் புதுப்பிக்கவும், மீளாய்வு செய்யவும் எண்ணினார். இது, SARI உறுப்பு நாடுகளின் விமானத்துறை ஒழுங்குவிதிகளோடு ஒருங்கிணைக்கப்பட்டது. EASA யினால் பகுதி ஆ ஒழுங்குவிதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களும், புதுப்பித்தல்களும் இந்தக் கூட்டத்தில் அளப்பரிய முக்கியத்துவத்தை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வானது, SARI பணிக்குழாம் உறுப்பினர்கள் கலந்துரையாடல்களில் துடிப்பாகப் பங்குபற்றவும், பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் திருத்தங்கள் தொடர்பாக புதிய அம்சங்களைப் பரிமாற்றிக்கொள்ளவும், நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்ளவும் முக்கிய வாய்ப்பினை வழங்கியது.

கைத்தொழில்துறை பங்குதாரர்களுடன் SARI EU OPS இனால் நடத்தப்பட்ட அறிமுக RDW

EU OPS க்கான அறிமுகப் பயிற்சிப் பட்டறை கெப்டன் பீட்டர் வில்ஸெக் என்பவரின் தலைமையில் நடைபெற்றது. இது, OPS க்காக EU விதிகளை உள்வாங்கிக்கொள்ள CAASL உடைய அனுமதியுடன் நடத்தப்பட்டது. மேலும், CAASL EU விதிகளுடன் ஏற்கனவே குஊடு மற்றும் யுஜசு என்பவற்றைத் தனிப் பயனாக்கியுள்ளனர். இந்தப் பயிற்சிப் பட்டறை, ஜூன் 11 - 13 வரை நடைபெற்றது. மேலும், ஜூன் 12 ஆம் திகதி, கைத்தொழிற்துறைப் பங்குபற்றுநர்களுக்கும், ஏனைய அனைத்து விமானத்துறைப் பங்குதாரர்களுக்குமான கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இக்கூட்டம் ஊடாடு அமர்வு ஒன்றாக அமைந்திருந்தது. உடனடியாகக் கிடைக்கக்கூடிய வகையில் உள்ள வழிகாட்டி நூல்கள் மற்றும் இணக்கம் என்பவற்றின் ஊடாக அளவிடக்கூடியவையாகவும், ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும், எளிதானவையுமாக இருந்தமையினால் EU விதிகளை ஏற்றுக்கொள்ள CAASL இணங்கிக்கொண்டது.

சான்றுபடுத்தல்களும் வழிகாட்டி நூல்களும்

2010 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டத்தின் பிரிவு 31(I) இன் கீழ், நாம் உரிமங்கள் வழங்குவதை இலகுவாக்கவும், ஆள் வளம் இல்லாத விமானப் பயிற்சி நிறுவனங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் வழிகாட்டி நூல்களைப் பிரசுரித்துள்ளோம்.

- பரிமாறுதல் சான்றிதழ் : இலங்கை கேட்டரிங் (பிரைவேட்) லிமிட்டெட், 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டத்தின் பிரிவு 31(I) யினை இணங்கி ஒழுகும் வகையில் சான்றுபடுத்தலையும், பரிமாறுதல் உரிமத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. இது, ஒழுங்குபடுத்தல் இணக்கத்தை உறுதிப்படுத்துகிறது.
- சுய பரிமாறுதல் அதிகாரம் : பிட்ஸ் ஏவியேஷன் (பிரைவேட்) லிமிட்டெட், சுய பரிமாறுதல் சேவை வழங்குநராகச் சான்றுபடுத்தலைப் பெற்றுள்ளது. இதன்படி, இவர்கள் பரிமாறுதல் சேவையை சுயாதீனமாக வழங்குவர்.
- வெளிநாட்டு விமானத் தொழிற்பாட்டு சான்றிதழ்கள்: ஆரம்ப வெளிநாட்டு விமான தொழிற்பாட்டாளர் சான்றிதழ்கள், பத்திக் எயார், தாய் எயார் ஏஷியா மற்றும் எயார் சீஸல்ஸ் போன்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக, ஏனைய நிறுவனங்களுக்கும் 2023 ஆம் ஆண்டில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- தகுதிகாண் அடிப்படையிலான பயிற்சித் திட்டங்கள் : கட்டாய பயிற்சி தொடர்பான எமது அங்கீகாரத்துடன், ICAO வழிகாட்டிகளைப் பின்பற்றி, ஆபத்தான பொருட்களைப் பரிமாற்றுதல் தொடர்பான தகுதிகாண் அடிப்படையிலான பயற்சி மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான பயிற்சி என்பன வழங்கப்பட்டன.
- கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை : ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் முகமாக, நாம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானத் தொழிற்பாட்டாளர்களுக்கு தொடர்ச்சியான கண்காணிப்புப் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். இப்பயிற்சி பரிமாறுதல் மேற்பார்வை தொடர்பான பிரதான தள கணக்காய்வுகள் உட்பட பல்வேறு ஆய்வு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.
- விரிவான ஒழுங்குபடுத்தல் கணக்காய்வு : 2023 ஆம் ஆண்டின் ICAO உடைய SARP மற்றும் விமானத் தொழிற்பாட்டாளர்களின் சான்றிதழ்களைப் புதுப்பிக்கும் உள்நாட்டு ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் இணங்கி நடப்பதை மதிப்பீடு செய்வதற்காக, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் FITS விமானத்துறையில் ஒரு விரிவான ஒழுங்குபடுத்தல் கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விமானத்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான புதுப்பித்தல்கள்

எமது ஒழுங்குபடுத்தல் முயற்சிகளில், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்ச் சேவை வழங்குநர்களின் சான்றுபடுத்தல்கள் மற்றும் விமான காபன் உமிழ்வுகளுடன் தொடர்புடைய இணைப்பு 16 தொகுதி ஐஐஐ க்கான தர நிலைகளை உருவாக்குதல் என்பன உள்ளடங்குகின்றன. எமது குறிப்பிடத்தக்க சாதனைகளுள், உள்நாட்டு நிறுவனம் ஒன்று இணைந்து, வெளிநாட்டு பராமரிப்பு நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகும். மேலும், நாம், 13 உள்நாட்டுப் பராமரிப்பு நிறுவனங்களின் மற்றும் 47 வெளிநாட்டுப் பராமரிப்பு நிலையங்களின் சான்றிதழ்களையும் புதுப்பித்துள்ளோம். RMA, BIA, MRIA மற்றும் துஜயு ஆகிய இடங்களுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு விசேட விமானப் பராமரிப்பு நிறுவனங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளோம். ஆரம்ப அங்கீகாரங்கள் BIA யில் அமைந்துள்ள SPARK எயார் இஞ்சினியர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், சென்னையில் அமைந்துள்ள GMR ஏரோ டெக்னிக் நிறுவனம், ஜேர்மனியில் அமைந்துள்ள ஹங்கர் 901 விமானப் பராமரிப்பு பூஅடிர் மற்றும் தென் கொரியாவில் அமைந்துள்ள மொடியுலர் விமான சேவைகள் நிறுவனம் என்பவற்றுக்கு வெளிநாட்டு AMO அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியான கண்காணிப்பு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானப் பராமரிப்பு நிறுவனங்களினால் நடத்தப்பட்டன. மேலும், தொடர்ச்சியான விமானப் பெறுமதி முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் விமானப் பராமரிப்பு பயிற்சி நிறுவனங்கள் என்பன எமது ஒழுங்குபடுத்தல்கள் தர நிலைகளுடன் இணங்கி நடப்பதை எவ்வித தடையும் இன்றி உறுதிப்படுத்தியுள்ளன.

COSCAP-SA நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை அரசாங்கம், காலத்திற்குக் காலம் நிதிக் கட்டுப்பாடுகளை விதித்தமையினால், CAASL யின் பணியாளர்களுக்கு இவ்வருடத்தின் போது தகைமை கட்டியெழுப்புதல் தொடர்பான பயிற்சிகளை வழங்கும் வாய்ப்பு குறைக்கப்பட்டது.

தகைமை கட்டியெழுப்பும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, COSCAP-SA யிடம் CAASL உடைய பணியாளர்களுக்கு இலவசமாக இயன்றளவு அதிகமான பயிற்சி வாய்ப்புகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்தப் பரிந்துரையானது, திரு. பி.ஏ.ஜயகாந்த - DGCA/CEO மற்றும் திரு. ரேஹான் வன்னியப்ப - தேசிய ஒருங்கிணைப்பாளர் ஆகியோரினால் 2023 ஜனவரி 24 தொடக்கம் 26 வரை பங்களாதேஷ், டாக்காவில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இதன் விளைவாக, 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது COSCAP-SA யினால் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கு பெரியளவில் ஆதரவளிக்கப்பட்டது.

மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில், கணக்காய்வு நுட்பம் விமான விபத்து விசாரணை தொடர்பான அடிப்படைப் பரிசோதகர் (PEL), DCP/FSTD மதிப்பீடு போன்றவை பிரதானமாக வழங்கப்பட்ட உதவிகளாகும்.

விமான வழி செலுத்தல் சேவைகள்

நாம், 2023 நவம்பர் 20 தொடக்கம் 24 வரை கொழும்பில் ICAO RO ATM மற்றும் AIS சேவை விநியோக மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இரண்டையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோம்.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

பாதுகாப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்தல்

சாத்தியமான பணயக் கைதிகள் சூழ்நிலைகள் மற்றும் விமானக் கடத்தல் போன்ற அச்சுறுத்தல்களைத் தணிப்பதற்காக, இலங்கை பொலிஸ் திணைக்களத்திலிருந்து 09 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரச பாதுகாப்பு அமைச்சு மற்றும் CAASL க்கு இடையிலான கூட்ட ஒத்துழைப்பு விமானத்துறை நடவடிக்கைகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, விமானத்துறை தொடர்பான தரவுகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது. சாத்தியமான அச்சுறுத்தல்களுக்கு எதிராக இந்தத் தரவுகள் தொடர்பாக பாதுகாப்பை உறுதிப்படுத்த விதிமுறையான நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து அதிகரித்து வரும் இணையப் பாதுகாப்பு இடர்களுக்குப் பதிலளிக்கும் முகமாக, நாம் இலங்கை கணினி அவசர பதில் அணியுடன் (CERT) இணைந்து வலுவான விமான நிறுவனப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகின்றோம். இந்த முன்னெடுப்பு, இணையப் பாதுகாப்புக் காப்புகளை உயர்த்துவதுடன், விமானத்துறைத் தொழிற்பாடுகளின் இடர்களையும் தணிக்கிறது. மேலும், இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிரான விமானப் போக்குவரத்துத் துறையைப் பலப்படுத்துகிறது. பாதிக்கக்கூடிய காரணிகளை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்து, இத்தகைய சம்பவங்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பதன் மூலம், இலங்கையின் சிவில் விமானத்துறையில் பாதுகாப்புத் தர நிலைகளை நிலைநிறுத்த நாம் எதிர்பார்க்கின்றோம்.

கனிய வள ஆலோசனைக் குழுவிலிருந்து சர்வதேச தராங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆயுதக் களஞ்சியப்படுத்தல் பெட்டிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம், நாம் பௌதீக ரீதியான பாதுகாப்பு உட்கட்டமைப்பையும் மேம்படுத்தியுள்ளோம். ஐக்கிய அமெரிக்காவினால் நிதியளிக்கப்பட்ட மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் பதிவு செய்யப்பட்ட இந்தக் கொடை, எமது பாதுகாப்பு நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது. மேலும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுபாதைத் தொழிற்பாட்டுத் தகைமையை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றுமுள்ளது. இத்திட்டம், நீண்டு நிலைத்திருக்கக்கூடிய உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றது.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு உரிய விமான நிலைய சான்றிதழைப் புதுப்பித்தல் (MRIA)

ICAO யின் தர நிலைகள் மற்றும் தேசிய தர நிலைகளுக்கு அமைவாக, நாம், ICAO யின் தர நிலைகளுடன் இணங்கிச் செல்லக்கூடிய, ஆழமான கணக்காய்வை உறுதி செய்த பின்னர், இன்னும் இரண்டு வருடங்களுக்கு எமது ஆசுஐயு யின் விமான நிலைய சான்றிதழைப் புதுப்பிக்கின்றோம்.

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கான உரிமத்தைப் புதுப்பித்தல் (VCCB)

சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்கள், தேசிய ஒழுங்கு விதிகளுடன் இணங்கிச் செல்கின்றது என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். விமான நிலைய உரிமம் புதுப்பிக்கப்படுதல் கணக்காய்வின் பின்னர் மட்டக்களப்பு விமான நிலையத்தின் உரிமம் மேலும் ஒரு வருடத்திற்குப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை, தேசிய தர நிலைகள் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுதல் உறுதிப்படுத்தப்படுகிறது.

AIM அலகு அடைவுகள் ISO 9001 : 2018 சான்றுபடுத்தல்

நாம், AASL யின் யுஐஆ அலகுக்கு ஒழுங்குபடுத்தல் வழிகாட்டியை வழங்குகின்றோம். இதன் மூலம், ICAO யின் கட்டாயமான தர உறுதிப்பாட்டுத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படுகிறது. இதன் பெறுபேறாக, AIM அலகு ISO 9001:2018 QMS சான்றிதழை வெற்றிகரமாகப் பெற்றுள்ளது. இதன் மூலம் ICAO இணைப்பு 15 இன் தர நிலைகள் பின்பற்றப்படுகின்றன.

BIA யின் புதிய ATM முறைமைகளுக்கான அங்கீகாரம்

நாம் BIA யில் விமானப் போக்குவரத்து முகாமைத்துவம் (ATM) முறைமையைப் புதுப்பிப்பதற்கான வழிகாட்டுதலையும், அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளோம். இது, இலத்திரனியல் விமானப்பயண (e-strips) இன் அறிமுகத்தையும் உள்ளடக்குகிறது. இது, பாதுகாப்பான மதிப்பீடுகள் மற்றும் சோதனை நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் என்பவற்றை முதலாம் கட்டத்திலிருந்து இரண்டாம் கட்டம் வரை செயற்படுவதை உறுதிப்படுத்துகிறது.

VCSS க்கான அங்கீகாரம்

நாம் BIA மற்றும் RMA யின் குரல் தொடர்பாடல் முறைமையை (VCSS) உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளோம்.

ICAO இலங்கை தனது விமானப் போக்குவரத்தில் உயர்வாகப் பறப்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது

ICAO உலகளாவிய பாதுகாப்புக் கணக்காய்வுத் திட்டத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பு அணுகுமுறையின் (USAP - CMA) கீழ் இலங்கையின் விமானப் பாதுகாப்பு முறைமையை 2023 மே 08 தொடக்கம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கணக்காய்வு செய்தது. இங்கு, 8 முக்கியமான கூறுகளின் கீழ் கவனமாகவும், பாரபட்சமற்ற முறையிலும் விமானத்துறைப் பாதுகாப்புக் கணக்காய்வுக் குழுவின் நான்கு உறுப்பினர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. இவ்வுறுப்பினர்கள் ICAO யின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டனர். USAP - CMA யின் இலக்கு யாதெனில், உறுப்பு நாடுகளின் தொடர்ச்சியான கணக்காய்வு மற்றும் கண்காணிப்பின் ஊடாக உலகளாவிய விமானப் பாதுகாப்பை மேம்படுத்துதலாகும். உறுப்பு நாடுகளின் விமானத்துறைப் பாதுகாப்புச் செயற்திறனின் தரவுகளை கிரமமாகவும், தொடர்ச்சியாகவும் பெற்று பகுப்பாய்வு செய்தவதன் மூலம் அவர்களின் விமானத்துறைப் பாதுகாப்பை தொடர்ச்சியாகக் கணக்காய்வு செய்து, கண்காணிப்பதன் மூலம் மேம்படுத்துதலாகும். இந்த நடவடிக்கையில் ICAO இணைப்பு 17 - பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய தரநிலைகள், இணைப்பு 9 - எளிதாக்குதல், தொடர்புபட்ட நடைமுறைகள், வழிகாட்டி நூல்கள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய நடைமுறைகள் என்பவற்றை எந்தளவு தூரம் பின்பற்றுகின்றன என்பதைக் கண்காணிப்பதன் மூலம் விமானத்துறைப் பாதுகாப்பின் முக்கியமான கூறுகளின் அமுலாக்க அளவுகளையும் உள்ளடக்குகிறது.

இலங்கையின் விமானத்துறைப் பாதுகாப்பு முறைமைகள் மீது ICAO யின் கருத்துக்கள்

2023 மே 8 ஆம் திகதி தொடக்கம் 18 வரை USAP-CMA யின் கீழ் கணக்காய்வு ஒன்று நடத்தப்பட்டது. இலங்கை விமானத்துறைப் பாதுகாப்பு முறைமைகள் ICAO யின் கணக்காய்வுக் குழுமத்தின் நான்கு (04) உறுப்பினர்களால் மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் இறுதி அறிக்கை நாம் 92% மட்டத்தை அடைந்துள்ளோம் எனவும், ஆசிய பசிபிக் வலயத்தில் முன்னணி வகிக்கின்ற ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களுக்கு இணையாக எம்மை வைத்துள்ளோம் எனவும் உறுதிப்படுத்தியது.

விமானத்துறைப் பாதுகாப்பு சம்பவ அறிக்கையிடல் முறைமை

விமானத்துறைப் பாதுகாப்பு வழிகாட்டி 08 இன் கீழ் விமானத்துறைப் பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களை நாம் இரகசியமாக அறிக்கையிடும் விரிவான முறைமையொன்றை ஸ்தாபித்துள்ளோம். இந்த முறைமை, சம்பவங்களை உடனடியாக DGCA க்கு அறிக்கையிடும் வசதியை வழங்குகிறது. இது, அனைத்து உரிமம், சான்றிழ்கள், அனுமதிப்பத்திரங்கள், அதிகாரங்கள் மற்றும் ஒப்புதல்களை 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறை சட்டத்தின் கீழ் வைத்திருப்பவர்கள் அனைவரும் மற்றும் பிரயாணிகள், பொது மக்கள் ஆகியோருக்கு ஏற்படும் சம்பவங்களை அறிக்கையிடுமாறு ஆணைப்படுத்தியுள்ளது. அறிக்கைகள் எமது இணையத்தளம் ஊடாகவும் சமர்ப்பிக்கப்படலாம். இந்த அறிக்கைகள், விமானத்துறைப் பாதுகாப்பு சம்பவங்களின் அனைத்து வகையான வகைகளையும் உள்ளடக்குகின்றது.

நடத்தைப் பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்புத் திரையிடல் பயிற்சிப் பட்டறை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, அவுஸ்திரேலியாவின் உள்துறை திணைக்களம், ‟நடத்தைப் பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்புத் திரையிடல் உத்திகள்” என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தியது. இந்தப் பயிற்சியானது, IATA யினால் அங்கீகரிக்கப்பட்ட நிபுணர் ஒருவரால் முன்னெடுக்கப்பட்டது. இப்பயிற்சிப் பட்டறை, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (ஸ்ரீலங்கா) லிமிட்டெட் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றிலிருந்து பங்குபற்றிய உறுப்பினர்களுடன் 2023 ஜனவரி 30 தொடக்கம் பெப்ரவரி 03 வரை கொழும்பில் நடைபெற்றது.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் விமானத்துறைப் பாதுகாப்புக் கணக்காய்வு

விமானத்துறைப் பாதுகாப்பு ஒழுங்குமுறைத் தேவைப்பாட்டுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக இரண்டாவது பரபரப்பான யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் விரிவான கணக்காய்வு ஒன்று எமது விமானப் பாதுகாப்புப் பரிசோதக நிலையத்தினால் நடத்தப்பட்டது.

கட்டிங் எட்ஜ் நியமன அழைப்பு முறைமையை ஸ்தாபித்தல்

2023 ஆம் ஆண்டில் ஒரு அற்புதமான சாதனை எம்மால் செயற்படுத்தப்பட்டது. இது, கட்டிங் எட்ஜ் நியமன அழைப்பு முறைமையாகும். இந்த முறைமை, விமானத்துறை மருத்துவப் பரிசோதனைகளை அட்டவணைப்படுத்தும் செயன்முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியதோடு, நியமனங்களை நெறிப்படுத்தியதுடன், விசேடமாக விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களின் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்கிறது.

ஆசிய பசிபிக் வலயத்தில் விமானத்துறைப் பணிப்பாளர் நாயகங்களின் 58வது மாநாடு

டாக்கா, பங்களாதேஷில் 2023 ஒக்டோபர் மாதம் நடைபெற்ற 58வது DGCA மாநாட்டில் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுடன், விமானத்துறைப் பாதுகாப்பு மற்றும் வசதியாக்கல் அமர்வுகளை நெறிப்படுத்தும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றது. இந்த மாநாட்டின் கருப்பொருள் “விமானத்துறைத் தொழில் வல்லுநர்களின் முன்னெடுப்புடனான ICAO யின் பால்நிலை சமத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்துதல்” என்பதாகும். இந்த மாநாடு முக்கியமான விமானத்துறை பிரச்சினைகளை ஆராயவும், எதிர்கால வளர்ச்சிக்காக புதுமையான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஒரு சிறந்த தளத்தை வழங்கியது.

தேசிய விமானப் போக்குவரத்து எளிதாக்கல் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக, வினைத்திறனையும் பாதுகாப்பையும் அதிகரித்தல் (NATFP)

பொருளாதார வளர்ச்சி மற்றும் சர்வதேச தொடர்புகளுக்கு, விமானப் பிரயாணங்கள் அத்தியாவசியமானதாக இருக்கும் இக்காலகட்டத்தில், தேசிய விமானப் போக்குவரத்து எளிதாக்கல் வசதித் திட்டம், இலங்கை அதன் விமானத் துறையை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்பதற்கான ஒரு சான்றாகும். இந்த விரிவான கட்டமைப்பு, விமானம், விமானப் பணியாளர்கள், பிரயாணிகள் மற்றும் பொருட்கள் என்பவற்றை நாட்டின் விமான நிலையங்கள் ஊடாக நகர்த்துவதை அதிகரிக்கும் நோக்கைக் கொண்டுள்ளதுடன், அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தடையற்ற மற்றும் பாதுகாப்பான அனுபவத்தையும் உறுதிப்படுத்துகிறது.

NATFP யின் வெற்றிக்கு முக்கியமாக அமைந்தது, தேசிய விமானப் போக்குவரத்து வசதியாக்கல் FO (NATFC) மற்றும் விமான நிலைய வசதியாக்கல் FO என்பவற்றின் ஸ்தாபிப்பு ஆகும். NATFC துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சின் செயலாளரினால் தலைமை வகிக்கப்படும் ஒரு அமைப்பாகும். இவ் அமைப்பு, பல்வேறுபட்ட அரசாங்க திணைக்களங்கள், முகவராண்மை நிறுவனங்கள் மற்றும் இலங்கையில் சர்வதேச சிவில் விமானத்துறையின் பல்வேறுபட்ட விடயங்களுக்குப் பொறுப்பான நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டமைப்பாகும்.

தேசிய FAL குழுவின் உருவாக்கம் மற்றும் தொழிற்பாடு என்பன, அமைச்சரவைப் பத்திரத்தினால் அமைச்சரவையில் இருந்து பெற்ற விதிமுறையான அங்கீகாரத்தினால் உருவாக்கப்பட்ட குறிப்பு விதிகளினால் வழிநடத்தப்படுகிறது.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

வினைத்திறனான மற்றும் பயனுள்ள முகாமைத்துவம்

உள்நாட்டு விமான சேவைகளின் தொழிற்பாட்டு வினைத்திறனையும், பாதுகாப்புத் தர நிலைகளையும் உயர்த்தும் நோக்கில், நாம் பல்வேறுபட்ட முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளோம். இதில் முக்கியமான முன்னெடுப்பு யாதெனில், உள்நாட்டு VFR வழிசெலுத்தல் வரைபடத்தின் புதுப்பிக்கப்பட்ட அத்தியாயத்தின் அறிமுகமாகும். இவ்வரைபடம், முக்கியமான இடங்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்பவற்றை உள்ளடக்கி, துல்லியமாக ஒன்றுசேர்க்கப்பட்ட வரைபடமாகும். இந்த நவீன பதிப்பு, கடுமையான சர்வதேச தர நிலைகளைப் பின்பற்றுவதோடு, விமானத்துறை அலங்கரிப்பாளர்கள், விமானத்துறைப் பயிற்சியளிக்கும் மாணவர்கள், விமானத்துறை தொழில் வல்லுநர்கள் ஆகிய பல்வேறு வகைப்பட்ட பயனாளிகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும்.

2010 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானத்துறை சட்டத்திற்கு அமைய, நாம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம், விமான நிலைய மற்றும் விமானத்துறை சேவைகள் (ஸ்ரீலங்கா) பிரைவேட் லிமிட்டெட் ஆகிய முக்கிய சேவை வழங்குநர்களின் நேரடி சான்றுப்படுத்தல்களைக் கண்காணித்து வருகின்றோம். இந்தச் சான்றுபடுத்தல்கள் பிரயாணிகள், விமான நிலைய தரைத் தொழிற்பாட்டாளர்கள், விமானத்திற்குள் பரிமாறுதல் சேவை வழங்குநர்கள் மற்றும் விமான நிலையப் பாதுகாப்பு முகாமைத்துவம் ஆகிய விடயங்களைக் கையாளுகின்ற தகுதிகளுடன் இணங்கி நடப்பதை இச்சான்றுபடுத்தல்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனைவிட, நாம் விமானப் பணியாளர்களுக்கு ஸ்மார்ட் உரிமங்களை வழங்குவதன் மூலம், பாரம்பரியமாக வழங்கி வரும் ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு உரிமங்களை ஒதுக்கியுள்ளோம். இதன் மூலம், நிர்வாக செயன்முறையை நெறிமுறைப்படுத்தியுள்ளதோடு, தொழிற்பாட்டு வினைத்திறனையும் உயர்த்தியுள்ளோம்.

முக்கியமான அறிக்கைகளின் பிரசுரம்

வினைத்திறன் மற்றும் பயன்பெறு தன்மை கொண்ட முகாமைத்துவத்தை மேம்படுத்த நாம் கூட்டுறவுத் திட்டம், CAASL பணி திட்டம், வளர்ச்சி மற்றும் செயற்திறன் அறிக்கை, புள்ளிவிபரவியல் அறிக்கை மத்திய வங்கி அறிக்கை, வளர்ச்சியை அளவிடும் பெறுபேற்று அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கைகள் உள்ளடங்கலாக, பல்வேறுபட்ட அறிக்கைகளையும், ஆவணங்களையும் பூர்த்தி செய்து பிரசுரித்துள்ளோம். இவ்வறிக்கைகள், மிகவும் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டு, இலங்கை பாராளுமன்றம், பொருத்தமான அரசாங்க அமைப்புகள் மற்றும் விமானத்துறைக் கைத்தொழில்களுடன் தொடர்புடைய ஏனைய பங்குதாரர்கள் அனைவருக்கும் சமர்ப்பித்துள்ளோம். இந்த நடவடிக்கையானது, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான எமது அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

தொழில்நுட்ப நூலகம்

ஒழுங்குபடுத்தல் ஆவணங்கள் மற்றும் கையேடுகளைப் புதுப்பித்தல் மூலம் எமது தொழில்நுட்ப நூலகம், ஆவணப்படுத்தல் கட்டமைப்பை மேம்படுத்தியுள்ளது. இது, ICAO, CAASL மற்றும் உள்ளூர் விமானக் கைத்தொழில்துறை ஆகியவற்றினால் தயாரிக்கப்படுகின்ற விடயங்களை மையமாகக் கொண்ட ஆவணங்களை வினைத்திறனாகப் பங்கிடுவதன் மூலம் முக்கியமான தகவல்களை வழங்குவதுடன், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் கீழ் உள்ள தகவல் பெறும் உரிமையையும் கையாளுகின்றது.

CAASL இன் இணையத்தளம்

எமது இணையத்தளம், தகவல் தொடர்பான முக்கியமான ஒரு மூலமாகும். இது, கிரமமாகப் புதுப்பிக்கப்பட்டு, 2023 ஆம் ஆண்டில் 151,607 பயன்பாட்டாளர்களை ஈர்த்துள்ளது. இந்த ஈர்ப்பானது, சிவில் விமானத்துறையில் உயர்ந்த பொது மக்கள் அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

இணக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப உதவி

CAASL யின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் இவ் அலகு 2023 பெப்ரவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதன் மூலம் இவ்வலகு விமானத்துறைப் பாதுகாப்பை மேம்படுத்தும் செயற்பாடுகளைக் கண்காணித்து வருகிறது. இது, ICAO உடைய USOAP CMA திட்டத்தைக் கண்காணிப்பதுடன், பதில்களைச் சேகரித்து சமர்ப்பிக்கின்றது. அத்துடன், சரியான நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்வதுடன், ஒழுங்குபடுத்தல் ஆவணங்களையும், வழிகாட்டி நூல்களையும் புதுப்பிக்கின்றது.

தேசிய விமானத்துறை தேடல் மற்றும் காப்பாற்றுதல் திட்டத்தின் (NASARP) யின் அறிமுகம்

தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் தொடர்பான சம்பவங்களுக்குப் பதிலளிப்பதற்கான அரச விருப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக 21 பங்குதாரர்களை உள்ளடக்கிய தேசிய விமானத்துறைத் தேடல் மற்றும் காப்பாற்றுதல் திட்டத்தினை (NASARP) நாம் உருவாக்கியுள்ளோம். இது, 2347/02 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் ஊடாக ஒரு தேசிய விதியாக உருவாக்கப்பட்டுள்ளது.



பாதை வரைபடப் பிரசுரம் - ICAO

ICAO யின் இணைப்பு 4 தர நிலைகளுக்கு அமைவாக, நாம் ICAO பாதை வரைபடத்தைப் பிரசுரிப்பதற்கு, ஸ்தாபிக்கப்பட்ட அனைத்து விமான சேவைத் தகவல் பிராந்தியங்களுக்கும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகளை வழங்கி வருகின்றோம்.



AML பரீட்சை விரிவாக்கம்

நாம் AML பரீட்களின் அதிர்வெண்களை அதிகரித்திருப்பதோடு, அதிகமான விண்ணப்பதாரிகளை உள்வாங்கவும், பரீட்சைச் செயன்முறையை இலகுவாக அணுகவும், பங்குபற்றலை அதிகரிக்கவும், விமானக் கைத்தொழில் துறையில் ஆட்களின் தொழில்முறை விருத்திக்கு ஆதரவளிக்கவும் வசதி செய்யும் வகையில், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒரு வருடத்திற்கு மூன்று பரீட்சைகளை நடத்தி வருகின்றோம்.

பிரயாணிகளின் முறைப்பாடுகள்

பிரயாணிகளின் முறைப்பாடுகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படாத போதிலும், 80% ஆன முறைப்பாடுகள் CAASL இன் மத்தியஸ்தம் ஊடாக வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டன.

வீசா பரிந்துரைகள்

விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குபடுத்தல் பிரிவு, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவத்தினுள் வெளிநாட்டுப் பணியாளர்களுக்குப் பரிந்துரைகளை வழங்கவும், நாட்டிலுள்ள விமானத்துறைப் பாடசாலைகளில் சர்வதேச மாணவர்கள் இணைந்து கொள்வதற்கான பரிந்துரைகளை வழங்கவும், முக்கிய பங்களிப்புகளைச் செய்து வருகிறது. 2023 ஆம் ஆண்டில் நாம் 160 வெளிநாட்டு மாணவர்களுக்கும், 47 வெளிநாட்டவர்களுக்கும் பரிந்துரைகளை வழங்கியுள்ளோம்.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

பசுமை விமானத்துறை

பாதுகாப்புத் தரநிலைகள் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை உயர்த்தும் எமது கடமைக்கு மேலதிகமாக, நாம் CAASL இல் விமானத்துறையில் நிலையாதார நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தேடுவதில் துடிப்பாக இயங்கி வருகின்றோம். சுற்றாடல் பாதிப்பைத் தணிக்கின்ற உடனடித் தேவையையும், காலநிலை மாற்றத்திற்கு எதிராகச் செயற்படவும் வேண்டிய முக்கியத்துவத்தை அங்கீகரித்து, நாம் பசுமை விமானத்துறைக் கொள்கைகளைத் தழுவுவதற்கும் கைத்தொழில் துறையின் சூழலியல் தடயத்தைக் குறைக்கவும் முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நிலையாதார விமானத்துறைக்கான தேசியக் கொள்கை அபிவிருத்தி

நாம் விமானத்துறைக் கைத்தொழிலுக்காக விரிவான நிலையாதார தேசியக் கொள்கையை அபிவிருத்தி செய்யவும், அமுல்படுத்தவும் பணியாற்றி வருகின்றோம். இந்தக் கொள்கையானது, விமானப் பராமரிப்பு மற்றும் எரிபொருள் நுகர்வு, கழிவு முகாமைத்துவம் மற்றும் காபன் உமிழ்வுகள் போன்ற விமானத்துறைத் தொழிற்பாட்டிலுள்ள அனைத்து அம்சங்களிலும் சுற்றாடல் ரீதியாக பொறுப்புகள், நடைமுறைகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிலையாதாரத் தன்மைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாம், இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறை பசுமையை நோக்கி நகர்கின்ற உலகளாவிய முயற்சிகளுடன் இணைந்து மற்றும் அதிகமான சூழல் நட்புடனான நடைமுறைகளைப் பின்பற்றுதல் என்பவற்றின் மூலம் இறுதியாக எதிர்கால சந்ததியினருக்கு துப்புரவான மற்றும் ஆரோக்கியமான சூழலுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் செயற்பட்டு வருகின்றோம்.

நிலையாதார விமானத்துறைக்கான ஒத்துழைப்பு

மேலும் நாம், பசுமை விமானத்துறை முன்னெடுப்புகளில் புதுமை மற்றும் முன்னேற்றத்தை நோக்கி அனைத்துத் தொழிற்துறைப் பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதோடு, அறிவுப் பகிர்வையும் மேற்கொள்வதற்கான முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றோம். நாம் விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள், ஒழுங்குபடுத்தல் அமைப்புகள் மற்றும் சுற்றாடல் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம், விமானத்துறை சமூகத்திற்குள் நிலைத்தன்மைக் கலாசாரத்தை வளர்ப்பதற்கு, சுற்றாடல் பாதிப்பைக் குறைப்பதற்கான சிறந்த நடைமுறைகளையும், தொழில்நுட்பங்களையும் ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கவும் எண்ணியுள்ளோம்.

இலங்கையில் CORSIA வினை அமுல்படுத்தல்

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) இணைப்பு 16 தொகுதி IV க்கு அமைவாக, CAASL, CORSIA என்ற திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த முன்னெடுப்பானது, சர்வதேச தர நிலைகளுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தும் வகையில், துல்லியமான தரவு சேகரிப்பு மற்றும் சரிபார்த்தல் என்பவற்றை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மேற்கொள்ளும் வகையில் உள்ளது. இதனைவிட, பிறீஸ் எயார் அவர்களின் உமிழ்வு கண்காணிப்புத் திட்டத்தில் (EMP) அங்கீகாரத்தைப் பெற்றதைத் தொடர்ந்து CORSIA அமுலாக்க செயன்முறையில் இணைந்து கொண்டுள்ளது. தேசிய அங்கீகார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையாதார எதிர்கால குழுமமும் ஊழுசுளுஐயு மத்திய சரிபார்த்தல் பதிவகத்தில் CORSIA வைச் சரிபார்ப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

CO_2 உமிழ்வுகளை குறைத்தலும் சுற்றாடல் நிலைத்தன்மையை உயர்த்துலும்

எமது பசுமை முயற்சிகளில் ஒரு பகுதியாக, நாம், தேசிய விமானத்துறைச் சுற்றாடல் கொள்கை மற்றும் ICAO வினால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள உலகளாவிய கொள்கைக் கட்டமைப்பு என்பவற்றுக்கு அமைவாக, விமானத் துறையில் CO_2 உமிழ்வுகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டு, செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இந்த முன்னெடுப்பானது, ஐந்து முக்கியமான வகைகளுக்குள் உள்ளடங்குகின்ற பல்வேறுபட்ட உமிழ்வு தணிப்பு வழிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: தொழில்நுட்பம் மற்றும் தரநிலைகள், நிலையான விமான எரிபொருட்கள், தொழிற்பாட்டு மேம்பாடு, CORSIA யின் மூலம் மேற்கொள்ளப்படும் சந்தையை அடிப்படையாகக் கொண்ட வழிமுறைகள் மற்றும் மேலதிக வழிமுறைகள் என்பனவாகும். இந்த வழிமுறைகள், அரச செயற்பாட்டுத் திட்டத்தில் மூலோபாய அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளது. SAP யில் உள்வாங்குவதற்கு பல்வேறுபட்ட உபாயநுட்பங்களும், விமானத்துறையுடன் தொடர்புடைய சுற்றாடல் கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்கு துல்லியமாகத் திட்டமிடப்பட்ட பொறிமுறைகளும் பின்பற்றப்பட்டன. மேலும், நாம் CORSIA வினை அடிப்படையாகக் கொண்ட இணைப்பு 16 தொகுதி IV க்கு அமைவாக IS 098 இனுடைய இரண்டாவது பதிப்பை வழங்கியுள்ளோம். இந்த நடவடிக்கை, பசுமை விமானத்துறை முன்னெடுப்புகள் தொடர்பான எமது கடமை உயணர்ச்சியை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

சர்வதேச விமானப் போக்குவரத்திற்கான CORSIA யின் அங்கீகார முறையைச் சரிபார்க்கும் இலங்கை அமைப்பு

நிலையாதார எதிர்காலக் குழுமம் (SFG) 2023 இன் CORSIA திட்டத்துடன் தொடர்புடைய உமிழ்வுகளைச் சரிர்பார்ப்பதற்கான சான்றுபடுத்தப்பட்ட ஒரு அமைப்பாகும். இலங்கையில் ஒருகுப அங்கீகாரம் அளிக்கப்பட்ட சரிபார்க்கும் அமைப்பாக வருவதற்கான CORSIA அங்கீகார செயன்முறையில் முதல்படியாக மாலேயில் 2023 ஆகஸ்ட் மாதம் கணக்காய்வு ஒன்று நடத்தப்பட்டதன் மூலம் சான்றுபடுத்தப்பட்டது.

இவ்வலயத்திற்குள் அமைந்திருக்கின்ற ஏனைய விமான நிறுவனங்களின் உமிழ்வுகளைச் சரிபார்ப்பதற்கு SFG க்கு இயலுமையை வழங்குகின்ற இந்த அங்கீகாரமானது, எமது நாட்டிற்குக் கிடைக்கப்பெற்ற முக்கியமான அடைவாகும். இந்த அங்கீகாரம் SFG உடைய தரநிலைகளையும், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் (SLAB) இலங்கையில் உருவாக்கப்படுகின்ற தேவைப்பாடுகளும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தும். தற்போது SFG ICAO வின் ஆவணத்தை CORSIA அங்கீகாரம் பெற்ற ஒரு சரிபார்க்கும் அமைப்பாக வெளிப்படுகிறது.

சுற்றாடல் செயற்திறன்

ஐரோப்பிய ஒன்றியம் - தெற்காசிய விமானத்துறைப் பங்குடமைத் திட்டத்தின் கீழ் (EU-SA APP) தெற்காசிய விமானத்துறையில் சுற்றாடல் செயற்திறனை மேம்படுத்துவதற்காக EU-SA APP II - விமானத்துறையில் சுற்றாடல் விடயங்கள் எனப் பெயரிடப்பட்ட பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டது.

EU-SA APP II - ENVIRONMENT MATTERS IN AVIATION EU & SOUTH ASIA WORKING TOGETHER TOWARDS A GREENER AND MORE SUSTAINABLE AVIATION
16 – 20 OCTOBER 2023 – SRI LANKA

ஐரோப்பிய ஒன்றியம் - தெற்காசிய விமானத்துறைப் பங்குடமைத் திட்டம் II (EU - SA APP) EU - SA APP II - விமானத்துறையில் சுற்றாடல் விடயங்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தெற்காசிய பசுமை மற்றும் அதிக நிலையாதார விமானத் துறையை நோக்கி இணைந்து செயற்படும் திட்டம் என அழைக்கப்படும் பயிற்சிப் பட்டறையை நடத்தியது. இந்த ஒரு வாரகால பயிற்சிப் பட்டறை பங்குபற்றுநர்களுக்கு CORSIA அமுல்படுத்தல் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் காபன் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான அறிவை மேம்படுத்துதல் SAF, SAP ஆகியவற்றின் சாத்தியமான வகிபாகம் என்பன தொடர்பாக விழிப்புணர்வூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டது. மேலும், இந்தப் பயிற்சிப் பட்டறை, நிலையாதார விமானத்துறை எரிபொருள்களின் விருத்தி மற்றும் பாவனை தொடர்பிலான சவால்கள் பற்றியும் அறிவுறுத்தப்பட்டது.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

விமானத்துறை வளர்ச்சி

எயார்லைன் தொழிற்பாடுகள்

கோவிட்-19 மட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினால், இலங்கையின் விமானப் போக்குவரத்துத்துறை கணிசமான வளர்ச்சியைக் காட்டியது. எமிரேட்ஸ், எத்திஹாட், எயார் அரேபியா மற்றும் கட்டார் எயார்வேஸ் போன்ற மத்திய கிழக்கு விமான நிறுவனங்கள், தமது தொழிற்பாடுகளை விரிவாக்கியமையினால், பொருளாதாரம் உயர்ந்தது. ஓமான் எயார், பிளைட் டுபாய், சலாம் எயார், ஜெஸீரா எயார்வேஸ் மற்றும் கல்ப் எயார் ஆகியனவும் தமது பிரசன்னத்தை அதிகரித்தன. துருக்கி எயார்லைன்ஸ், இஸ்தான்புல்லில் இருந்து கொழும்பு வரை நேரடி விமான சேவையை அறிமுகப்படுத்தியதன் மூலம், இணைப்பை உயர்த்தியது. ரொஸ்யா எயார்லைன்ஸ் ஏரோபுளொட் விமான சேவையைப் பதிலீடு செய்தது. இதன் மூலம், ரஷ்யாவுக்கான விசேடமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிங்கப்பூர் எயார்லைன்ஸ், மலேசியா எயார்லைன்ஸ், எயார் ஏஷியா, தாய் எயார் ஏஷியா மற்றும் மலிண்டோ ஆகிய விமான சேவைகளும் தமது சேவைகளை விரிவாக்கின. சீனா மட்டுப்பாடுகளைத் தளர்த்தி சைனா ஈஸ்டன் எயார்லைன்ஸ் விமான சேவைகளை அதிகரித்ததோடு, எயார் சைனாவும் தொழிற்பாடுகளை ஆரம்பித்தன. எயார் இந்தியா, விஸ்தாரா, ஸ்பைஸ்ஜெட் மற்றும் இன்டிகோ ஆகிய இந்திய விமான நிறுவனங்கள் தமது இணைப்புக்களை வலுவாக்கின. அலியான்ஸ் எயார் யாழ்ப்பாணத்துக்கு தமது சேவையை விரிவாக்கியது. எயார் சீஸல்ஸ், இலங்கை ஊடாக ஆபிரிக்கா மற்றும் ஆசியாவைத் தொடர்புபடுத்தி விமான சேவைகளை ஆரம்பித்தன. மேலும், எயார் அரேபியா, அபுதாபி என்பன 2023 இல் தொழிற்பாடுகளை ஆரம்பித்தன.

கார்கோ தொழிற்பாடுகள்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், கட்டார் எயார்வேஸ், எத்திஹாட் மற்றும் கதே பசிபிக் என்பன கார்கோ தொழிற்பாடுகள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் முக்கிய பங்காற்றின. மேலும், ஏனைய பிரயாணிகளின் விமானங்களும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு இடங்களை ஒதுக்கியுள்ளன.

வாடகை விமான சேவைகள்

கோவிட் தொற்றுக்குப் பின்னரான மற்றும் ஐரோப்பா ஊடாகச் சென்ற உல்லாசப் பிரயாணிகள், ஆசியா ஊடாகச் செல்வதற்கான கேள்வி அதிகரித்தமையினால், இலங்கையின் வாடகை விமான சேவைகளின் தேவை அதிகரித்தன. ரஷ்யன் எயார்லைன்ஸ், ரெட்விங்ஸ் மற்றும் அசூர் எயார்லைன்ஸ், ஸ்கைஅப், பிளை வன், உஸ்பெகிஸ்தான் எயார் மற்றும் பல்கேரியன் எயார் என்பவற்றுடன் இணைந்து வாடகைத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தன. வாரத்திற்கு 6,000 பிரயாண இருக்கைகளை வழங்கி, மத்தள விமான நிலையத்திற்கும் சேவைகளை ஆரம்பித்தன. அசூர் எயார்லைன்ஸ், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு தொழிற்பட்டது. என்டர் எயார், LOT பொலிஸ் மற்றும் ஸ்மார்ட் விங்ஸ் என்பன வாடகை விமான சேவைகளையும் இணைத்துக் கொண்டன. அத்துடன், பிராந்தியப் பிணக்குகளினால் ஏற்பட்ட விமான சேவைகளின் தாமதம் காரணமாக ஆர்க்கியா எயார்லைன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.

உள்நாட்டு விமான சேவை

பிங்ஸ் எயார்ஸ் மற்றும் சினமன் எயார்ஸ் என்பன குறைந்த கேள்வியுடன் கிரமமான சேவை அட்டவணைகள் இன்றி, உள்நாட்டு வாடகை விமான சேவைகளை வழங்கின. அதேவேளை, சில நுகர்வோரின் கேள்விகளுக்கு அமைய, ஹெலிக்கொப்டர் தொழிற்பாட்டாளர்கள் தமது சேவைகளை வழங்கினர்.

பயண முகவராண்மை உரிமப் பத்திரம்

2023 இல் 127 புதிய பிரயாண முகவராண்மைத் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. 2022 இல் இது 39 ஆகவிருந்தது. சுமார் 400 முகவர் நிறுவனங்கள் விமானப் போக்குவரத்து வர்த்தக நடவடிக்கையின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டி, தமது உரிமப் பத்திரங்களைப் புதுப்பித்துக் கொண்டன. தொழிற்பாடுகளுக்காக விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் (DGCA) அவர்களின் அதிகாரம் தேவைப்படுத்தப்பட்டது.

விமான சேவைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள்

நான்கு வருட இடைவெளியின் பின்னர் இலங்கை, ஐக்கிய அரபு இராச்சியத்துடன் (UAE) விமான சேவைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பித்தது. இதன் மூலம், எமது விமானக் கைத்தொழில் துறைக்கு அனுகூலமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும், சாத்தியமான விமானத் தொழிற்பாடுகளை அதிகரிக்கக் கூடியதாகவும் இருந்தது. மேலும், நாம் நெதர்லாந்து, மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும், இலங்கைக்கும் இடையில் பலதரப்பட்ட விமான சேவை உடன்படிக்கைகளைப் புதுப்பித்துள்ளோம்.

சிவில் விமானத்துறை பிரதான திட்டம்

இலங்கையின் சிவில் விமானத்துறையை மேம்படுத்தும் எதிர்காலத்திற்கான மூலோபாயத் திட்டத்தைக் கவனத்திற் கொண்டு நாம் விரிவான தேசிய விமானப் போக்குவரத்து பிரதான திட்டத்தை (CAMP) உருவாக்கினோம். இந்த முன்னெடுப்பானது, அடுத்த 10 வருடங்களுக்குள் நாட்டின் விமானத்துறைக் கைத்தொழிலை வடிவமைப்பதற்கான ஒரு முன்முயற்சியினைப் பிரதிபலிக்கிறது. இந்தத் திட்டம், முக்கியமான சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொள்வதுடன், வளர்ந்து வரும் வாய்ப்புகளை பயன்படுத்தவும், நிலையாதார அபிவிருத்தியை உறுதி செய்யவும் கருதுகிறது.

அதிகரித்து வரும் வர்த்தக பிரயாணத் தொழிற்பாடுகள்

கோவிட்-19 தொற்றினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இரத்மலானை, மத்தளை, யாழ்ப்பாணம் போன்ற முக்கிய விமான நிலையங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான வர்த்தக பிரயாணிகளின் தொழிற்பாட்டுச் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விமான சேவைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டமையினால், அங்கீகாரம் வழங்கப்பட்ட பல புதிய வெளிநாட்டு விமான நிறுவனங்கள் எம்முடைய சர்வதேச பங்குடமையை வளர்ப்பதற்கும், எமது விமானத்துறை வலையமைப்பை விரிவாக்குவதற்குமான அர்ப்பணிப்பை மதித்துள்ளன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற முக்கிய நாடுகளுடன் நடத்தப்பட்ட இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள், உலகளாவிய விமானத்துறைப் பரப்பில் நாம் பிரதான செயற்பாட்டாளராக உள்ளோம் என்ற எமது நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தியதோடு, அதிகரித்து வரும் இணைப்பை எளிதாக்கி உள்ளதுடன், பொருளாதார வாய்ப்புக்களையும் அதிகரித்துள்ளது.

விமானத்துறை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

விமானக் கைத்தொழில்துறை தொடர்பாக எதிர்கால சந்ததியினருக்கு கல்வி ஊட்டுவதற்கான முன்னெடுப்புகளை ஆரம்பித்துள்ளோம். விமான நிலையத் தொழிற்பாடுகள் தொடர்பாக அறிவூட்டவும், அது தொடர்பான அக்கறைகளை ஊக்குவிக்கவும் இளைஞர்கள் மத்தியில், குறிப்பாக, பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு, கற்றல் அனுபவங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், அனைத்து இலங்கை மாணவர்களுக்கும் இடையில் விமானத்துறை தொடர்பான அறிவைப் பரவலாக்கவும், விளக்கவும் கூடிய வகையில் தேசிய தொலைக்காட்சி மூலம் மாதாந்தப் பயிற்சிப் பட்டறைகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சி, இக்கைத்தொழில்துறை பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக அபிவிருத்திக்கும் அளிக்கின்ற பங்களிப்பு பற்றி எடுத்துக்கூறப்பட்டது. புதுமை, கல்வி, ஒத்துழைப்பு போன்ற ஒரு கலாசாரத்தை வளர்ப்பதன் மூலம், நாம் விமானக் கைத்தொழில் துறையில் நிலையாதார மற்றும் ஒளிமயமான இலங்கையை உறுதிப்படுத்துவதற்காக அடுத்த தலைமுறையின் தொழில்வல்லுநர்களையும், ஆர்வலர்களையும் உருவாக்க எத்தனித்து வருகின்றோம்.

“குவன் சரிசார” தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பு

“குவன் சரிசார” தொலைக்காட்சி நிகழ்ச்சியானது, அதன் தனித்துவமான தயாரிப்பு, வடிவம் மற்றும் விமானக் கைத்தொழில்துறையின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கியதன் காரணமாக, முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு பிரசித்தம் அடைந்தது. இந்த நிகழ்ச்சி, அதன் பிரசித்தம் மற்றும் சமூகத்திற்கு அளிக்கக்கூடிய பெறுமதியான பங்களிப்பு காரணமாக, விருது ஒன்றினையும் பெற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6.30 க்கு இந்த நிகழ்ச்சி ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும். விழிப்புணர்வு மட்டங்களை உயர்த்தும் முயற்சியில் CAASL இனால் பிரசுரிக்கப்படும் செய்திகள் மற்றும் சிவில் விமானக் கைத்தொழில்துறை தொடர்பான செய்திகள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக எடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன. இவை, தகவல்களை வெளியிடும் வகையில் பயன்படுத்தப்பட்ட ஊடகங்களாகும்.

இலங்கை விமானத்துறை தினம் - 2023

சர்வதேச விமானப் போக்குவரத்து அமைச்சின் ஒத்துழைப்புடன் (IATA) நாம் 2023 ஜுலை 14 ஆம் திகதி இலங்கை விமானத்துறை தினத்தைக் கொண்டாடியுள்ளோம். இந்த நிகழ்வு, கோவிட் தொற்றின் பின்னரான விமானப் பிரயாண சவால்கள் மற்றும் நிலையாதார வளர்ச்சி பற்றிய விடயங்களை முன்னிலைப்படுத்தி இருந்தன. இதில் முக்கிய பேச்சாளர்களாக கௌரவ நிமால் சிரிபால டி சில்வா மற்றும் திரு. பிலிப் கோஹ் ஆகியோர் ஸ்மார்ட் விமான நிலைய அபிவிருத்தி மற்றும் விமானத்துறைப் பாதுகாப்பு ஆகிய தலைப்புகளில் உரையாற்றினர். இந்த ஒத்துழைப்பு நிகழ்ச்சியானது, இலங்கை விமானத்துறையை வலுப்படுத்தும் முகமாக கைத்தொழில்துறை தலைவர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே அறிவினைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் அமைந்திருந்தது.

பாடசாலை மாணவர்களுக்கான விமானப் போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

விமானத்துறையுடன் தொடர்புடைய அறிவினை இலங்கையின் எதிர்கால சந்ததியினரிடையே கட்டியெழுப்புவதற்காக, விமானத்துறை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன் கீழ், பாடசாலைகள் தோறும் சிவில் விமானத்துறைக் கழகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக மாணவர்களுக்கு கல்வியூட்டப்பட்டது. இளைய மாணவர்களுக்கு சிவில் விமானத்துறை எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும், அப்பாடத்தில் அக்கறையை அதிகரிக்கவும் இந்நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டன.

விமானத்துறை பணிப்படையையும் தொழில் வாய்ப்புகளையும் அதிகரித்தல்

விமானத்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கும் முகமாக, நாம், “இலங்கை விமானத்துறைக் கைத்தொழிலில் தொழில் வாய்ப்புகளையும், மாறுபட்ட பணிப்படையையும் இயக்குதல்: “ஒரு விரிவான தொழில் சந்தைப் பகுப்பாய்வு” என்ற தலைப்பில் ஒரு விரிவான ஆய்வுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் பிரதான இலக்கு யாதெனில், இலங்கை விமானத்துறை பற்றிய ஆழமான ஒரு பார்வையை வழங்குவதும், இருக்கின்ற ஆட்சேர்ப்பு வாய்ப்புகளை இனங்காணுவதும், மாறுபட்ட பணிப்படையைப் பகுப்பாய்வு செய்வதுமாகும். இந்த முன்னெடுப்பானது, கைத்தொழில்துறைத் தேவைப்பாடுகள் மற்றும் வழங்கப்படுகின்ற கல்வி ஆகியவற்றுக்கு இடையில் உள்ள இடைவெளிகளைத் தகர்த்தெறிந்து, பணிப்படையின் தரத்தை உயர்த்தி, இலங்கை விமானக் கைத்தொழில்துறை வளர்ச்சிக்கும் போட்டித் தன்மைக்கும் ஆதரவளிப்பதாகும்.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

விமானத்துறை வளர்ச்சி

விமானத்துறை அறிவினை வளர்த்தல்

இலங்கையின் எதிர்கால சந்ததியினரிடையே விமானத்துறை தொடர்பான அறிவினை உட்பொதிப்பதற்கு விமானத்துறை விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த முன்னெடுப்புகள், மாணவர்களுக்கு சிவில் விமானத்துறை பற்றி கல்வியூட்டுவதும், பாடசாலைகளில் சிவில் விமானத்துறைக் கழகங்களை உருவாக்குவதும் இலக்குகளாக அமைந்தன. சிவில் விமானத்துறை ஊக்குவிப்பு முன்னெடுப்புகளில் ஒரு பகுதியாக, அடுத்த கட்ட பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் விமான நிலையப் பயிற்சிப் பட்டறைகள் உள்ளடக்கப்பட்டன. இதனைவிட நாம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுமக்களிடையே விமானத்துறைக் கைத்தொழில் பற்றிய அறிவை வளர்க்கவும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து "குவன் சரிசார" நிகழ்ச்சி ஊடாக விமான நிலைய விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. இந்த முன்னெடுப்புகள், பரவலான பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளதோடு, அவர்களின் சமூகத் தாக்கத்திற்கான அங்கீகாரத்தையும் வழங்கி, சிவில் விமானத்துறையுடன் பொது மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறு முனைய உருவாக்கம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) அதிகரித்து வருகின்ற போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் முகமாக, நாம், இடைக்காலத் திட்டம் ஒன்றாக வெளியேறு முனைய விரிவாக்கத்திற்கான பரிந்துரை ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இந்த விரிவாக்கமானது. தரைப் பிரதேசத்தின் அளவை அதிகரித்தல், பரிசோதனைக் கருமபீடங்களை அதிகரித்தல், பாதுகாப்புத் திரையிடல் இயந்திரங்களை அதிகரித்தல், பொருட்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை அதிகரித்தல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இவையனைத்தும், அடுத்த ஆண்டின் இறுதியில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம், விமான நிலையத்தில் பிரயாணிகளுக்கு பாதுகாப்பு மற்றும் அதி உச்ச வசதிகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

A320 தொழிற்பாடுகளுக்காக யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் (JIA) அபிவிருத்தி

அரசாங்கம் A320 விமானத்தின் சேவையை உள்வாங்குவதற்காக JIA யின் தொழிற்பாடுகளை விரிவாக்க எத்தனிக்கின்றது. பொருத்தமான அதிகார சபைகளின் ஒத்துழைப்புடன் நாம் குறிப்பிட்ட விரிவாக்கத்திற்கான நிலப்பகுதியை இனங்காண்பதற்கான முன்னெடுப்பை ஆரம்பித்துள்ளோம். மேலதிக மதிப்பீட்டுக்காக அறிக்கை ஒன்று புதிய அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிற்பாடுகளுக்கான ஹிங்குராக்கொட விமான நிலைய அபிவிருத்தி

2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், அரசாங்க நிதிகள் ஒதுக்கப்பட முன்னர், நாம் ஹிங்குராக்கொட விமான நிலையத்தின் தற்போதைய அமைப்பை மதிப்பீடு செய்து, விரிவாக்கத்திற்கான செலவுகள் மற்றும் சாத்தியத்தன்மை பற்றிய கற்கைத் தேவைப்பாடு தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளோம்.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தின் பாகங்களைப் பிரித்தெடுக்கும் வசதிகளை நிறுவுதல்

மத்தள விமான நிலையத்தில், விமானத்தின் பகுதிகளைப் பிரித்தெடுக்கும் ஒரு நிலையத்தை நிறுவுமாறு நாம் பரிந்துரை செய்துள்ளோம். இதற்குரிய ஆரம்பக் கட்டப் பரிசோதனைகளை நடத்தி, அவை தொடர்பான தேவைப்பாடுகளை நாம் விமான நிலைய தொழிற்பாட்டாளருக்கு சமர்ப்பித்துள்ளோம்.

தூதரக அனுமதிக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறையின் (SOP) உருவாக்கம்

CAASL பாதுகாப்பு அமைச்சு (MOD) மற்றும் ஏனைய 18 பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன், இலங்கைக்கு வருகை தருகின்ற, இலங்கைக்குள் தொழிற்படுகின்ற வெளிநாட்டு இராணுவ அல்லது அரச வானூர்த்தி மற்றும் இலங்கை ஆட்புல எல்லையைக் கடந்து பறக்கின்ற விமானம், வெளிநாட்டு விமானத்திற்கான தூதரக அனுமதியை வழங்கும் வகையில், நிலையான செயற்பாட்டு நடைமுறை (SOP) ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

5LNC குறைபாடுகளைச் சீராக்குதல்

ICAO வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐந்தெழுத்துப் பெயர் குறியீடுகளுடன் (5LNC) உள்ள கொழும்பு முனைய விமான நிலையப் பரப்புக்குள் இருக்கின்ற முனையத்தை இரண்டெழுத்து வழி புள்ளி வடிவமைப்பாளர் என்பதற்கு மாற்றி, அந்த மாற்றங்களை ICAO சர்வதேச குறியீடுகள் மற்றும் பாதைக் குறித்துரைப்புகள் (ICARD) முறைமையில் பதிவு செய்துள்ளோம்.



ATM தற்செயல் திட்டம்: பதிப்பு 2 வெளியிடப்பட்டது

நாம் கொழும்பு விமானத் தகவல் பிராந்தியத்திற்காக (FIR) ATM தற்செயல் திட்டத்தின் மட்டம் 2 இன் பதிவு இரண்டினை அபிவிருத்தி செய்து பிரசுரித்துள்ளோம். இது, தற்செயலான சந்தர்ப்பங்களில் தடையின்றி விமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.



ATM தற்செயல் திட்டமிடல் CAASL இனால் ஆதரிக்கப்பட்டது

நாம் விமான வழிச்செல்லல் சேவை வழங்குநர்களுக்கு (ANSP) ATM தற்செயல் திட்டங்களின் மட்டம் 1 இன் இலக்கை அபிவிருத்தி செய்யவும், அங்கீகாரம் பெறவும் நிபுணத்துவ வழிகாட்டலை வழங்கியுள்ளோம்.



விமானத்துறை மருத்துவம் தொடர்பான பரந்தளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2023 இல் சமூகத்துடனான ஈடுபாடு மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் என்பன முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. விமானக் கைத்தொழில்துறை, விமானத்துறை மருத்துவம் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதில் துடிப்பாகப் பங்குபற்றியது. இந்த முன்னெடுப்புகளானவை, விமானத்துறை தொழில் வல்லுநர்களுக்கு கல்வியூட்டுவதற்காக மாத்திரமன்றி, விமானத்துறையின் ஆரோக்கியம் மற்றும் நலன் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி பொதுமக்களையும் அறிவுறுத்தியது. தொடர் பிரசாரங்கள், கருத்தரங்குகள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஊடாக இக்கைத்தொழில்துறை சுகாதார நடைமுறைகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விமானத்துறையில் மருத்துவத் தயார்நிலை என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய முக்கியமான தகவல்களைப் பரப்பியது. இந்த முன்னெடுப்புகளானவை, சுகாதார விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கலாசாரம் ஆகியவற்றை அனைத்துப் பங்குதாரர்கள் மத்தியிலும் வளர்த்தெடுக்குக்கும் கலாசாரத்திற்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

அழைப்பு முறையில் நியமனத்தை நிறுவுதல்

2023 ஆம் ஆண்டு முக்கியமான அடைவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்கீழ், அதிநவீன சந்திப்பு அழைப்பு முறை ஒன்று அமுல்படுத்தப்பட்டது. இந்த முறைமையானது, விமானத்துறை மருத்துவப் பரிசோதனைகளின் செயன்முறையை அட்டவணைப்படுத்தல், நியமனங்களை நெறிமுறைப்படுத்தல், விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களின் காத்திருக்கும் நேரங்களைக் குறைத்தல் போன்ற முக்கிய விடயங்களை உருவாக்கியது. இந்தப் புதுமையான விடயம், வினைத்திறனை உயர்த்துதல் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த விமானப் போக்குவரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பாதுகாப்பை வழங்கின.

புதிய விமான மருத்துவப் பரிசோதனையாளர்களின் பதவி

அதிகரித்து வருகின்ற விமான மருத்துவ சேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய மருத்துவப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டதன் மூலம் பணிப்படை விரிவாக்கப்பட்டது. இதன் மூலம், போதுமானளவு தகுதிவாய்ந்த தொழில் வல்லுநர்கள் கைத்தொழில் துறையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. நியமிக்கப்பட்ட பரிசோதகர்கள் தகுதிகளின் உயர் தராதரங்களையும், நெறிமுறை நடத்தையையும் உறுதி செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொறுப்பை கடுமையான தெரிவு அளவுகோல்கள் மூலம் அமுல்படுத்தப்பட்டன.

விமான மருத்துவத்தில் தரமுயர்த்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் தரநிலைகள்

மாறுபட்ட தன்மையுடைய விமானத்துறை மற்றும் மருத்துவ விஞ்ஞானங்கள் என்பவற்றை அங்கீகரித்து, விமான மருத்துவத்திலுள்ள ஒழுங்குபடுத்தல் தரநிலைகள் விரிவான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டன. இந்த விடயமானது, விமானத்துறை அதிகார சபைகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைப்புகள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டன. இந்த தர நிலைகள் தொழில்நுட்ப மேம்படுத்தல்களுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவது மாத்திரமன்றி, வளர்ந்துவரும் ஆரோக்கியம் சம்பந்தமான சவால்களுக்குப் பதிலளிக்கக்கூடியவர்களாகவும் அமைந்திருந்தன.

ஆளில்லா விமான அமைப்புகள் (ட்ரோன் தொழிற்பாடுகள்)

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறை சட்டத்தின் பிரிவு 80 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரைப்புகளுக்கு அமைவாக, சிவில் விமானத்துறைப் பணிப்பாளர் நாயகம், இலங்கையின் ஆட்புல எல்லைக்குள் தொழிற்படுகின்ற ஆளில்லா அனைத்து விமானங்களையும் மேற்பார்வையிடவும், ஒழுங்குபடுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளார்.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

விமானத்துறை வளர்ச்சி

தொற்றுநோய் மற்றும் பொருளாதாரச் சரிவினால் ஏற்பட்ட சவால்களைத் தொடர்ந்து, 2023 ஆம் நிதியாண்டு காலப்பகுதியின் போது, இலங்கையில் UAS துறையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் காணப்பட்டன. இந்த வளர்ச்சியானது, முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில், தொழிற்பாட்டு அங்கீகாரங்களில் கணிசமான அளவு வளர்ச்சியும் புதிய ட்ரோன் பதிவுகளும் சான்றளிக்கின்றன.

வழங்கப்பட்ட ட்ரோன் தொழிற்பாட்டு அங்கீகாரங்களின் எண்ணிக்கை



மேலும், இந்தக் காலகட்டத்தில், இலங்கை சிவில் விமானத்துறை அதிகார சபை, குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியுள்ளது. இவை, UAS பயிற்சி நிறுவனங்களுக்குப் பொருத்தமான தரநிலைகளை வரையறை செய்கின்ற SLCAP 4600 உருவாக்கத்தையும் உள்ளடக்குகிறது. இதனைவிட CAASL UAS தொழிற்பாடுகளை நிருவகிக்கும் விதிகள் மற்றும் தரநிலைகளை உள்ளடக்கி, SLCAP 053 என்பதை வெற்றிகரமாக உருவாக்கியது.

தொழிற்துறையிலுள்ள சாத்தியப்பாடுகளை அங்கீகரித்து CAASL சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) தேவைப்பாடுகள் மற்றும் பிராந்திய அபிவிருத்திகள் என்பவற்றுக்கு அமைவாக எதிர்காலத் திட்டங்களை வகுத்துள்ளது. இந்த மூலோபாய முன்னெடுப்புகள் எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தத் தயாராக உள்ளன.

வழங்கப்பட்ட ட்ரோன் அங்கீகாரங்கள்

1,812	3,478
2022	2023

பதிவுசெய்யப்பட்ட ட்ரோன் - உள்நாட்டு உரிமையாளர்கள்

1,091	1,388
2022	2023

பதிவு செய்யப்பட்ட ட்ரோன் - வெளிநாட்டு உரிமையாளர்கள்

1,526	2,388
2022	2023

தகைமை அபிவிருத்தி

2023 ஆம் ஆண்டில் நாம் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளவும் மேற்கொண்டுள்ளதோடு, கடந்த காலங்களில் உள்ள அரசாங்க மட்டுப்பாடுகளைக் கடந்து ஒரு குறிப்பிடப்பட்ட மைல்கல்லை அடைந்துள்ளோம். மேம்படுத்தப்பட்ட திறன் மற்றும் செயற்பாட்டுத் திறனைக் கொண்ட ஆட்சேர்ப்புகளை மீண்டும் தொடங்குவதற்கான எமது அமைச்சரவை ஒப்புதல்கள் பெறப்பட்டன. நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், நாம் தொழில்முறை அபிவிருத்தி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கான வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் என்பவற்றையும் வழங்கியுள்ளோம். இந்த முன்னெடுப்புகள், சிவில் விமானத்துறையின் தரத்தில் சிறப்பு மற்றும் வளர்ச்சிக்கு அடித்தளம் இடுகின்ற எமது தொடர்ச்சியான கல்வியூட்டும் செயற்பாட்டுக்கான எமது கடமைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

விமானக்குழு உரிமம் வழங்கும் பயிற்சிப் பட்டறை

நாம் தெற்காசியப் பிராந்திய முன்னெடுப்பு (SARI) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய விமானத்துறைப் பாதுகாப்பு முகவராண்மை (EASA) ஆகியவற்றுடன் இணைந்து, விமானக் குழு உரிமத்திற்கான தரநிலை 72ஐ அமுல்படுத்துவது தொடர்பிலான விரிவான பயிற்சிப் பட்டறையை முன்னெடுத்தோம். இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு EASA வில் உள்ள நிபுணர் ஒருவர் தலைமை வகித்தார். இப் பயிற்சிப் பட்டறையின் நோக்கம் யாதெனில், சர்வதேச விமானப் பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு அமைவாக தரநிலையை உறுதிப்படுத்துவது தொடர்பில் விரிவான வழிகாட்டலையும், பயிற்சியையும் வழங்குதலும் விமானத்துறை ஆட்களுடைய தகைமையை அதிகரித்தலுமாகும்.

விமானத்துறை சான்றுப்படுத்தல் தொடர்பான முயற்சிகள்

நாம் விமானக் குழு உரிம தரநிலைகளை உயர்த்தும் முயற்சிகளை IS 72 க்கு அமைவாக பொதுவான விமானத்துறை மற்றும் சர்வதேச விமான நிறுவனங்களை உள்ளடக்கிய புதிய திறன் பரீட்சைப் படிவங்களை அறிமுகம் செய்துள்ளோம். இதற்கு மேலதிகமாக, பயிற்சி நிறுவனங்களுக்கு சான்றுபடுத்தும் செயன்முறைகளை ஆரம்பிப்பதற்காக முன் விண்ணப்பம் மற்றும் விதிமுறையான விண்ணப்பம் ஆகிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. பரிசோதகர் திறமையை வலுப்படுத்துவதற்காக நாம் தனிப்பட்ட உரிமம் தொடர்பான பரீட்சை மற்றும் பறக்கும் திறன் தொடர்பான பயிற்சிகளுக்கு மேலதிகமாக PEL பரிசோதகர் அடிப்படைப் பயிற்சி நெறியை ஒழுங்கமைப்பு செய்துள்ளோம். மேலும், வெளிநாட்டு தேசிய விண்ணப்பதாரிகளுடைய தகைமைகளை மதிப்பீடு செய்யவும், இறுக்கமான தொழில்நுட்ப தரை நிலைகளை உதிப்படுத்தவும், விமானப் பணிக்குழாம் தொழில்நுட்பப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

எமது அனுசரணையில் SARI பகுதி ஆ பயிற்சிப் பட்டறை

நாம் இலங்கையில் SARI பகுதி ஆ ஒழுங்குவிதிகளின் செயற்பாட்டு முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தோம். இப் பயிற்சிப் பட்டறையின் போது எமது செயற்பாட்டுத் தரைநிலை IS-M உடனான இணக்கம் பற்றி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைவிட, பாகிஸ்தானில் பகுதி ஆ அமுல்படுத்துகையை அங்குள்ள பரிசோதகர் ஒருவர் அவதானித்துள்ளார்.

விமானத்துறைப் பாதுகாப்பு கலாசாரப் பயிற்சிப் பட்டறி

இலங்கையில் விமானத்துறைப் பங்குதாரர்களிடையே வலுவான பாதுகாப்புக் கலாசாரம் ஒன்றை உருவாக்கும் நோக்கில், எமது விமானத்துறைப் பாதுகாப்புப் பிரிவு ICAO உடைய விமானத்துறைப் பாதுகாப்பு கலாசாரப் பயிற்சிப் பட்டறையை நடத்துமாறு வேண்டிக் கொண்டது. ICAO எமது ஆட்களுக்கு பாதுகாப்புக் கலாசாரம், நாளாந்த நடவடிக்கைகளில் தலையீடு மற்றும் ஒரு அமைப்புக்குள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடத்தைகள் பற்றிக் கற்றுக்கொடுத்தது.

புதிதாக இணைந்து கொண்டவர்களுக்கான விரிவான விமானத்துறை மருத்துவப் பயிற்சியை நடத்துதல்

புதிதாக இணைந்து கொண்டவர்களுக்கு திறன்களைத் தரமுயர்த்தவும், விமானத்துறை மருத்துவத் தொழில் வல்லுநர்களுக்கு தொடர்ச்சியாக அறிவை ஊட்டும் முகமாக இவ்வருடம் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தத் திட்டங்கள், மருத்துவத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் சுகாதாரம் தொடர்பான கரிசனைகள் என்பவற்றுக்கு அழுத்தம் வழங்கி, விமானத்துறையின் நவீன அபிவிருத்திகள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதனுடைய இலக்கு யாதெனில், விமானத்துறை மருத்துவப் பயிற்சியாளர்கள், அவர்களின் துறையில் உள்ள மாறுபட்ட பரப்பில் உறுதியாக இருப்பதை வழிப்படுத்துவதாகும்.

விமானத்துறைப் பொதுச் சுகாதார சர்வதேச மன்றங்களின் துடிப்பான பங்கேற்பு

விமானத்துறைப் பொதுச் சுகாதாரம் தொடர்பில், அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற சர்வதேச மன்றங்களில் விமானத்துறை சார்ந்த பிரதிநிதிகள் துடிப்புடன் பங்குபற்றினர். இவ்வகையான மன்றங்களானது, ஒத்துழைப்புடனான பேச்சுவார்த்தைகள், அறிவுப் பரிமாற்றம் மற்றும் விமானத்துறைச் சுகாதாரத்துறையில் உள்ள உலகளாவிய சவால்களை நிவர்த்தி செய்வதற்கான பங்குடமைகளை ஸ்தாபித்தல் என்பவற்றுக்கு இது தளமாக அமைகிறது. இந்த முன்னேற்றகரமான தலையீடானது, சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், எதிர்காலத்தில் அதிக ஒத்துழைப்பை ஏற்படுத்த ஒரு தளமாக அமைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அடைவுகள், விமானத்துறைக் கைத்தொழில் சிறப்புத் தேர்ச்சி, ஒத்துழைப்பு மற்றும் நலன்புரி ஆகிய விடயங்களை விமானப் பயணத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் வழங்குகின்ற அர்ப்பணிப்பைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த மைல்கற்கள், ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு என்பவற்றிலான முன்னேற்றத்தைக் குறித்துக் காட்டுவது மட்டுமன்றி, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட விமானத்துறையின் உலகளாவிய அணுகுமுறையையும், அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை வழங்குவதற்கு ஒன்றாக இணைந்து வேலை செய்வதன் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கிறது.



தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

தகைமை அபிவிருத்தி

பணியாளர்களின் சான்றிதழ்கள் மற்றும் விமானத்துறைப் பயிற்சி அமைப்புகள், அவர்களுடைய தொழிற்பாடுகளில் தொடர்ச்சியாக கண்காணிப்பைச் செலுத்துவது பாதுகாப்பிலுள்ள குறைபாடுகளைத் தீர்க்கின்றன.

2,408
விமானிகளின் உரிமங்கள்

54
அறிவுறுத்துநர் மற்றும் தேர்வாளர் மதிப்பீடுகள்

28
தரை பயிற்றுவிப்பாளர்களுக்கான அனுமதிகள்

43
வெளிநாட்டு உரிமம் சரிபார்த்தல் சான்றிழ்கள்

186
விமானப் போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாட்டு உரிமங்களும் மதிப்பீடுகளும்

342
அறிவுறுத்துநரின் தேர்வாளர் மதிப்பீடுகள்

501
விமானப் பணியாளர்களின் சான்றிதழ்

5,057
சிவில் விமானத்துறை அறிவு தொடர்பான பரீட்சைகள்

விமானப் பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ், அவற்றின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் பாதுகாப்பு குறைபாடுகளைத் தீர்த்து வைத்தல்

15
பயிற்சி அமைப்புகளின் தொடர்ச்சியான பரிசோதனைகள்

1
ஆசிய விமானத்துறை மத்திய நிலையம்

2
திறந்த ஆகாயங்கள்

4
பிளையின் ஏன்ஜல் பிளைட் அக்கடமி

2
ஸ்ரீலங்கன் TRTO

3
பிளை சதர்ன் (பிரைவேட்) லிமிட்டெட்

1
லக்வின் ஏவியேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

1
அக்குராய் ஏவியேஷன் அக்கடமி

1
ரெட் வேர்ட் ஏவியஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

1
இலங்கை தொழில்நுட்பப் பயிற்சி

2
ATC பயிற்சி அமைப்பு - விமான நிலைய மற்றும் விமானத்துறை அக்கடமி

1
செமியுலேட்டர் ஒப் எயார்போர்ட் ஏவியேஷன் அக்கடமி

5
உரிமக் கண்காணிப்புகள்

விமானப் பணியாளர் உரிமம் (தனியார் விமானிகளின் உரிமம்) (PPL) /எயார்லைன் போக்குவரத்து விமான உரிமம் ATPL என்பவற்றுக்கான அறிவு தொடர்பான பரீட்சைகளை நடத்துதல்

573
விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் அளவு - PPL

1,653
விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் அளவு - ATPL

விமானப் பராமரிப்பு ஆட்களுக்கான அறிவுசார் பரீட்சைகளை நடத்துதல்

2,650

விநியோகிக்கப்பட்ட வினாத்தாள்களின் அளவு - AML

ELPC க்காக நடைமுறைப் பரீட்சைகளை நடத்துதல்

127

ELPC க்களின் எண்ணிக்கை

அரச பாதுகாப்பு நிகழ்ச்சிகளை அமுல்படுத்தல்

8

அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முகாமையாளர்களின் எண்ணிக்கை

8

பயிற்சிப் பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக் கையேடுகளின் எண்ணிக்கை

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திகள்

CAASL இன் நாம், கணிசமான அளவு தகவல் தொழில்நுட்ப முறைமைகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இது, அலுவலகத் தொழிற்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதும், துல்லியத்தன்மையை உறுதிப்படுத்துவதுமாகும். உதாரணமாக, நிகழ்நிலை தனிப்பட்ட அனுமதி வழங்குதல், எழுத்துப் பரீட்சைக்கான நிகழ்நிலை முறைமை, அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஒசு குறியீடு என்பன அறிமுகப்படுத்தப்பட்டமையினால், நிர்வாகச் செயன்முறைகள் நெறிப்படுத்தப்பட்டதோடு, பணியாளர்களின் முகாமைத்துவத்தின் வினைத்திறனும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல்

புதிய தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பானது, எமது சேவை விநியோகத் தகைமையைக் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தியுள்ளதுடன், பணி முகாமைத்துவத்தையும் உயர்த்தியுள்ளது. அத்துடன், தொடர்பாடல் ஊடகங்களையும், குழு ஒத்துழைப்பையும் மேம்படுத்தியுள்ளது. இந்தத் தொழில்நுட்ப மேம்படுத்தல்கள், நெகிழ்வான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதுடன் நிறுவனம் முழுவதும் வினைத்திறனையும் அதிகரித்துள்ளது.

நம்பகமான அட்டை வழங்கும் முறைமையின் அமுல்படுத்துகையானது, அடையாள அட்டைகளை வழங்குதல், கையாளுதல், பாதுகாப்பை உயர்த்துதல், நிர்வாக வேலைப்பழுவைக் குறைத்தல் போன்ற விடயங்களை நெறிப்படுத்தியுள்ளது. கண்காணிப்புத் திட்ட மேற்பார்வை முறைமையானது, ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுடன் நாம் இணங்கி நடப்பதை மேற்பார்வை செய்து, உறுதிப்படுத்தவும், உரிய நேரத்திலான கண்காணிப்பு மற்றும் தலையீடு என்பனவற்றையும் வழங்குகிறது. இதனைவிட AVSEP நிகழ்நிலைப் பரீட்சை முறைமையானது, மதிப்பீடுகளை வினைத்திறனாகவும், பாதுகாப்பாகவும் நடத்த ஒரு களத்தை வழங்கியுள்ளதுடன், பாதுகாப்புடன் தொடர்புடைய ஆட்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கவும், சான்றுபடுத்தல் செயன்முறையை நெறிப்படுத்தவும் உதவியுள்ளது. இவ் அனைத்து தொழில்நுட்ப மேம்படுத்தல்களும், கூட்டாக இணைந்து, அதிகூடிய வினைத்திறனாக பயனுள்ள மற்றும் ஒருங்கிணைந்த நிறுவனக் கட்மைப்புக்குப் பங்காற்றியுள்ளன.

ICT முன்னெடுப்புகளை மேம்படுத்துதல்

எமது ICT பிரிவானது, வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பங்களைத் தழுவுவதற்கான முன்னெடுப்புகளைத் தழுவியுள்ளது. இவையனைத்தும், துடிப்பான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. இச்சாதனைகள் CAASL அலுவலக அடையாள அட்டையை விருத்தி செய்தல் மற்றும் நுகர்வோர் பின்னூட்டல் ஆய்வு முறையை ஸ்தாபித்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. இதனைவிட, PEL உரிமம் வழங்கும் QR முறைமை, நிகழ்நிலை மருத்துவ முறைமை போன்றன வினைத்திறனை அதிகரித்துள்ள அதேவேளை, எமது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் இணையப் பாதுகாப்பு வழிமுறைகளையும் வலுப்படுத்தியுள்ளது.

கணினி அடிப்படையிலான பரீட்சைகளை நடத்துதல்

நாம், விமானத்துறைப் பாதுகாப்புத் துறையினருக்குச் சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு, கணினி அடிப்படையிலான பரீட்சை முறையொன்றை வெற்றிகரமாக அறிமுகம் செய்துள்ளோம். இந்த முன்னெடுப்பானது, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் இருந்து வருகின்ற ஆட்களை உள்வாங்குவதுடன், நேரத்தை மீதப்படுத்துவது மாத்திரமன்றி, சான்றுபடுத்தல் செயன்முறைகளை நவீனமயப்படுத்தி, காகித நுகர்வைக் குறைத்து, பரீட்சை முறைமைகளையும் தரமுயர்த்தியுள்ளது.

கணினி அடிப்படையிலான கலையகம்

கணினி அடிப்படையிலான கற்பித்தல் நிகழ்ச்சிக் கொள்கை அடிப்படையில் CAASL க்கு புதிதாக சேர்க்கப்பட்ட ஆட்களுக்கு இணைக்கப்பட்ட திகதியிலிருந்து முதல் இரண்டு வாரங்களில் அவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி கல்வியூட்டப்படும். இந்த நிகழ்ச்சியானது, முன்னர் CAASL யின் வளவாளர்களின் உதவியுடன் HRPM பிரிவினால் நடத்தப்பட்டது. நேர ஒதுக்கம் மற்றும் வளங்களின் இருப்பு என்பவற்றில் குறிப்பிடத்தக்களது சவால்கள் ஏற்பட்டன.

இந்தச் சவாலை நிவர்த்தி செய்யும் பொருட்டு, HRPM பிரிவு, இந்தக் கற்பித்தல் நிகழ்ச்சியை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய நிகழ்நிலை தளம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்
பணியாளர்களை ஊக்குவித்தல்

CAASL இன் நாம், பணியாளர்களின் ஊக்குவிப்பை எமது நிறுவன நெறிமுறைகளின் அடிப்படை அம்சமாகக் கருதி, வலுவான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளோம். பல்வேறுபட்ட முன்னெடுப்புகள் மற்றும் முயற்சிகள் மூலம் நாம் பணியாளர்கள் தமது திறன்களை முழுமையாக உணரும் வகையில், பெறுமதியான, ஆதரவளிக்கப்படுகின்ற, ஊக்குவிக்கப்படுகின்ற ஒரு சுற்றாடலை பணித்தளத்தில் உணர்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது இந்த அர்ப்பணிப்பானது, பணியாளர்களிடையே அபிவிருத்தியில் மேற்கொள்ளப்படும் முதலீடு, வழங்கப்படும் விரிவான பயிற்சித் திட்டங்கள், நோக்குநிலை நிகழ்ச்சி அமர்வுகள் என்பன எமது பணியாளர்களுக்கு அவர்களிடமுள்ள திறமைகளை வெளிக்கொண்டுவரவும், தமது வகிபாகங்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் ஊக்குவிக்கும் சான்றாக அமைகிறது. மேலும், எமது நிறுவனத்தில், குழுப்பணி மற்றும் ஈடுபாடு என்பனவற்றை ஊக்குவிக்கும் வகையில், வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகள் மூலம் சமூக உணர்வு மற்றும் ஒத்துழைப்பையும், தொழிலாளர்கள் மத்தியில் வலுப்படுத்தியுள்ளோம். பணியாளர்கள் ஊக்குவிப்புக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், நாம், தனிப்பட்ட நலன்களை ஊக்குவிப்பது மாத்திரமன்றி, எமது நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்திறனையும் வலுப்படுத்துகின்றோம்.

CAASL இன் பணிப்படையை மேம்படுத்துதல்

விமானத்துறைப் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தலில் நாம் திறமையான மற்றும் நம்பகமான அதிகார சபையாக வருவதற்கு கடமைப்பட்டுள்ளோம். இது, எமது கடுமையான ஆட்சேர்ப்புச் செயன்முறை புதிதாக இணைத்துக் கொள்ளப்படும் பணியாளர்கள் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும், தேர்வு முறைகளையும் புரிந்துகொள்வதை உறுதி செய்வதன் மூலம் சான்றுபடுத்தப்படுகிறது. திறமையான பணிப்படையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ள எமது HRPM பிரிவு, தடையற்ற தொழிற்பாடுகளையும், ஒழுங்குபடுத்தல் செயன்முறைகளையும் உறுதிப்படுத்தும் வகையில், மூலோபாய ரீதியாக வெற்றிடங்களை நிரப்புகின்றது. திறமையான ஆட்களை உள்வாங்குவது மற்றும் அவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய விடயங்களில் முதலீடு செய்வதன் மூலம், நாம் விமானத்துறைப் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் சிறப்பம்சங்களை அதியுயர் தரநிலைகளை உறுதிப்படுத்தும் எமது கடமைப்பாட்டைப் பேணி வருகின்றோம்.

பணியாட்களுக்கு ஆதரவளிக்கும் முன்னெடுப்புகள்

நாம், பணியாளர்களுக்கான தங்குமிடங்களை, பொழுதுபோக்கு வசதிகளுடன் மேம்படுத்துவதை ஒப்புக்கொள்கிறோம். ஒழுங்காகப் பராமரிக்கப்பட்ட தங்குமிடங்களையும், வசதிகளையும், எமது பணி உறுப்பினர்கள் அனுபவிப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை ஆகிய விடுதிகளைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பணியாளர்களிடையே நட்புறவை மேம்படுத்துவதற்காக விமானத்துறை “ரிதம் நைட் 2023” என்ற இசை நிகழ்ச்சி போன்ற கூட்டுறவு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வருகிறது. இந்தப் புதுமையான முன்னெடுப்பானது, பங்குபற்றுநர்களை மகிழ்விப்பது மாத்திரமன்றி, CAASL மற்றும் அதன் பங்குடமை நிறுவனங்களிடையே உறவுகளை வலுப்படுத்துவதோடு, ரூபா 2.5 மில்லியனுக்கு அதிகமான இலாபத்தைப் பெற வழிவகுத்தது. இதனைவிட, நாம், நலன்புரி நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் வகையில், விளையாட்டரங்கு ஒன்றை உருவாக்க காணியொன்றை ஒதுக்கி, அதனை விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இந்த முயற்சியானது, எமது பணியாளர்களுக்கு விசேட மற்றும் விரிவான ஆதரவை வழங்குவதன் மூலம், பணியிடம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய இரண்டுக்கும் சிறந்த சூழலை உருவாக்குகிறது.

ஆதன முகாமைத்துவம்

எமது HRPM வினைத்திறனாக வழங்கப்பட்டுள்ள வசதிகளை மேற்பார்வை செய்து, எமது இலக்குகளுக்கு ஆதரவளித்து நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தொழிற்பாட்டுத் தொடர்ச்சிக்கு உதவுகிறது. சட்ட உத்தரவுகளின்படி, நிர்வாக ஆவணப்படுத்துகை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் ஏனைய விமான நிலையங்களின் ஆதன விபரங்களை உள்ளடக்குகிறது. குறிப்பாக, எதிர்கால முயற்சிகளுக்கு வழிகாட்டும் வகையில், முக்கியமான வசதிகளை வரையறுத்து, திருத்தப்பட்ட அரச வர்த்தமானி ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு மைல்கல்லாக இங்கு குறிப்பிடப்பட வேண்டியது யாதெனில், மதம்பெல்ல வானொலி வழிசெலுத்துதல் உதவிக் காணிக்கான எமது உரிமையை உறுதிப்படுத்தும் உரித்து அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ளோம் என்பதாகும்.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

பணியாளர்களை ஊக்குவித்தல்

எமது பணியாளர்களுக்கான CAASL இன் பங்களாக்கள்

மட்டக்களப்பு சுற்று பங்களா CAASL இனால் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், எமது பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் தள்ளுபடி விலையில் அதனை வழங்கி வருகிறது. இந்த பங்களாவை விருந்தினர்கள், விமான நிலையத்தின் அழகிய காட்சிகளைப் பார்வையிடும் அதேவேளை, தனித்துவமான அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். அண்மையில் நடைபெற்ற புனரமைப்பு ஒன்றைத் தொடர்ந்து, தற்போது வீரவில சுற்று பங்களா ஒதுக்கீடுகளுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு, மேம்படுத்தப்பட்ட வசதிகளும், புத்துணர்ச்சியூட்டும் இடங்களும் உள்ளன. இரண்டு பங்களாக்களையும், பொதுமக்களும் CAASL இன் பணியாளர்களும் தள்ளுபடி விலையில் பெற்றுக்கொண்டு மறக்க முடியாத அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மனிதவள மேம்பாட்டு நிலைப்படம் - 2023

நாம், பணியாளர்களின் திறன்களையும், அறிவையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட விரிவான பயிற்சித் திட்டங்களை நோக்கி, ரூபா 3,332,403.63 நிதியை ஒதுக்கியுள்ளோம். இந்த முதலீடானது, 37 உறுப்பினர்களுக்கு நிகழ்நிலை அமர்வுகளையும், 46 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பௌதீக மற்றும் நிகழ்நிலைப் பயிற்சிகளையும், 237 உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளையும் வழங்கியது. இதனைவிட, 20 உறுப்பினர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கூட்டங்கள், மகாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றில் பங்குபற்றினர். இந்த முன்னெடுப்புகள் அனைத்தும், கைத்தொழில்துறை முன்னேற்றங்களைத் தழுவக்கூடிய திறன்மிக்க ஆட்களை உருவாக்குகின்ற எமது கடமைகளை வெளிப்படுத்துகிறது. மேலும், எமது மனிதவள அபிவிருத்தி முன்னெடுப்புகள், புதிய ஆட்சேர்ப்புகளுக்கான அறிமுக நிகழ்ச்சி மற்றும் நிர்வாக ஆட்களுக்கான நிகழ்நிலை பயிற்சிகளையும் உள்ளடக்கியது. 39 உதவி முகாமையாளர்கள், சிவில் விமானத்துறை மேற்பார்வையாளர்கள், கனிஷ்ட முகாமையாளர்கள் ஆகியோருக்கு பொது மக்களை மையமாகக் கொண்ட பேசும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. மேலதிகமாக 18 வாகனச் சாரதிகள், CIDA யினால் வழங்கப்பட்ட பாதுகாப்பான ஓட்டுநர் பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் CAASL இன் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்

வெளிநாட்டுப் பயிற்சிகள் / கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகள்
15

வெளிநாட்டுக் கூட்டங்கள் / மாநாடுகள் / கருத்தரங்குகள் மற்றும் நிகழ்நிலைக் கூட்டங்கள் / மகாநாடுகள்
20

உள்நாட்டுப் பயிற்சிகள் / கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகள்
14

வெளிநாட்டு மேற்பார்வைகள்
16

நிறுவனத்திற்குள் நடத்தப்பட்ட உள்நாட்டு நிகழ்ச்சிகள் (உபதேசங்கள் உட்பட)
09

நிகழ்நிலைப் பயிற்சி / கருத்தரங்கு / பயிற்சிப் பட்டறைகள்
11

விளையாட்டு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள்

தமிழ் - சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டம்

தமிழ் - சிங்கள புத்தாண்டுக் கொண்ட்டம் CAASL இன் முழு பணிக்குழாமின் பங்குபற்றுதலுடன் 2024 ஏப்ரல் 27 இல் நடைபெற்றது.

“குவன்சேவா தா்மபிஹிவந்தனா” பொசன் பாடல் நிகழ்ச்சி

“குவன்சேவா தா்மபிஹிவந்தனா” பொசன் பாடல் நிகழ்ச்சி CAASL இன் முழு பணிக்குழாமின் பங்குபற்றுதலுடன் 2023 ஜூன் 02 இல் நடைபெற்றது.

எசல சீல பாரமிதா போட்டி நிகழ்ச்சி

“எசல சீல பாரமிதா போட்டி நிகழ்ச்சி” எசல போயா தினத்தில் அதாவது 2023 ஜூலை 01 இல் நடைபெற்றது.

வருடாந்த கிரிக்கட் விளையாட்டுப் போட்டி

2023 ஆம் ஆண்டுக்கான *CAASL* இன் வருடாந்த கிரிக்கட் விளையாட்டுப் போட்டி, 2023 ஆகஸ்ட் 26 அம் திகதி நடைபெற்றது.

கிறிஸ்மஸ் கரோல்ஸ்

நத்தார் தின நிகழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக, 2023 டிசம்பர் 20 ஆம் திகதி எமது அதிகார சபையின் பணியாட்களினால் “கிறிஸ்மஸ் கரோல்” கீதம் இசைக்கப்பட்டது.

ஏவியேஷன் ரிதம் நைட் 2023

CAASL வளாகத்தில் “ஏவியேஷன் ரிதம் நைட் 2023” நிகழ்ச்சி, விமரிசையாக 2023 நவம்பர் 10 ஆம் திகதி நடைபெற்றது.

தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

நிதி சிறப்பம்சங்கள்

இலக்குகளும் பணிகளும்

CAASL க்குள் நிதி மற்றும் வருவாய் முகாமைத்துவப் பிரிவு நிறுவனத்தின் நிதி ஆரோக்கியத்தையும், தொழிற்பாட்டு வினைத்திறனையும் உறுதி செய்யும் ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது. சபையின் பரந்த இலக்குகளையும், நோக்குகளையும் அடைந்து கொள்ளும் வகையில் CAASL இன் நிதி மற்றும் வருவாய்களை மூலோபாய அடிப்படையில் முகாமைத்துவம் செய்வது எமது முதன்மையான இலக்காகும்.

முக்கிய பணிகள்

வருவாய்களைச் சேகரித்தலும் செலவுகளைக் கட்டுப்படுத்தலும்: எமது பிரிவானது, உரிமக் கட்டணங்கள், தண்டப்பணங்கள், தீர்வைகள் உள்ளடங்கலாக, அனைத்து மூலங்களிலும் இருந்து சேகரிக்கப்படுகின்ற வருவாய்களைத் துல்லியமாக மேற்பார்வை செய்கிறது. அதேவேளை, நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, வள ஒதுக்கீட்டின் உச்ச பயன்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் செலவுகளையும் கையாண்டு வருகிறது.

நிதி எதிர்வுகூறல் மற்றும் வரவு செலவுத் திட்டமிடல் : முன்னேற்றமடைந்த நிதி எதிர்வுகூறல், வரவு செலவுத் திட்டமிடல் நுட்பங்கள் என்பன ஊடாக நாம் CAASL உடைய மூலோபாய இலக்குகளுக்கு அமைய, வலுவான நிதித் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். இது, எதிர்பார்க்கப்படும் வருமானத் துறைகள், மதிப்பிடப்பட்ட செலவுகள், தொடர்ந்து செல்லும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக வளங்கள் மற்றும் முன்னெடுப்புகளை வினைத்திறனாக மேற்கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

நிதிய முகாமைத்துவம்: நாம் நிதி ஒதுக்கீட்டை விவேகமாகவும், திறனாகவும் கையாள்வதன் மூலம், CAASL உடைய நிதிச் சொத்துக்களுக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகின்றோம். இது, நிதிய வளப் பயன்பாட்டின் உச்சத்தன்மை, திரும்பல்களை ஈட்டுவதற்கான மூலோபாய முதலீடுகள் மற்றும் தொழிற்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான பணப்புழக்கத்தைக் கையாளுதல் என்பவற்றை உள்ளடக்கும் அதேவேளை, ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகளையும் பின்பற்றி வருகின்றோம்.

நிதியிடல் அறிக்கை : வருமானக் கூற்றுக்கள், ஐந்தொகைகள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் உள்ளடங்கலாக, துல்லியமான மற்றும் உரிய நேரத்திலான நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பை எமது பிரிவு கொண்டுள்ளது. இந்த அறிக்கைகள் CAASL இன் நிதிச் செயற்திறன் பற்றி பெறுமதியான கணிப்பீடுகளைத் தருவதுடன், முகாமைத்துவ மற்றும் பங்குதாரர்களுக்கு சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவும் உதவுகிறது.

பொருள் விபரப்பட்டியல் முகாமைத்துவம் : வினைத்திறனான விபரப்பட்டியல் முகாமைத்துவம் வளப் பயன்பாட்டின் உச்ச பயன்பாடு மற்றும் செலவுகளைக் குறைத்தல் ஆகியன தொடர்பில் முக்கியத்துவம் பெறுகிறது. நாம் கொள்முதல், களஞ்சியப்படுத்தல், சொத்துக்களைப் பங்கீடு செய்தல் உள்ளடங்கலாக, பொருள் பட்டியல் கட்டுப்பாட்டுச் செயன்முறையை மேற்பார்வை செய்வதன் மூலம், CAASL இன் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்கு வினைத்திறனாக ஆதரவளிக்கின்றோம்.

வாகனப் படை முகாமைத்துவம் : CAASL இன் வாகனப் படையை முகாமைத்துவம் செய்வது இப்பிரிவின் மற்றுமொரு முக்கிய கடமையாகும். இது, வாகனக் கொள்முதலை மேற்பார்வை செய்தல், பராமரித்தல், ஒழுங்கமைப்புத் தரநிலைகளுக்கு அமைவாக இணங்கி நடத்தல், தொழிற்பாட்டுத் தயார்நிலையை உறுதிப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குவதுடன், இவற்றின் மூலம் அதிகார சபையின் நகர்வுத் தன்மைக்கு வினைத்திறனாக உதவுகிறது.

எம்பாக்கேசன் தீர்வை சேகரிப்பு மற்றும் பங்கிடலைக் கையாளுதல்

2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் நாம் விமான நிறுவனங்களிடமிருந்து பிரயாணிகளின் எம்பாக்கேசன் தீர்வைகளைச் சேகரிக்கும் பொறுப்பையும், வருவாய்களைப் பங்கிடும் பொறுப்பையும் கொண்டுள்ளோம். சபை சார்பாகச் செயற்படும் எமது நிதி மற்றும் வருமான முகாமைத்துவப் பிரிவு இந்த முக்கியமான பணியை நிறைவேற்றி வருகிறது.

2023 ஆம் ஆண்டில் 2,306,653 பிரயாணிகள் தமது எம்பாக்கேசன் தீர்வை செலுத்தும் கடப்பாட்டைப் பூர்த்தி செய்தனர். அதனைத் தொடர்ந்து, நாம் சேகரிக்கப்பட்ட நிதியங்களை கீழே தரப்பட்ட வகையில் பல்வேறு நிறுவனங்களிடையே பங்கீடு செய்துள்ளோம்.

நிறுவனம்	தொகை (ரூ. மில்.)
பொதுத் திறைசேரி	38,828
எயார்போட் அன்ட் ஏவியேஷன் (பிரைவேட்) லிமிடெட்	8,970
இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி	4,485
சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை	329

நிதித் தொழிற்பாடு பற்றிய கண்ணோட்டம்

எமது நிறுவன இலக்குகளை அடைந்துகொள்வதற்கு, வலுவான நிதி நடைமுறைகளின் நிதி முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட நாம், CAASL இல் எமது நிதித் தொழிற்பாடுகளை வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் முகாமைத்துவம் செய்ய முக்கியத்துவம் அளித்து வருகின்றோம். இங்கு எமது நிதிச் செயற்பாடுகள் தொடர்பான பல்வேறு அம்சங்களின் விரிவான கண்ணோட்டம் பெறப்பட்டுள்ளது.

உரிய நேரத்திலான பூர்த்தியும், அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்: குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்டம் 2023 ஆம் ஆண்டுக்கான நிதி அதிகாரத்தைக் கையளிக்கும் கூற்று மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக் கூற்று உள்ளடங்கலாக, அனைத்து நிதி அறிக்கைகளையும் துல்லியமாகத் தயார் செய்து சமர்ப்பித்துள்ளோம். இவ்வறிக்கைகள் துல்லியத்தன்மை மற்றும் ஒழுங்குபடுத்தல் தரநிலைகளுக்கான இணக்கம் என்பனவற்றை உறுதிப்படுத்தும் வகையில் சமர்ப்பிப்புக்கு முன்பாகக் கடுமையான மீளாய்வு மற்றும் அங்கீகாரத்திற்குச் செல்கிறது.

பல்வேறுபட்ட வருமானத் துறைகள் : நாம் எமது தொழிற்பாட்டைக் கொண்டு நடத்தவும், எமது ஆணையைப் பூர்த்தி செய்யவும் பலதரப்பட்ட மூலங்களில் இருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்கிறோம். இந்த வருமானத் துறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

- வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம்: இலங்கைக்கு வெளியே நடத்தப்பட்ட விற்பனைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்
- எம்பாக்கேசன் தீர்வை தொடர்பான தீர்வைக் கட்டணம் : விமானங்களின் சேவைகளைப் பெறும் பொருட்டு, பணியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள்
- ஒழுங்குபடுத்தல் சேவைகள் மூலம் பெறப்பட்ட வருமானம்: ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக வழங்கப்பட்ட சேவைகளில் இருந்து ஈட்டப்பட வருமானம்
- வட்டி வருமானம்: பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட்ட வட்டி

- ஏனைய தொழிற்பாடற்ற வருமானம்: முக்கியமான தொழிற்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அப்பால் வேறுபட்ட மூலங்களில் இருந்து பெறப்படும் மேலதிக வருமானம்

கொடுப்பனவு வழிமுறைகள் : CAASL இல் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு எமது பங்குதாரர்களுக்கு பல்வேறுபட்ட தெரிவு முறைகளை வழங்கியுள்ளோம். இந்த முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- காசு அல்லது காசோலை மூலமான கொடுப்பனவுகள்: தலைமைக் காரியாலயத்தில் அமைந்துள்ள குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுக் கரும பீடங்களில் காசு அல்லது காசோலையினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள்
- நிகழ்நிலைக் கொடுப்பனவுகள் : கடன் அட்டை, பற்று அட்டை ஊடாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு சௌகரிகமான நிகழ்நிலைக் கொடுப்பனவு வசதிகள்
- லங்கா QR முறைமை: இலத்திரனியல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக, லங்கா QR இலக்கத்தைப் பயன்படுத்தல்
- நேரடி USD கொடுப்பனவுகள் : சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்காக அமெரிக்க டொலர்களிலான நேரடிக் கொடுப்பனவு வசதி
- நேரடி வைப்புகள்: எம்பாக்கேசன் தீர்வைகளின் சேகரிப்புக்காக குறித்துரைக்கப்பட்ட வங்கிகளில் மேற்கொள்ளப்படும் நேரடி வைப்புக்கான ஏற்பாடு

திரண்ட நிதியத்துக்கான பங்களிப்பு : நாம் தேசிய அபிவிருத்திக்காக எமது கடப்பாட்டைப் பூர்த்தி செய்யும் வகையில், 2023 ஆம் ஆண்டு திரண்ட நிதியத்திற்கு ரூபா 04 பில்லியனை குறிப்பிடத்தக்க வருவாயாக வழங்கினோம். இந்தப் பங்களிப்பானது, அரசாங்க வருமானத்தை உயர்த்தியதுடன், தேசிய பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் உதவியது.

வரி சமரசம் : எமது சட்டக் கடப்பாட்டைப் பூர்த்தி செய்யும் வகையில், வருமான வரி, பெறுமதிசேர் வரி (VAT), முத்திரைக் கட்டணம் ஆகிய பல்வேறு வரிகளை உடனடியாகச் செலுத்தியுள்ளோம். வரி ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடப்பதன் மூலம் சட்டத் தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதோடு, ஒழுங்கமைப்பு அதிகார சபைகளுடன் சாதகமான உறவையும் வளர்த்து வருகின்றோம்.

வினைத்திறனான நிதி முகாமைத்துவம் : CAASL இல் நாம், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி போன்ற மதிப்பு மிக்க வங்கி நிறுவனங்களில் கணக்குகளை வைத்திருப்பதன் மூலம், விவேகமான நிதி முகாமைத்துவ நடைமுறைகளைத் தழுவியுள்ளோம். இந்தக் கணக்குகள், திறைசேரி உண்டியல்கள், குறுங்கால மற்றும் நீண்டகால சேமிப்புகளுக்கான மூலோபாய முதலீட்டை எளிதாக்குவதுடன், நிதிச் சொத்துக்களைப் பாதுகாக்கும் அதேவேளை, திரும்பல்களையும் அதிகரிக்கிறது.

கடுமையான நிதி நெறிமுறைகளைப் பின்பற்றுதல் : CAASL இல் நாம், நிதி நேர்மைத்திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கு முன்னிலை அளிக்கிறோம். இந்தக் கொள்கைகளைப் பின்பற்றும் எமது கடப்பாடானது, நிலையான நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம், இலங்கையில் சிவில் விமானத்துறையை மேம்படுத்தும் எமது இலக்கை அடைந்துகொள்ள உதவுகிறது. விவேகமான நிதி முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் துல்லியமான கண்காணிப்பு என்பவற்றின் ஊடாக நாம் நிதி வளங்களைப் பாதுகாத்து, நாட்டின் விமானக் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கிறோம்.

வருமானம் 2023 எதிர் 2022



மீண்டெழு செலவுகள் 2023 எதிர் 2022



மூலதனச் செலவுகள் 2023 எதிர் 2022



உண்மையான எதிர் வரவு செலவுத் திட்டம்



தொழிற்பாட்டுச் சிறப்பம்சம்கள்

நிதி சிறப்பம்சங்கள்

2023 ஒரே பார்வையில்

பங்குரிமைகளும் பொறுப்புக்களும்

ரூபா 6,908 மில்.
மூலதன மற்றும் ஒதுக்குகள்

ரூபா 400 மில்.
நடைமுறையற்ற பொறுப்புகள்

ரூபா 3,579 மில்.
நடைமுறைப் பொறுப்புகள்



சொத்துக்கள்

ரூபா 2,823 மில்.
நடைமுறையற்ற சொத்துக்கள்

ரூபா 8,064 மில்.
நடைமுறைச் சொத்துக்கள்

இலாபம்

ரூபா 4,557 மில்.
வரிக்கு முந்திய இலாபம்

ரூபா 4,348 மில்.
வரிக்குப் பின்னரான இலாபம்

நீல வானில் பசுமைப் பெறுபேறு

நிதிக் கூற்றுக்கள் 2023

	பக்கங்கள்
விரிவான வருமானக் கூற்று	58
நிதி நிலைமைக்கூற்று	59
பங்குரிமை மாற்றக்கூற்று	60
காசுப்பாய்ச்சல் கூற்று	61
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்	62
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2023	88
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் - 2023	101
ஒழுங்குபடுத்தல் வரையறை	112
CAASL தொழில்நுட்ப செயற்திறனின் சுருக்கம்	114
முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் - 2023	116
போக்குவரத்து விபரங்கள்	122
குறிப்புகள்	123

நிதிக் கூற்றுக்கள்

விரிவான வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	2023 ரூபா	2022 ரூபா
வருமானம்		5,530,639,804	4,268,302,673
செயற்பாட்டு வருமானம்	23	4,267,567,018	3,685,224,914
செயற்பாடு அல்லாத வருமானம்	23	1,263,072,786	583,077,759
செலவினம்		973,440,478	880,544,000
ஊழியர் செலவுகள்	24	432,938,638	457,965,055
கூட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்	25	8,063,683	7,507,808
பயிற்சி செலவுகள்	26	9,659,098	1,474,290
நிர்வாகம் மற்றும் ஏனைய செலவுகள்	27	365,420,451	260,886,367
தேய்மானம்	29	149,698,845	137,374,730
அருவச் சொத்துக்களின் கடன் தீர்ப்பனவு	30	7,638,729	15,314,716
பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் தேய்மானச் செலவுகள்	31	21,034	21,034
வரிக்கு முந்திய இலாபம்		4,557,199,326	3,387,758,673
வருமான வரிச் செலவுகள்	28	208,920,729	644,515,000
வருடத்திற்கான இலாபம்		4,348,278,597	2,743,243,673
ஏனைய விரிவான வருமானம்			
ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகளை மீள் அளவீடு செய்வதனால் ஏற்படும் இலாபம் / (நட்டம்)		(14,345,234)	53,276,761
மீள்மதிப்பீட்டு உபரிகள்		105,418,708	113,812,525
வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்		4,439,352,071	2,910,332,959

62 முதல் 87 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.

நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	2023 ரூபா	2022 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்	29	2,781,375,720	2,233,315,801
அருவச் சொத்துக்கள்	30	13,503,511	11,929,326
பயன்பாட்டு உரிமைச் சொத்து	31	294,471	315,505
புத்துருவாகும் வேலை - மூலதனம்	32	12,266,660	460,920,979
நிலையான வைப்பு - ஊழியர் நலன்புரி, சமூகப் பாதுகாப்பு நிதி		158,564	142,337
பிற்போடப்பட்ட வரி - சொத்துக்கள்		15,596,177	15,596,177
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		2,823,195,103	2,722,220,125
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்புக்கள்		8,774,766	9,789,941
வியாபார வருமதிகள்	33	355,783,337	293,915,448
ஊழியர் கடன்கள்	34	60,762,235	55,980,902
நிதிச் சொத்துக்கள்	35	3,737,658,343	3,352,854,505
முற்பணம், முற்கொடுப்பனவுகள், ஏனைய பெறத்தக்கவை	36	449,910,755	545,422,389
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	37	3,451,520,415	2,592,346,695
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		8,064,409,851	6,850,309,880
மொத்தச் சொத்துக்கள்		10,887,604,954	9,572,530,005
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்			
அரச மானியங்கள்	38	551,162,338	554,889,603
தக்கவைத்த வருமானம்	39	6,137,845,749	5,826,217,782
மீள்மதிப்பீட்டு உபரிகள்	40	219,231,233	113,812,525
மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்		6,908,239,320	6,494,919,909
பொறுப்புக்கள்			
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	41	100,184,510	63,470,341
குத்தகைப் பொறுப்புக்கள்	42	281,554	307,013
ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பொறுப்புகள்	43	268,222,208	72,495,410
ஓய்வுப் பயன் கடப்பாடு	44	31,578,115	21,196,052
மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்		400,266,387	157,468,816
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வியாபார சென்மதிகள்	45	3,656,608,443	2,372,386,756
ஏனைய சென்மதிகள்	46	41,764,655	65,701,955
வருமான வரி பொறுப்புக்கள்	47	(119,273,851)	482,052,569
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		3,579,099,247	2,920,141,280
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		10,887,604,954	9,572,530,005

62 முதல் 87 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டவையாகும் என நான் சான்றளிக்கிறேன்.

இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு அமைய இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

சீ. ஏ. ஜீ. ராஜன்
பதில் பணிப்பாளர் - நிதி மற்றும்
வருவாய் முகாமைத்துவம்



ஏ. வீ. எம். சாகர கொட்டகதெனிய (ஓய்வுநிலை)
இலங்கை சிவில் சிமானப் போக்குவரத்து
அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி



ஜீ.எஸ்.விதானகே
தலைவர்

2024 ஜூன் 24

நிதிக் கூற்றுக்கள்

உரிமையாண்மை மாற்றங்களின் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	அரசாங்க மானியம் ரூபா	மறுமதிப்பீட்டு உபரி ரூபா	தக்கவைக்கப்பட்ட வருவாய் ரூபா	மொத்தம் ரூபா
2022 ஜனவரி 01 இல் உள்ளவாறு இருப்பு	558,598,755	-	4,029,697,348	4,588,296,103
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	2,743,243,673	2,743,243,673
சொத்துக்களின் மீள்மதிப்பீடு	-	113,812,525	-	113,812,525
ஒருகிணைந்த நிதிக்கான மாற்றங்கள்	-	-	(1,000,000,000)	(1,000,000,000)
வருடத்திற்கான கடன் தீர்ப்பனவு	(3,709,152)	-	-	(3,709,152)
ஓய்வுப் பயன் கடப்பாடுகளின் மீள் அளவீடு	-	-	53,276,761	53,276,761
2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு	554,889,603	113,812,525	5,826,217,782	6,494,919,909
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	4,348,278,597	4,348,278,597
சொத்துக்களின் மீள்மதிப்பீடு	-	105,418,709	-	105,418,709
வருடத்திற்கான கடன் தீர்ப்பனவு	(3,709,152)	-	-	(3,709,152)
அரச மானியங்களை அகற்றுதல் - சொத்துக்கள்	(18,113)	-	-	(18,113)
அனுமதிக்கப்படாத உள்ளீட்டு வரி - VAT	-	-	(22,305,396)	(22,305,396)
ஓய்வுப் பயன் கடப்பாடுகளின் மீள் அளவீடு	-	-	(14,345,234)	(14,345,234)
ஒருங்கிணைக்கப்பட்ட நிதிப் பரிமாற்றங்கள்	-	-	(4,000,000,000)	(4,000,000,000)
2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு	551,162,338	219,231,233	6,137,845,749	6,908,239,320

62 முதல் 87 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	2023 ரூபா	2022 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
வரிக்கு முந்திய பொதுவான செயற்பாடுகள் மீதான இலாபம் / (நட்டம்)		4,557,199,326	3,387,758,674
செம்மையாக்கல்கள்			
தேய்மானம் - நடைமுறை வருடம்	29	149,698,845	137,374,730
தேய்மானம் - அனுமதிக்கப்படாத VAT மீது		2,174,170	-
அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு	30	7,638,729	15,314,716
பயன்படுத்தும் உரிமைச் சொத்துக்கள் மீதான தேய்மானச் செலவுகள்	31	21,034	21,034
அரச மானியங்கள் மீதான கடன் தீர்ப்பனவு	38	(3,709,152)	(3,709,152)
முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம்	23	(1,235,493,468)	(541,714,111)
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் விற்பனை மூலமான நட்டம்		862,778	3,550
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் விற்பனை மூலமான இலாபம்		(106,226)	-
குத்தகைப் பொறுப்புக்களின் நிதிக் கிரயம்	41	6,682	4,296
வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களுக்கான ஏற்பாடு	43	4,426,929	12,250,981
கடந்த வருட சீராக்கங்கள்		(22,305,396)	-
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முந்திய செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)		3,460,414,251	3,007,304,717
இருப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு		1,015,176	(4,165,735)
வியாபார வருமதிகளில் (அதிகரிப்பு)/குறைவு	33	(61,867,890)	(167,687,169)
ஊழியர் கடன்களில் (அதிகரிப்பு)	34	11,324,547	(9,687,605)
முற்பணம், முற்கொடுப்பனவு, ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு	36	110,568,853	(2,994,691)
வியாபாரம் மற்றும் ஏனைய சென்மதிகளில் அதிகரிப்பு	45/46	1,260,284,386	708,788,990
செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு		4,781,739,323	3,531,558,507
செலுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவுகள் (பணிக்கொடை)	44	(8,390,100)	(3,963,765)
வருமான வரிக்கு எதிரான VAT மீள் செலுத்துகை		(8,250,934)	
செலுத்தப்பட்ட வருமான வரி	47	(765,282,046)	(309,550,100)
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு		3,999,816,244	3,218,044,642
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் கையகப்படுத்தல்	29	(48,449,971)	(25,086,196)
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் அனுமதிக்கப்படாத VAT		(98,947,675)	-
அருவச் சொத்துக்களின் கையகப்படுத்தல்	30	(3,046,875)	-
மூலதன புத்துருவாகும் வேலையில் (அதிகரிப்பு) குறைவு	32	(5,599,264)	8,701,220
ஏனைய மூலதனங்களை மீளப்பெறல் / (கையகப்படுத்தல்)	35	(484,262,387)	(2,070,348,167)
பெறப்பட்ட வட்டி		1,303,788,920	701,514,519
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம்		196,298	90,193
விபத்து விசாரணை நிதியில் அதிகரிப்பு / (குறைவு)		(621,823)	(1,055,481)
வங்கி உத்தரவாதத்தில் அதிகரிப்பு / (குறைவு)		196,332,395	12,276,000
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசு		859,389,618	(1,373,907,913)
நிதியீட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
ஒன்றித்த நிதியத்துக்கான பங்களிப்பு		(4,000,000,000)	(1,000,000,000)
வீரவில காணிக்கான குத்தகைக் கொடுப்பனவு	42	(32,141)	(26,784)
நிதியீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு		(4,000,032,141)	(1,000,026,784)
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு / (குறைவு)		859,173,720	844,109,945
ஆண்டுத் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும்	37	2,592,346,694	1,748,236,749
ஆண்டு இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	37	3,451,520,415	2,592,346,694

62 முதல் 87 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாகும்.

நிதிக் கூற்றுக்கள்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

1.1. பொது

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது, அதன் பதிவு அலுவலகம் இல. 152/1 மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்கவில் அமைந்துள்ளது.

1.2 செயற்பாட்டின் உருவாக்கம் மற்றும் தன்மை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது, 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி 2002 ஆம் ஆண்டின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் இலக்கம் 34 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. சிவில் விமான சேவையில் பாதுகாப்பு, செயற்திறன், ஒழுங்குமுறை. சுற்றாடலில் அதன் தாக்கத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகக் கருதப்படுகிறது. 2002 ஆம் ஆண்டின் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டம் 2010 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானச் சட்ட இல.14 இல் உள்ள சட்ட விதிகளின் கீழ் பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருந்தக்கூடிய சர்வதேச தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இது இணங்குகிறது.

2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட முதன்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வேறுவகையில் எடுத்துக்கூறினால் அன்றி, இந்தக் கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வருடங்களிலும் ஒருசீராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.1 தயாரிப்புக்கான அடிப்படை

சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள், நிதிநிலைமைக் கூற்று, இலாப அல்லது நட்டக் கூற்று ஏனைய விரிவான வருமானம் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கியிருப்பதோடு, இவையனைத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA ஸ்ரீலங்கா) உருவாக்கப்பட்ட இலங்கையின் கணக்கியல் தரநிலைகளைப் (SLFRS மற்றும் LKAS) பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 இணக்கக்கூற்று

(அ) சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள், நிதிநிலைமைக் கூற்று, இலாப அல்லது நட்டக் கூற்று ஏனைய விரிவான வருமானம் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கியிருப்பதோடு, இவையனைத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (CA ஸ்ரீலங்கா) உருவாக்கப்பட்ட இலங்கையின் கணக்கியல் தரநிலைகளைப் (SLFRS மற்றும் LKAS) பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) CAASL முகாமைத்துவம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. 2024 பெப்ரவரி 26 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய இக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2.3 அளவீட்டின் அடிப்படை

நிதிநிலை அறிக்கைகள் வரலாற்றுச் செலவு அடிப்படையின் கீழ் தயாரிக்கப்பட்டு, நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியின் மூலம் அளவிடப்பட்டன.

2.4 அதிகார சபையின் செயற்பாட்டு மற்றும் செயற்படுத்தல் நாணயம்

இங்கு தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் அனைத்தும் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளன. இது, அதிகார சபையின் தொழிற்பாட்டு மற்றும் செயற்படுத்தும் நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கொடுக்கல் வாங்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று இருந்த நாணயப் பரிமாற்ற வீத அடிப்படையில் தொழிற்பாட்டு நாணயத்திற்குப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2.5 நிறுவனத் தொடர்ச்சி

நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, நிர்வாகமானது, தொடர்ந்து இயங்கும் அதிகார சபையின் திறனை மதிப்பீடு செய்துள்ளது. அதிகார சபையானது, அதன் சட்டபூர்வமான கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதுமான ஆதாரங்களைக் கொண்டுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் செயற்பாட்டு இருப்பில் தொடர வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, செயற்பாடுகளைக் கலைத்தல் அல்லது நிறுத்துதல் ஆகியவற்றின் தேவையை அதிகார சபையானது எதிர்பார்க்கவில்லை. அதற்கிணங்க, நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் அதிகார சபை தொடர்ந்தியங்கும் அடிப்படையைப் பின்பற்றுகிறது.

2.6 முக்கியமான கணக்கியல் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள், அனுமானங்கள்

அதிகார சபையின் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு, அறிக்கையிடப்பட்ட திகதியில் வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் தற்செயலான பொறுப்புகளை வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் அறிக்கையின் அளவுகளைப் பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை எதிர்காலத்தில் பாதிக்கப்படும் சொத்து அல்லது பொறுப்பின் முற்கொணர் தொகைக்கு பொருள் சீராக்கத்தைத் தேவைப்படும் விளைவுகளை ஏற்படுத்தலாம். இந்தக் காரணிகளில் தீர்ப்பு, மதிப்பீடு, அனுமானங்கள் ஆகியவை அடங்கும்.

2.6.1 தீர்ப்புக்கள்

அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கையில், முகாமைத்துவம், நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளை முக்கியமாகப் பாதிக்கின்ற மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களுக்கு அப்பால் கீழே தரப்பட்டுள்ள தீர்ப்புகளைப் பயன்படுத்தியுள்ளது.

2.6.2 மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

எதிர்காலம் தொடர்பான முக்கிய அனுமானங்கள் மற்றும் அறிக்கையிடல் திகதியில் உள்ள நிச்சயமற்ற ஏனைய முக்கிய ஆதாரங்கள், அடுத்த நிதியாண்டுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முற்கொணர் அளவுகளில் பொருள் சீராக்கலை ஏற்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க இடர் கீழே விவாதிக்கப்படுகிறது.

(அ) நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி

நிதி நிலை அறிக்கையில் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகளின் நியாயப் பெறுமதிகள் செயலில் உள்ள சந்தைகளில் இருந்து பெறப்பட முடியாத நிலையில், கழிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் மாதிரி மற்றும்/அல்லது கணித மாதிரிகளைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய பல்வேறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி அவை தீர்மானிக்கப்படுகின்றன. இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள், சாத்தியமான இடங்களில் காணக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெறப்படுகின்றன. மேலும், கவனிக்கக்கூடிய சந்தைத் தரவு கிடைக்காத இடங்களில், சீர்மதிப்புகளை நிறுவுவதற்கு தீர்ப்பு தேவைப்படுகிறது.

இந்தக் காரணிகள் பற்றிய அனுமானங்களில் ஏற்படும் மாற்றங்கள், நிதிச் சொத்துகளின் அறிக்கையிடப்பட்ட நியாயப் பெறுமதியைப் பாதிக்கலாம். திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அவற்றின் முகப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துகளின் இருப்புநிலைத் திகதியில் (திறைசேரி உண்டியல்கள்) சுமந்து செல்லும் பெறுமதி ரூ. 3,959,239,350/- (2022 ரூ. 3,474,976,963/-)

(ஆ) வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் பெறுமதி

இலங்கை கணக்கீட்டுத் தரநிலை 19 (LKAS) இன்படி சூத்திர முறையைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டங்களின் கிரயம் தீர்மானிக்கப்படுகிறன.

வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் ஐந்தொகைத் திகதியில் முற்கொணர் பெறுமதி ரூ. 31,578,115/- (2022 ரூ. 21,196,052/-).

(இ) நியாயப் பெறுமதி

நியாயப் பெறுமதி என்பது, எந்த நிர்ப்பந்தமும் இல்லாத, அறிவும், விருப்பமும் உள்ள தரப்பினருக்கிடையே ஒரு சுயாதீன பரிவர்த்தனையின் போது ஒப்புக்கொள்ளப்படும் பரிசீலனையின் அளவாகும். ஒரு நிதிக் கருவி ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அதன் நியாயப் பெறுமதி பொதுவாக செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட பரிசீலனையின் பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், செயலிலுள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்பட்ட நிதிச் சொத்தின் நியாயமான பெறுமதி பொதுவாக ஏல விலை மற்றும் செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்பட்ட நிதிப் பொறுப்புக்கு, சீர்மதிப்பு பொதுவாக கேட்கும் விலையாகும். காசுக்கு சமமானவை மற்றும் குறுகிய கால முதலீடுகள் போன்ற நிதிக் கருவிகளுக்கு, இந்தக் கருவிகளின் முற்கொணர் மதிப்பு அண்ணளவாக நியாயப் பெறுமதியாகும்.

(ஈ) வருமான வரி

அதிகார சபையானது, வருமான வரிகளுக்கு உட்பட்டதுடன், வருமான வரிகளுக்கான ஒட்டுமொத்த ஒதுக்கீட்டைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க தீர்ப்பு தேவைப்படுகிறது.

குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

3. நிதிச் சொத்துக்கள்

அதிகார சபையானது, அதன் நிதிச் சொத்துக்களை பின்வருமாறு வகைப்படுத்துகிறது: கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, முதிர்வு வரை வைத்திருப்பவை மற்றும் விற்பனைக்குக் கிடைப்பவை என்பனவாகும். இந்த வகைப்பாடு, ஆரம்ப அங்கீகாரமாக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன், அந்த முதலீடுகள் எதற்காக கைக்கொள்ளப்பட்டதோ அதன் நோக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

3.1 வகைப்படுத்தல்

(அ) கடன்களும் பெறத்தக்கவைகளும்

கடன்கள் மற்றும் பெறத்தக்கவை, நிலையான அல்லது உறுதியான கொடுப்பனவுகளைக் கொண்ட வழிமுறையற்ற நிதிச் சொத்துக்களாகும். அவை, செயலிலுள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படவில்லை. சாதாரண பரிவர்த்தனைகளில் இருந்து பெறப்படும் பெறத்தக்கவைகளும் இந்த வகையில் வகைப்படுத்தப்படுவதுடன், அவை சேதநட்டத்திற்காக மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

(ஆ) முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்

முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் என்பது, நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வுகளைக் கொண்ட வழிமுறையற்ற நிதிச் சொத்துக்களாகும். அத்துடன்,

- ஆரம்ப அங்கீகாரத்தின் மீது அதிகார சபையானது இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமானப் பெறுமதியில் குறிப்பிடுகிறது: அல்லது,
- அதிகார சபை விற்பனைக்கு உள்ளது எனக் குறிப்பிடுகிறது, மற்றும்
- இது கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வரையறைகளைப் பூர்த்தி செய்கிறது.

முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் மீதான வட்டிகள் வருமான அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் அவை “முதலீட்டு வருமானம்” என அறிவிக்கப்படுகின்றன.

(இ) விற்பனைக்குக் கிடைக்கும் நிதிச் சொத்துக்கள்

விற்பனைக்குக் கிடைக்கும் முதலீடுகள் என்பது, காலவரையற்ற காலத்திற்கு வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துகள் ஆகும், அவை பணப்புழக்கம் அல்லது வட்டி விகிதங்கள், மாற்று விகிதங்கள் அல்லது பங்கு விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது கடன்களாக வகைப்படுத்தப்படாத தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் விற்கப்படலாம். மற்றும் பெறத்தக்கவைகள், முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் அல்லது இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்களாகும்.

3.2 அங்கீகாரம் மற்றும் அளவீடு

நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன, மேலும், அனைத்து நிதிச் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படாத நிலையில், அவற்றின் கையகப்படுத்துதலுக்கு நேரடிக் காரணம் பரிவர்த்தனைச் செலவுகளாகும். இலாபம் அல்லது நட்டங்கள் மூலம் நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள், ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. மேலும், பரிவர்த்தனைச் செலவுகள் வருமான அறிக்கையில் செலவழிக்கப்படுகின்றன. நிதிச் சொத்துக்களிடமிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகிவிட்டால் அல்லது மாற்றப்பட்டால் அவை அங்கீகரிக்கப்படாமலிருக்கும்.

நிதிக் கூற்றுக்கள்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

விற்பனைக்குக் கிடைக்கும் நிதிச் சொத்துக்கள் பின்னர் நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புக் கிரயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தப்பட்ட பண மற்றும் நாணயமற்ற பத்திரங்களின் நியாயப் பெறுதியில் ஏற்படும் மாற்றங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கும் என வகைப்படுத்தப்பட்ட பத்திரங்கள், விற்கப்படும்போது அல்லது பலவீனமடையும்போது, ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட திரட்டப்பட்ட நியாயப் பெறுமதியில் சரிசெய்தல் நிதிச் சொத்துகளின் நிகர இலாபங்கள்/ நட்டங்களாக வருமான அறிக்கையில் சேர்க்கப்படும்.

பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் விற்பனைக்குக் கிடைக்கும் பத்திரங்கள் மீதான வட்டி வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3.2.1 நியாயப் பெறுமதியைத் தீர்மானித்தல்

கடன்கள் மற்றும் முற்பணங்களின் நியாயப் பெறுமதி மற்றும் வங்கிகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான பொறுப்புகள், கடன் தரம், காசுப்பாய்ச்சல், செலவுகளை கணக்கில் கொண்டு, ஒப்பந்தப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சல் அடிப்படையில் தற்போதைய மதிப்பு மாதிரியைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது.

வர்த்தக வரவுகள் மற்றும் சென்மதிகளின் முற்கொணர் மதிப்பு, குறைவான குறைபாடு வழங்கல் ஆகியவை அவற்றின் நியாயப் பெறுமதியை அண்ணளவாக மதிப்பிடுவதாகக் கருதப்படுகிறது.

3.2.2 அங்கீகாரமற்றதாக்குதல்

ஒரு நிதிச் சொத்து, (அல்லது பொருந்தக்கூடிய வகையில் நிதிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது ஒரே மாதிரியான நிதிச் சொத்துக்கள் குழுமத்தின் ஒரு பகுதி) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகாரமற்றதாக்கப்படும்.

- ஆதனத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமைகள் காலாவதியாகும் போது,
- அதிகார சபையானது ஆதனத்திலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றியுள்ளது அல்லது பெறப்பட்ட காசுப்பாய்ச்சலை கடந்து செல்லும் ஏற்பாட்டின் கீழ் உள்ளடக்கி மூன்றாம் தரப்பினருக்கு பொருள் தாமதமின்றி முழுமையாக செலுத்துவதற்கான கடமையை ஏற்றுக்கொள்கிறது, அல்லது.

(அ) ஆதனத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை அதிகார சபையானது கணிசமாக மாற்றியிருப்பின், அல்லது

(ஆ) அதிகார சபையானது சொத்தின் அனைத்து இடர்களையும், வெகுமதிகளையும் கணிசமாக மாற்றவில்லை அல்லது தக்க வைத்துக் கொள்ளவில்லை, ஆனால், முதலீட்டின் கட்டுப்பாட்டை மாற்றியுள்ளது.

ஒரு சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமையை அதிகார சபை மாற்றிவிட்டாலோ கடந்து செல்லும் ஏற்பாட்டிற்குள் நுழைந்து விட்டாலோ, அந்தச் சொத்துக்கான ஆபத்துகள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமாக மாற்றவோ அல்லது தக்கவைத்துக் கொள்ளவோ அல்லது அதன் கட்டுப்பாட்டை மாற்றவோ இல்லை என்றால், அதிகார சபை தொடர்ச்சியாக அதில் அதிகார சபையானது ஒரு தொடர்புடைய பொறுப்பையும் அங்கீகரிக்கிறது. மாற்றப்பட்ட சொத்து மற்றும் தொடர்புடைய பொறுப்பு ஆகியவை அதிகார சபை தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடமைகளைப் பிரதிபலிக்கும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன. மாற்றப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதத்தின் வடிவத்தை எடுக்கும் தொடர்ச்சியான சொத்தின் அசல் முற்கொணர் தொகையின் குறைந்த அளவிலும், அதிகார சபை திருப்பிச் செலுத்த வேண்டிய அதிகபட்ச மதிப்பின் அளவிலும் அளவிடப்படுகிறது.

4. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

4.1 கிரயம் / மீள்மதிப்பீடு

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியன திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேதநட்டங்கள் என்பவற்றைக் கழித்து அதன் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. கிரயமானது, குறிப்பிட்ட சொத்தைக் கைக்கொள்வதுடன், நேரடியாக உறப்பட்ட செலவினையும் உள்ளடக்குகிறது. சுயமான நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் பொருட்களின் கிரயம், நேரடியான தொழிலாளர் செலவு மற்றும் குறிப்பிட்ட சொத்தினை அதனுடைய தீர்மானிக்கப்பட்ட பாவனைக்காக தொழிற்பாட்டு நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக உறப்பட்ட செலவுகள் அனைத்தையும் உள்ளடக்கும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியைப் பதிலீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயமானது, குறிப்பிட்ட அப்பகுதி அதிகார சபையிலிருந்து வருகின்ற போது அல்லது அதன் கிரயத்தை உண்மையான மதிபிடக்கூடிய சந்தர்ப்பம் எழுகின்ற போது அதிலிருந்து எதிர்கால பொருளாதார இலாபங்கள் சாத்தியமானவை எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் பதிலீடு செய்யப்பட்ட பொருளின் கொண்டு செல்லும் தொகை அங்கீகரிக்கப்படும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நாளாந்த சேவைக்கான கிரயங்கள் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்குள் வரும் பொருட்கள் உடனடுத்து மறுமதிப்பீடு செய்யப்படும் போது, அத்தகைய சொத்துக்களின் முழுமையான வகையும், மறுமதிப்பீடு செய்யப்படும். அதிகார சபையானது, 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சொத்துக்களின் மறுமதிப்பீடு செய்யப்படும் காலம் தொடர்பான கொள்கையை ஒவ்வொரு மூன்று வருடங்கள் என்பதிலிருந்து ஒவ்வொரு ஐந்து வருடங்கள் என மாற்றியுள்ளது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி, முன்கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து பொருளளவில் வித்தியாசப்படுகின்ற போது மேலதிக மறுமதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்குள் வரும் பொருட்கள் உடனடுத்து மறுமதிப்பீடு செய்யப்படும் போது, அத்தகைய சொத்துக்களின் முழுமையான வகையும், மறுமதிப்பீடு செய்யப்படும். அதிகார சபையானது, 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் சொத்துக்களின் மறுமதிப்பீடு செய்யப்படும் காலம் தொடர்பான

கொள்கையை ஒவ்வொரு மூன்று வருடங்கள் என்பதிலிருந்து ஒவ்வொரு ஐந்து வருடங்கள் என மாற்றியுள்ளது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி, முன்கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து பொருளளவில் வித்தியாசப்படுகின்ற போது மேலதிக மறுமதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும்.

4.2 தேய்மானம்

தேய்மானமானது, தேய்மானத் தொகையைக் கருத்திற்கொண்டு கணிக்கப்படும். இத்தேய்மானத் தொகை என்பது, ஒரு குறிப்பிட்ட சொத்தினுடைய கிரயம் அல்லது குறிப்பிட்ட கிரயத்திற்குப் பதிலீடு செய்யப்பட்ட ஏனைய தொகையிலிருந்து அதன் எஞ்சிய பெறுமதியைக் கழித்து வருவதாகும். தேய்மானமானது, நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி, இலாப அல்லது நட்டத்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியினுடைய பாவனைக் காலத்தின் மீது மதிப்பிடப்படும். சொத்து ஒன்று கைக்கொள்ளப்படும் வருடத்தில் தேய்மானமானது, குறிப்பிட்ட சொத்து ஒன்று பாவனைக்கு எடுக்கப்பட்ட திகதியிலிருந்து விகிதாசார அடிப்படையில் கணிப்பிடப்படுவதோடு, குறிப்பிட்ட சொத்து இல்லாமல் ஆக்கப்படுகின்ற திகதியில் எந்தவொரு தீர்மானமும் அறவிடப்படுவதில்லை. குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் தேய்மானம் குத்தகைக் காலத்தின் குறுகிய பகுதி மற்றும் அவற்றின் பாவனைக்காலம் என்பவற்றின் அடிப்படையில் கணிப்பிடப்படும். காணிகள் தேய்மானத்திற்கு உட்படாது.

சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலம் பின்வருமாறு:

கட்டடங்கள்	–	15-40 வருடங்கள்
கொள்கலன் கட்டமைப்புகள்	–	5-10 வருடங்கள்
மோட்டார் வாகனங்கள்	–	8-15 வருடங்கள்
பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணங்கள்	–	4-10 வருடங்கள்
தளபாடங்களும் பொருத்திகளும்	–	4-10 வருடங்கள்
ஏனைய நிலையான சொத்துக்கள்	–	4-10 வருடங்கள்

பயன்படுத்தக் கிடைக்கும் சொத்தின் திகதியிலிருந்து விகிதாசார அடிப்படையில் இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் தேய்மானம் வசூலிக்கப்பட்டதுடன் மற்றும் தனிப்பட்ட சொத்துகளின் தேய்மானத் தொகையை நிர்ணயிப்பதில் 10% செலவு/ மீள்மதிப்பீட்டுத் தொகை எஞ்சிய மதிப்பாகத் தக்கவைக்கப்பட்டுள்ளது. காணி தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன கீழே தரப்பட்டுள்ள விகிதாசார அடிப்படையில் வருடாந்தம் அவற்றின் பாவனைக் காலத்தின் மீது ஈடு செய்யப்படும்.

கட்டடங்கள்	–	6 2/3%
கொள்கலன் கட்டமைப்புகள்	–	10%
மோட்டார் வாகனங்கள்	–	12.5 %
பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணங்கள்	–	25 %
தளபாடங்களும் பொருத்திகளும்	–	25 %
ஏனைய நிலையான சொத்துக்கள்	–	25%

குறிப்பிட்ட சொத்து ஒன்று பாவனைக்கு இருக்கக்கூடிய திகதியிலிருந்து விகிதாசார அடிப்படையில் தேய்மானம் இலாப மற்றும் நட்டக் கணக்கில் அறவிடப்பட்டுள்ளது. மேலும், கிரயத்தின் 10% / மறுமதிப்பீட்டுத் தொகைகள் தனிப்பட்ட சொத்துக்களின் தேய்மானத் தொகையைத் தீர்மானிக்கையில் எஞ்சிய பெறுமதியாக வைக்கப்பட்டுள்ளன.

தேய்மானம் முறை, பயனுள்ள வாழ்க்கை மற்றும் எஞ்சிய மதிப்புகள் ஆகியவை ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நிர்வாகத்தினால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன, மேலும் LKAS 16 ஆல் தேவைப்படும் சிறந்த தகவல்களின் அடிப்படையில் மற்றும் சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பொருளாதார செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தேவைப்பட்டால் சீராக்கப்படும். இந்த மதிப்பீடுகளில் உள்ள நிச்சயமற்ற தன்மை, சில மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டை மாற்றக்கூடிய தொழில்நுட்ப வழக்கற்றுப் போவது தொடர்பானது.

4.3 அங்கீகாரமற்றதாக்கப்படல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருட்கள் அங்கீகாரமற்றதாக்கப்படும் போது அல்லது எதிர்காலத்தில் அதன் பயன்பாட்டிலிருந்து பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகாரம் நீக்கப்படும். ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்களின் ஒரு பொருளை அங்கீகரிப்பதில் இருந்து எழும் ஆதாயம் அல்லது இழப்பு, விற்பனை மற்றும் வருவாய்களுக்கும் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கும் இடையிலான வேறுபாடு என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதோடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

4.4 உருவச் சொத்துக்களின் சேதநட்டம்

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும், அதிகார சபையானது அதன் உருவச் சொத்துகளின் முற்கொணர் தொகையை மதிப்பாய்வு செய்து, அந்த சொத்துக்கள் சேதநட்டத்தை சந்தித்ததற்கான ஏதேனும் அறிகுறி உள்ளதா என்பதை தீர்மானிக்கிறது. அத்தகைய அறிகுறி ஏதேனும் இருந்தால், சேத நட்டத்தில் அளவை (ஏதேனும் இருந்தால்) தீர்மானிக்க சொத்தின் மீட்டெடுக்கக்கூடிய அளவு மதிப்பிடப்படுகிறது. ஒரு தனிப்பட்ட சொத்தின் மீளப்பெறக்கூடிய தொகையை மதிப்பிட முடியாத பட்சத்தில், அந்தச் சொத்தின் பணத்தை உருவாக்கும் அலகுக்கு மீட்டெடுக்கக்கூடிய தொகை தீர்மானிக்கப்படுகிறது. ஒதுக்கீட்டின் நியாயமான மற்றும் நிலையான அடிப்படையை அடையாளம் காண முடிந்தால், சொத்துக்கள் தனிப்பட்ட பண-உருவாக்கும் அலகுகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன, இல்லையெனில் அவை ஒரு நியாயமான மற்றும் நிலையான ஒதுக்கீடு அடிப்படையை அடையாளம் காணக்கூடிய பணஉருவாக்கும் அலகுகளின் சிறிய குழுவிற்கு ஒதுக்கப்படுகின்றன.

மீட்டெடுக்கக்கூடிய தொகை என்பது நியாயப் பெறுமதியைவிட அதிகமாகும், விற்க அல்லது பயன்பாட்டில் உள்ள மதிப்பு குறைவானது. பயன்பாட்டில் உள்ள மதிப்பை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல், வரிக்கு முந்தைய தள்ளுபடி விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய மதிப்பில் தள்ளுபடி செய்யப்படுகிறது, இது பணத்தின் நேர மதிப்பின் தற்போதைய சந்தை மதிப்பீடுகள் மற்றும் எதிர்கால பணப்புழக்கங்களின் மதிப்பீடுகள் சரிசெய்யப்படாத சொத்துக்கான குறிப்பிட்ட இடர்களைப் பிரதிபலிக்கிறது.

நிதிக் கூற்றுக்கள்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

ஒரு சொத்தின் (அல்லது பணத்தை உருவாக்கும் அலகு) மீட்டெடுக்கக்கூடிய தொகையானது அதன் முற்கொணர் தொகையை விட குறைவாக மதிப்பிடப்பட்டால், சொத்தின் முற்கொணர் தொகை (பணத்தை உருவாக்கும் அலகு) அதன் மீட்டெடுக்கக்கூடிய தொகையாக குறைக்கப்படும். ஒரு சேதநட்டம் வருமான அறிக்கையில் உடனடியாக அங்கீகரிக்கப்படும், தொடர்புடைய சொத்தை மறுமதிப்பீட்டுத் தொகையில் எடுத்துச் செல்லாவிட்டால், இந்தச் சந்தர்ப்பத்தில் குறைபாடு இழப்பு மறுமதிப்பீடு குறைவாகக் கருதப்படுகிறது.

4.5 மூலதன புத்துருவாகும் வேலை

மூலதன புத்துருவாக்கல் வேலை திரண்ட தேய்மான நட்டங்கள் ஏதேனும் இருப்பின், தேறிய கிரயத்தில் குறித்துரைக்கப்படும். இவை, கட்டட நிர்மாணங்கள், வலையமைப்பு உபகரணங்கள், முறைமை அபிவிருத்தி மற்றும் மூலதனமாக்கலுக்காக இருப்பிலுள்ள ஏனைய நிலையான சொத்துக்கள் போன்ற நேரடியாக உறப்பட்ட மூலதனத் தன்மையைக் கொண்ட செலவுகளாகும்.

நிறைவுச் சான்றிதழின் பற்றுச்சீட்டு அல்லது சொத்தைப் பயன்படுத்தக் கிடைக்கும் போது இந்தச் செலவுகள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சொத்துப் பதிவேட்டிற்கு எடுத்துச் செல்லப்படும்

4.6 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள் என்பது, அதிகார சபையினால் கைக்கொள்ளப்பட்ட சொத்துக்களாகவும் நிலையற்ற வாழ்காலத்தை உடையதாகவும் இருப்பதோடு, அவை, திரண்ட பதிவழிப்பு மற்றும் திரண்ட சேதநட்டம் என்பவற்றைக் கழித்து, கிரயத்தில் மதிப்பிடப்படும். தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் தொழிற்பாட்டு முறைமைகளுக்கான பதிவழிப்புக்கான ஏற்பாடு, நேர்கோட்டு முறையில் (சொத்துப் பெறுமதியின் எஞ்சிய பெறுமதியில் 10% க்குக் குறைவான) கணிப்பிடப்படும்.

அனைத்து தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களும் வருடம் தோறும் 50% இல் பதிவழிப்புச் செய்யப்பட்டு, அத்தொகைகள் அப்பொருட்களின் பயனுள்ள வாழ்காலத்தின் மீது ஈடுகட்டப்படும்.

மதிப்பாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்துடன் அவ்வப்போது அருவச் சொத்துகளின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப மென்பொருளின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

தகவல் தொழில்நுட்ப மென்பொருள்	2 - 4 ஆண்டுகள்

4.7 பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள் மற்றும் குத்தகைப் பொறுப்புகள்

4.7.1 பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்

அதிகார சபை சொத்துக்களின் பயன்பாட்டு உரிமையைக் குத்தகை ஆரம்பத் திகதியில் அங்கீகரிக்கிறது. (அதாவது இங்கு குறிப்பிடப்பட்ட சொத்து, பாவனைக்காக உள்ள திகதியிலிருந்து) சொத்தில் பயன்பாட்டு உரிமையானது, ஏதேனும் திரண்ட தேய்மானம் இருப்பின் தேய்மானம் மற்றும் சேதநட்டங்கள் என்பவற்றைக் கழித்து, குத்தகைப் பொறுப்புக்களின் ஏதேனும் மீள் மதிப்பீட்டுக்குச் சீராக்கப்படும். சொத்துக்களின் பயன்படுத்தும் உரிமையின் கிரயம் அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புக்களின் தொகை, உறப்பட்ட ஆரம்ப நேரடிக் கிரயங்கள் மற்றும் ஆரம்பத் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் குத்தகைக் கொடுப்பனவுகளைக் கழித்து வருகின்ற தொகையாகும். சொத்துக்களின் பயன்பாட்டு உரிமையானது, குத்தகையின் குறுகியகாலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் மேற்கொள்ளப்படுவதுடன், குறிப்பிட்ட சொத்துக்களின் பயனுள்ள வாழ்காலம் பின்வருமாறு:

சொத்துக்கள்	மதிப்பீட்டு ஆயுட்காலம்
காணி	30 ஆண்டுக்கு மேல்

4.7.2 குத்தகைப் பொறுப்புகள்

குத்தகையின் தொடக்கத் திகதியில், குத்தகைக் காலத்தில் குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பில் அளவிடப்படும் குத்தகைப் பொறுப்புகளை அதிகார சபை அங்கீகரிக்கிறது. குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பைக் கணக்கிடுவதில், அதிகார சபையானது குத்தகை தொடக்கத் திகதியின்படி திறைசேரிப் பத்திர விகிதத்தைப் பயன்படுத்துகிறது.

5. பொருள் விபரப் பட்டியல்

பொருள் விபரப்பட்டியல்கள் கிரயத்தின் அடிப்படையில் அளவிடப்படும். கிரயமானது, பொருட்கள் முதலில் உள்ளே வந்தது முதல் வெளியே செல்லும் (FIFO) என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பொருள் பட்டியல்களின் பெறுமதி சொத்துக்களை கைக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள், பரிமாற்றத்திற்கான செலவுகள் மற்றும் அவற்றை தற்போது இருக்கக்கூடிய இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட ஏனைய செலவுகளையும் உள்ளடக்கும். அதிகார சபையின் பொருள் விபரப்பட்டியல் எழுதுபொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களை உள்ளடக்குகின்றது.

6. ஏனைய சொத்துக்கள்

ஏனைய கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள், முற்பணங்கள், வைப்புத் தொகைகள், முற்கொடுப்பனவு மற்றும் பெறத்தக்க வரிகள் ஆகியவை ஏனைய சொத்துக்களாகும்.

(அ) முன்பணம், வைப்புத்தொகை, முற்கொடுப்பனவு செலவுகள்

ஒரு குறிப்பிட்ட செலவானது, அனுகூலத்தை தரக்கூடியதாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிதி வருடங்களுடன் தொடர்புபடும் போது அவை முற்பணங்கள், வைப்புகள் மற்றும் முன்செலுத்தப்பட்ட செலவுகள் என வகைப்படுத்தப்படும். அத்தகைய செலவுகள் விகிதாசார அடிப்படையில் எந்தக் காலப்பகுதியுடன் தொடர்புபடுகிறதோ அக்காலப்பகுதியின் மீது ஈடுகட்டப்படும்.

(ஆ) ஏனைய கடன்பட்டோர்

ஏனைய கடன்பட்டோர் கிரயத்திலிருந்து சேதநட்டத்தைக் கழித்து அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

(இ) பெறத்தக்க வரி

பெறத்தக்க வரியானது செலவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஈ) முன்செலுத்திய ஊழியர் செலவு

இது அதிகார சபையின் ஊழியர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் வழங்கப்பட்ட ஊழியர் கடனிலிருந்து எழும் மீதியைக் குறிக்கிறது.

(உ) பெறத்தக்க பெறுமதி சேர் வரி (VAT)

இது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து பெறப்படும் பெறுமதி சேர் வரி (VAT) மீள் நிதியிடல்களைக் குறிக்கிறது.

7. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்குச் சமமானவை, கையில் உள்ள காசு மற்றும் குறுகிய கால அதிக பணப்புழக்க முதலீடுகளை உள்ளடக்கியது, அவை அறியப்பட்ட பணத்திற்கு உடனடியாக மாற்றக்கூடியவை மற்றும் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய இடருக்கு உட்பட்டவை. இவை, குறுங்கால பணத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளன.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசு மற்றும் காசுக்குச் சமமானவை, கையிலுள்ள பணம் மற்றும் வங்கிகளில் வைப்புத்தொகை ஆகியவற்றைக் கொண்டிருக்கும். குறுகிய முதிர்வு கொண்ட முதலீடுகளும், காசுக்குச் சமமானவையாக கருதப்படுகின்றன. ஒருங்கிணைக்கப்பட்ட ஐந்தொகையில், நடப்புப் பொறுப்புகளில் உள்ள கடன்களுக்குள் வங்கி மேலதிகப் பற்று காட்டப்படும்.

8. ஏற்பாடுகள்

கடந்தகால நிகழ்வு ஒன்றின் விளைவாக அதிகார சபைக்கு தற்போது ஒரு கடமை உள்ள போது (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படும். மேலும், இத்தகைய கடப்பாடு பொருளாதார அனுகூலங்களை அடிப்படையாக கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல், கடப்பாடு ஒன்றைப் பூர்த்திசெய்யத் தேவைப்படுகின்ற போதும், கடப்பாட்டுத் தொகையில் இருந்து நம்பகமான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படக்கூடியதாக உள்ள போதும் மாத்திரமே இவ்வாறு ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படும். நாணயப் பெறுமதியின் காலத்தின் விளைவுப்பயன் முக்கியமாக உள்ள போது ஏற்பாடுகள் பணப்பெறுமதிக் காலத்தின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வரிக்கு முன்னரான வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களைத் தள்ளுபடி செய்து தீர்மானிக்கப்படும். பொருத்தமான இடங்களில் இவை குறிப்பிட்ட இடர்களையும் கருத்திற் கொள்ளும்.

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 7(h) இன்படி, விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் பற்றிய விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும், தேடுதல் மற்றும் மீட்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமான அதிகாரம், செயல்பாடு, கடமை ஆகியவை அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் அத்தியாயம் VI பிரிவுகள் 53, 54, 55 இல் உள்ள விதியின் மூலம் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கை, பரந்த கடல் வான் பரப்பைக் கொண்ட ஒரு தீவாக இருப்பதாலும், எல்லை மற்றும் கடல் வான் பரப்பிற்கு மேல் பறக்கும் விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் இயங்கும் விமானங்களை போதுமான அளவு பராமரிக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு சமரசமற்ற கடப்பாடொன்று உள்ளது. இதற்காக விமான விபத்து விசாரணை, தேடல், மீட்பு நடவடிக்கைகளுக்கு இருப்பு நிதியொன்றைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

2018 மே 30 அன்று நடைபெற்ற 145 ஆவது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை கூட்டத்தில், விமான விபத்து விசாரணை, தேடல், மீட்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்காக 50 மில்லியன் ரூபாய் ஒதுக்குவதற்கான கலைந்துரையாடல் பத்திரம் (DP/ May/2018/03(a) தாக்கல் செய்யப்பட்டது.

9. ஊழியர் நன்மைகள்

9.1 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமானது, பணிக்காலத்தின் பின்னராக வழங்கப்படும் ஒரு அனுகூலமாகும். இத்திட்டங்களின் கீழ் பங்களிப்புகளானது, பிரத்தியேகமான நிதியம் ஒன்றுக்கு ஒதுக்கப்படுவதுடன், நிறுவனம் ஒன்று மேலதிகக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள எவ்வித சட்டக் கடப்பாட்டையோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடடையோ கொண்டிருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட பங்கீட்டுத் திட்டத்திற்கான பங்களிப்பு கடப்பாடுகள் பணியாளர்கள் சேவை செய்த காலப்பகுதியின் போது உள்ள இலாப அல்லது நட்டத்தில் பணியாள் செலவாக அங்கீகரிக்கப்படும்.

✈ ஊழியர் சேமலாப நிதியம்:
அனைத்து பணியாளர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரித்துடையவர்காளவதுடன், அதற்காக நிறுவனம் பணியாளர்களின் அடிப்படை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் மீது 15% பங்களிப்பை

✈ ஊழியர் நம்பிக்கை நிதியம்
நிறுவனமும் அதன் துணை நிறுவனங்களும் ஒவ்வொரு பணியார்களின் சம்பளத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கிறது.

9.2 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டமானது, வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் தவிர்ந்த பணிக்காலத்திற்குப் பிந்திய திட்டங்களாகும். 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்துதல் சட்டத்தின்படி பணிக்கொடையை செலுத்துதல் அதிகார சபையின் பொறுப்பாகும். இந்தச் சட்டத்தின் கீழ் கடமைகளுக்கான விதியானது, சேவையில் உள்ள ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்கப்படும் முழு மாத ஊதியத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன், கணக்கீடுகள் LKAS 19 சூத்திரத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் பணிக்கொடை வழங்கலின் மதிப்புக்காக தனி முதலீடு பராமரிக்கப்படுகிறது.

9.3 ஊழியர் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதி

2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் 20(5) பிரிவின்படி, அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற, இணைந்த அரச உத்தியோகத்தர்களைப் பொறுத்த வரையில் ஊழியர் நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்பட்டது. சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை. ஓய்வுபெற்ற ஒவ்வொரு அதிகாரியின் பெயரிலும் உள்ள தொகையானது திரட்டப்பட்ட வட்டியுடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையிலிருந்து ஓய்வுபெறும் போது விடுவிக்கப்படும்.

10. நிதிப் பொறுப்புக்கள்

10.2 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

LKAS 39 இன் எல்லைக்குள் உள்ள நிதிப் பொறுப்புகள், இலாபம் அல்லது இழப்பு அல்லது கடன்கள் மற்றும் பொருத்தமான கடன்கள் மூலம் நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதிப் பொறுப்புகளின் வகைப்பாட்டை அதிகார சபை தீர்மானிக்கிறது.

அனைத்து நிதிப் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரித்து, கடன்கள் அல்லது பெறுவனவுகளாக உள்ள போது அவை பதிவழிப்புச் செலவில் எடுத்துச் செல்லப்படும். இவை நேரடியாக உறப்பட்ட பரிவர்த்தனைச் செலவுகளை உள்ளடக்கும். அதிகார சபையின் நிதிப் பொறுப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவைகளை உள்ளடக்கும்.

11. ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்களானது, அட்டுறு செலவுகளை உள்ளடக்கிய ஏனைய கடன் வழங்குநர்களை உள்ளடக்கியது. இவை அவற்றின் நியாயப் பெறுமதியாகக் கருதப்பட்டு அவற்றின் வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

12. வருமான அங்கீகாரம்

12.1 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 12 இன்படி, அதிகார சபைக்கு அதன் சொந்த நிதி இருக்கும். அத்துடன், பிரிவு 12(2) இன்கீழ் அதிகார சபையால் பெறப்பட்ட அனைத்துப் பணமும் அந்த நிதியில் செலுத்தப்படும். பிரிவு 12(2) இன் கீழ் பெறப்பட்ட பணம் SLFRS 15 இற்கு இணங்க சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக நிதிநிலை அறிக்கைகளில் வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்

12.2 வருமான மூலங்கள்

இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை பின்வரும் மூலங்களில் இருந்து வருமானத்தைப் பெறுகிறது:

- செயற்பாட்டு வருமானம்
  - வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம்
  - விமானமேற்றுதல் வரியிலிருந்தான சேவைக் கட்டணம்
  - ஒழுங்குமுறை சேவைகள் (உரிமம் / சான்றிதழ் / ஒப்புதல்களை வழங்குதலிலும், புதுப்பித்தலிலும் தேர்வுகளை நடத்துதல்)

- செயற்பாடற்ற வருமானம்
  - ஏனைய வருமானம்
  - வட்டி வருமானம் (ஊழியர் கடன் மற்றும் நிதிக் கருவிகள் மூலம்)

வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் / விமானமேற்றுதல் அறவீட்டுக்கான சேவைக் கட்டணம் / ஒழுங்குமுறை சேவை ஆகியவற்றில் இருந்து கிடைக்கும் வருவாய், தொடர்புடைய சேவைகள் வழங்கப்படும் காலப்பகுதியில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகிறது. இந்த வருமானம் அனைத்தும் திரட்டல் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

12.3 வட்டி வருமானம்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் (அதிகார சபை) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்று, அத்திகதியன்று முடிவடையும் ஆண்டுக்கான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியன்று முடிவடையும் ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடங்கலான முக்கிய கணக்கீட்டுத் தராதரங்களை உள்ளடங்கிய 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயகச் சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது கட்டளைக்கமைய கணக்காய்விற்குட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிதி நிலைமை மற்றும் அத்தினத்தன்று முடிவடையும் வருடத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது, இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப, அதிகார சபையின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

1.2. தகுதிவாய்ந்த அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு முன்கொண்டு செல்லும் பெறுமதியான ரூபா 4,193,585 ஆக மூன்று கட்டடங்களின் எஞ்சிய பெறுமதியும், பயனுள்ள வாழ்காலமும் மீளாய்வு செய்யப்படவும் இல்லை, அதேவேளை, 16 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLAS) 51வது பந்தியின் பிரகாரம் கணக்கில் காட்டப்படவும் இல்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இருந்து பெறவேண்டிய ரூபா 136,799,321 தொகை பெறுமதிசேர் வரியில் இருந்து அகற்றப்பட்டு, இந்த வருடத்தின் போது ரூபா 127,895,303 மீளப் பெறப்பட முடியாத VAT ஆகச் சீராக்கப்பட்டது. எனினும், மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்தில் மீளப் பெறப்படக்கூடிய எஞ்சிய VAT தொகை சந்தேகத்திற்குரியதாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் சேதநட்டத்திற்கான அல்லது வெளிப்படுத்தலுக்கான ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கடந்த வருடத்திற்கும், மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்திற்குமாக 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்புச் சட்டத்தின் பிரிவு 2(c) க்கு அமைவாக நிதிக் கூற்றில் வருமான வரிக்காக அங்கீகரிக்கப்பட்ட 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,679,705 சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புத் தீர்வைக்கு எதிராக எந்த ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பிரிவு (J) க்கு அமைவாக ரூபா 364,495,666 ஆகிய சேவைக் கட்டணத்திற்கான மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் வருமானத்தையும், 2016 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இருந்து 2022 டிசம்பர் 31 ஆம் வருட காலப்பகுதிக்குரிய எம்பாக்கேசன் தீர்வை மீதான சேவைக்கட்டண வருமானத்தின் மீது ரூபா 112,885,849 இனை VAT வரியாகச் செலுத்தும் பொறுப்பை அதிகார சபை கொண்டுள்ளது. எனினும், மொத்தமாகச் செலுத்த வேண்டிய VAT தொகையாக ரூபா 167,560,191 என்ற தொகை கணக்கில் காட்டப்படவில்லை.

(உ) எம்பாக்கேசன் தீர்வை மீதான சேவைக் கட்டணத்திற்கான வருமான அங்கீகாரக் கொள்கை, காப்பீட்டுக் கணக்கீட்டின் அடிப்படையில் இருந்த போதிலும், 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறு ஆறு (06) விமான நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய ரூபா 11,070,728,696 தொகை கணக்கில் காட்டப்படவில்லை. ஆகவே, பொதுத் திறைசேரி, இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விமான நிலைய மற்றும் விமானத்துறை சேவைகள் (பிரைவேட்) லிமிட்டெட் ஆகியவற்றுக்குச் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 8,303,046,522, ரூபா 899,496,707 மற்றும் ரூபா 1,798,993,414 ஆக குறைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அதிகார சபையினுடைய எம்பாக்கேசன் தீர்வை மீதான சேவைக் கட்டணம் ரூபா 69,192,054 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) குறிப்பிட்ட உபகரணங்கள் கைக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து தொழிற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படவில்லை. இந்த உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,772,902 ஆகும். மேலும், இந்த உபகரணங்கள் களஞ்சியசாலையிலும், அதிகார சபையின் சுகாதாரப் பிரிவிலும் உள்ளன. எனினும், அதிகார சபை அத்தகைய சொத்துக்களை முழுமையாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள 2022 இல் மறுமதிப்பீடு செய்து கணக்கில் காட்டியுள்ளது. மேலும், ரூபா 8,582,775 பெறுமதியுடைய இரண்டு வாகனங்கள் அதிகார சபையின் வளாகத்திற்குள் கைவிடப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

(எ) 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 178,943,596 சராசரி தொகையான கடன் தொகையை உறுதிப்படுத்திய கடிதங்கள் 6 கடன் பெறுநர்களுக்கு வழங்கப்பட்டன. எனினும், ரூபா 173,193,596 மதிப்புள்ள தொகையைக் கொண்ட 3 கடன் பெறுநர்கள் இன்னும் உறுதி செய்யவில்லை. மேலும், கணக்குப் புத்தகத்திலுள்ள தொகையையும், உறுதி செய்யப்பட்ட மீதித் தொகையையும் பார்க்கையில் ரூபா 473,184 வித்தியாசமாக உள்ளது.

(ஏ) உறுதிப்படுத்தல்கள் பெறப்படாமையினால், கடன் தருநர்களில் ரூபா 232,644,548 உடைய மொத்த சராசரியிலிருந்து ரூபா 124,902,383 தொகையைச் செலுத்த வேண்டிய 12 கடன் பெறுநர்களின் தொகையை சரிபார்க்க முடியவில்லை.

நான் இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வை மேற்கொண்டேன். என் பொறுப்புகள். அந்த தரநிலைகளின் கீழ் எனது அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகள் பிரிவில் கணக்காய்வாளரின் பொறுப்புகள் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1.3 அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்களெனப் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவமே பொறுப்பேற்க வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயங்கள் ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது தொடர்பாக எந்த வகையிலான முடிவுகளையும் உறுதிப்படுத்தி கருத்து வெளியிடவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பானது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிப்பதுடன் அவ்வாறு செய்யும்போது, நிதிக் கூற்றுக்களுடன் ஏனைய தகவல்களின் தோற்றம் பொருந்தவில்லையா, அல்லது கூற்றுக்கள் பிழையாக வெளியிடப்பட்டுள்ளனவா என்பதனை எனது கணக்காய்வு அறிவினைக் கொண்டு ஆராய்வதாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின்படி மற்றும் என்னால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் பொருத்தமற்றதாக காட்டப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அவ்விடயங்களை நான் அறிக்கையிட வேண்டும் அல்லது இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை என்பதனைக் குறிப்பிட வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் நிருவகிக்கும் தரப்பினரது பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரசாங்க கணக்கீட்டுத் தராதரங்களுக்கேற்ப தயாரித்தல் மற்றும் நியாயமானதாகச் சமர்ப்பித்தலும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய பிழையான அறிக்கை வெளிப்பாடுகளின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவனத்தைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தினது பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதபோது, செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பினும் தவிர, இடையறாது நிலைத்திருத்தல் அடிப்படையில் கணக்குகளை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் இடையறாது நிலைத்திருத்தலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தினது பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செய்முறை தொடர்பாகப் மேற்பார்வை செய்யும் பொறுப்பானது, நிருவகிக்கும் தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டமூலத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்திலான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு, நிறுவனத்தினது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி உரியவாறு புத்தகங்களையும், அறிக்கைகளையும் பராமரித்துச் செல்ல வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய பிழையான அறிக்கை வெளிப்பாடுகளின்றியது என நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதலானது, உயர்மட்ட உறுதிப்படுத்தலாகிய போதிலும், இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்ளும் போது எப்போதும் அளவு ரீதியான தவறான அறிக்கையிடலைக் கண்டுபிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறினது தனிப்பட்ட அல்லது ஒட்டுமொத்த செல்வாக்கு செலுத்துகை காரணமாக, அளவு ரீதியான தவறான அறிக்கையிடல் ஏற்படக் கூடியதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார ரீதியான தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் நடுநிலையானதாகவும், துல்லியமாகவும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய அளவு ரீதியான பிழையான அறிக்கையிடலின் அபாயத்தை அடையாளங் காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதனூடாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் இடரைத் தவிர்ப்பதற்குப் போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். அளவு ரீதியாக பிழையான அறிக்கையிடலின் தாக்கத்தைவிட, மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் தீவிரமாகவிருப்பதுடன், கூட்டுச்சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினைக் கைவிடல் போன்றவை காரணமாக மோசடி ஏற்படுகின்றது.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு விதிமுறைகளைத் தயாரிப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் பற்றிய கருத்தொன்றை வெளியிட உத்தேசிக்கவில்லை.
- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு முன்மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக, நிறுவனத்தின் இடையறாத நிலைத்திருத்தல் தொடர்பாக போதியளவிலான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில், கணக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிறுவனமானது இடையறாது நிலைத்திருத்தல் தொடர்பான அடிப்படையினைப் பிரயோகிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவுக்கு வருவதாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவதுடன், அவ்வெளிப்பாடுகள் போதியளவினதாக இல்லாவிட்டால், எனது அபிப்பிராயப்படி கணக்காய்வு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து நிலைத்திருப்பதானது எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் முடிவுறுத்தப்படலாம்.
- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல், வியூகம் மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதுடன் அதற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வினுள், அடையாளங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(a) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின்படி, எனது அறிக்கையில் கணக்காய்வுக்குத் தகுதி பெறும் அபிப்பிராயத்திற்கு அடிப்படையான பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் செல்வாக்கினைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையில் விளங்கும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை நிறுவனமானது பராமரித்து வந்துள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iii) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) ஆம் வாசகத்தின் தேவைப்பாடுகளின்படி கடந்த வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளினடிப்படையில், போதியளவிலான விடயங்களுக்கு வரையறுக்கப்படுவதினுள் பின்வரும் வெளிப்படுத்தலை மேற்கொள்ளக் கூடிய எதுவும் எனது அவதானிப்புக்குட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(d) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிருவாகச் சபையின் உறுப்பினரொருவருக்கு நிறுவனம் தொடர்பான குறித்ததொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறுவிதமாக சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பாகத் தொடர்பொன்றுள்ளது என்பதாகும்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(f) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்பு தவிர, குறித்ததொரு எழுத்துமூலமான சட்டமொன்றுக்கு அல்லது நிறுவகத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட வேறேதேனும் பொது அல்லது விசேட கட்டளைகளுடன் இணங்காது செயற்பட்டுள்ளமையாகும்.

சட்டம் / வழிகாட்டி பற்றிய குறிப்பு	**இணக்கப்பாடின்மை**
(அ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைச் சட்டம்	
(i) பிரிவு 7(c)	இலங்கைக்கான விமானத்துறை அபிவிருத்தித் திட்டம், அதிகார சபையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் தயாரிக்கப்படவில்லை. மேலும், இவ்வறிக்கைத் தினத்தன்றிலும் கூட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவுமில்லை.
(ii) பிரிவு 7(h)	அதிகார சபை 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டத்தின் பிரிவு 56 இன் கீழ் அதிகார சபையின் பணியாட்களை உள்ளடக்கிய, விமானத்-துறை விசாரணை சபையை உருவாக்கி, இலங்கை ஆட்புல எல்லைக்குள் நடைபெற்ற விமான விபத்துக்கள் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆயினும், அத்தகைய சபை ஒன்றை ஸ்தாபிக்காது அதிகார சபை 2006, 2009 மற்றும் 2010 ஆகிய வருடங்களில் முறையே ரூபா 20 மில்லியன், ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் ஆகிய தொகைகளை விபத்து நிதியத்திற்கு ஒதுக்கியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் 2016 ஜுலை 26 எனத் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மான இல.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

	CP/16/375/709/063 இன் கீழ் இலங்கையில் விமான விபத்து விசாரணை பணியகம் ஒன்றை உருவாக்க தீர்மானம் எடுத்தது. மேலும், அமைச்சரவைப் பணியகத்திற்கு தலைவரையும், பணியாட்களையும் நியமிப்பதற்கு அங்கீகாரம் வழங்கிய அதேவேளை, உரிய அமைச்சின் அல்லது அதிகார சபையின் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 50 மில்லியன் ஒதுக்கீட்டிற்கான ஏற்பாடு ஒன்றை மேற்கொள்ளவும் தீமானித்தது. மேலும், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டதையும் திருத்தத் தீர்மானித்தது. எனினும், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க சபை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.
(iii) பிரிவு 9	2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் மூன்றாவது (3) அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள 08 விமான நிலைய வசதிகள் மற்றும் அவை தொடர்பான காணிகள் பற்றியும், இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 வானூர்திகளின் கையளிப்பு பற்றியும் பிரசுரம் மேற்கொள்ளவில்லை. இச்சட்டம் உருவாக்கப்பட்டு 21 வருடங்கள் கடந்த போதிலும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 10 விமான நிலையங்கள் பற்றி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.
(iv) 2017 டிசம்பர் 21 எனத் திகதியிடப்பட்ட பிரிவு 9 இன் இல. 2050/38 என்ற இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி	யாழ்ப்பாண விமான நிலையம் CAASL க்கு வர்த்தமானி மூலமும் 2019 ஏபரல் 02 எனத் திகதியிடப்பட்ட இல. CP/19/2008/105/009-1 என்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், யாழ்ப்பாண விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக 2019 ஒக்டோபர் 17 இலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. மேலும், அதிகார சபை, யாழ்ப்பாண விமான நிலையத்துக்கான 2962.18 ஏக்கர் காணிகளின் எல்லைகளை இனங்காணுகின்ற செயன்முறையைப் பூர்த்தி செய்யவில்லை. மேலும், அதுபற்றி அறிக்கையிடும் திகதி வரை பிரசுரிக்கப்படவும் இல்லை.

(ஆ)	1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் பிரிவு 47 (EPF), 1950 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் (ETF) பிரிவு 44 மற்றும் 2013 செப்டம்பர் 11 எனத் திகதியிடப்பட்ட பொது நிறுவனங்க-ளின் சுற்றறிக்கை இல. 02/2013	ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட வருவாய்களுக்கு முரணாக, EPF மற்றும் ETF பங்களிப்பின் கணிப்பீடுகளைக் கணக்கிடுகையில், 7 வித்தியாசமான கொடுப்பனவுகளை சபை உள்ளடக்கியுள்ளது. இந்த பிழையான கணக்கீடு காரணமாக, ரூபா 125,145,,338 EPF நிதியத்திற்குள் மேல-திகமாக வரவு வைக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 15,017,440 ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் மேலதிகமாக வரவு வை-க்கப்பட்டுள்ளது. இத்தொகை 2020 - 2023 காலப்பகுதி வரையிலான மாதிரி கணக்காய்வுக்குப் பொருந்தும்.
(இ)	2023 ஜனவரி 11 எனத் திகதியிடப்பட்ட இல. 2314/16 என்ற இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பிரிவு 4(1).	எம்பாக்கேசன் தீர்வையாக ஒதுக்க வேண்டிய பாதுகாப்புத் தொகை செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட போ-ாதிலும், 7 விமான நிறுவனங்கள் ரூபா 3,776,266,598 என்ற தொகையினை வங்கி உத்தரவாதமாக வெளியிடவில்லை.
(ஈ)	2008 மே 22 எனத் திகத-ியிடப்பட்ட இல. 1550/7, இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமா-னியின் (விசேட) ஒழு-ங்குவிதி 07 மற்றும் 08 மற்றும் 2023 நவம்பர் 28 எனத் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இல. 23/1937/628/094.	வர்த்தமானியினால் வழிகாட்டப்பட்டவாறு, வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டணம் (OSS) திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். எனினும், சபையானது, OSS ஐ திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்காது, வர்த்தமானியில் ஆரம்பத்தில் இருந்தே சபையின் வருமானமாக அங்கீகரித்-துள்ளனர். மேலும், 2023 நவம்பர் 28 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இல. 23/1937628/094 இன் கீழ் அமைச்சரவையும் பொருத்தமான மிகைக் கட்டணத்தை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்குமாறு சபையை அறிவுறுத்தியது. இதற்கமைய, திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களம் எஞ்சியுள்ள வருவாய்களை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்குமாறு அறிவுறுத்தியது. ஆயினும், அறிக்கையிடும் திகதி வரை சபை எஞ்சிய வருவாய்களை வரவு வைக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

(உ)	அரச உரிம நிறுவனங்களின் கூட்டுறவு ஆளுகை மீது வழங்கப்பட்ட 2021 நவம்பர் 16 எனத் திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை 01/2021 பிரிவு 6.6 இனால் திருத்தப்பட்ட 2023 ஜுன் 02 எனத் திகதியிடப்பட்ட பொது நிறுவன சுற்றிக்கை இல. PED/12 இன் பிரிவு 6.5.1	மீளாய்வுக்கு உட்பட்ட இவ்வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், நிதி வருடம் முடிவடைந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்கள் 116 நாட்கள் தாமதமடைந்து 2024 ஜுன் 24 இலேயே வெளிப்படுத்தப்பட்டது.
(ஊ)	அமைச்சரவைத் தீர்மானம் CP/23/2271/604/221 - 2023 டிசம்பர் 05 எனத் திகதியிடப்பட்ட மற்றும் 2023 டிசம்பர் 11 எனத் திகதியிடப்பட்ட பொது நிறுவன சுற்றிக்கை இல. PRD 04/2023	அதிகார சபை அமைச்சரவை உடன்படிக்கையில் 2022 ஆம் ஆண்டுக்கு தேறிய இலாபம் ஒன்றைப் பெற்றதாகக் குறிப்பிட்ட போதிலும் மேலே குறிப்பிடப்பட்ட தேறிய இலாபம் OSS இன் அதிகார சபை வருமானமாகக் கருத்திற் கொண்டு, திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்காமல் கணக்கிடப்பட்டது. இவ்வகையில், அதிகார சபை ரூபா 633,190,535 இனை நட்டமாக ஈட்டியமையினால், 2022 இல் இருந்து ரூபா 9,060,561 இனை ஊக்குவிப்புக் கொடுப்பனவாகச் செலுத்த முடியவில்லை.
(எ)	PED சுற்றறிக்கை இல. 4/2023	PED சுற்றறிக்கை 4/2023 க்கு அமைவாக, மேலே குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் சமூகமளிப்பு, செயற்திறன் போன்ற அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்படாத நிறுவனங்களுக்கு அல்லது வேறு ஏதேனும் வகையிலான கொடுப்பனவைச் செலுத்தாத நிறுவனங்களுக்குச் செலுத்தப்படலாம். மேலே குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ரூபா 63,165,455 ஐ அதிகார சபை கொடுப்பனவாகச் செலுத்தியுள்ளது.
(ஏ)	2021 நவம்பர் 17 எனத் திகதியிடப்பட்ட PED சுற்றறிக்கை இல. 1/2021.	
	(i) பிரிவு 2.3	அதிகார சபையின் நடைமுறைக் கையேடுகள் குறைந்தபட்சம் 5 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையின் 44 கையேடுகள் அறிக்கையிடும் திகதி வரை புதுப்பிக்கப்படவில்லை.

	(ii) பிரிவு 3.2	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி, சுற்றிற்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 73,103,022 இனை அதிகார சபையின் அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவு, முகாமைத்துவ மட்டக் கொடுப்பனவு மற்றும் இடைக்காலக் கொடுப்பனவு என்ற வகையில் செலுத்தப்பட்டுள்ளது.
(ஐ)	2022 ஆகஸ்ட் 08 எனத் திகதியிடப்பட்ட PED சுற்றறிக்கை இல. 4/2022 இன் வழிகாட்டி 2.8	அதிகார சபையினால் கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கு எந்தவிதமான செலவையும் உறப்பட முடியாத போதிலும், அதிகார சபை மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் ரூபா 1,152,344 வை கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்தியுள்ளது.
(ஒ)	நிதி ஒழுங்குவிதி 101, 103 மற்றும் 104	வீரவில சுற்று பங்களாவின் ஒரு பகுதி 2022 மே 18 ஆம் திகதி தீயினால் சேதமுற்றது. சுற்று பங்களாவின் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு சேவை வழங்குநர், அதிகார சபையினால் அறிவுறுத்தப்பட்டவாறு செயற்படவில்லை. அத்துடன், அதிகார சபையும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.
(ஓ)	2015 ஏப்ரல் 09 எனத் திகதியிடப்பட்ட இல. DMS/1748 நிதி அமைச்சின் செயலாளருக்கான கடிதம்.	வலிதான உரிமங்களை அல்லது சான்றிதழ்களைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு மாத்திரமே தொழில்நுட்பக் கொடுப்பனவைச் செலுத்த முடியும். எனினும், அதிகார சபை உரிமங்கள் அல்லது சான்றிதழ்கள் எதனையும் உறுதிப்படுத்தாது ரூபா 32,033,682 வை 27 அலுவலர்களுக்கு தொழில்நுட்பக் கொடுப்பனவாகச் செலுத்தியுள்ளது.
(ஔ)	பணியாட்களின் கையேடும் நிர்வாக விதிகளும்	
	(i) பிரிவு 5.2.6 மற்றும் 5.2.8	எந்தவொரு பதிவிக்கான தகுதிநிலைக்கும், பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் மற்றும் அதிகார சபையின் வேண்டுதலின் பேரில் தற்காலிக பதவிநிலை திறைசேரியினால் உருவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் அதிகார சபை 13 குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களை நியமித்துள்ளதுடன், திறைசேரியின் அனுமதி பெறாது ரூபா 44,990,350 இனை கொடுப்பனவாகச் செலுத்தியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

(ii) பிரிவு 14.5.1 மற்றும் 14.8.2(IV)	ஆதன மற்றும் வாகனக் கடன்களுக்கான வட்டி வீதம் 7 சதவீதமாக இருந்த போதிலும், கையேடு உருவாக்கப்பட்டதில் இருந்து அதிகார சபை 4.2 சதவீதத்தை மாத்திரமே அறவிட்டுள்ளது. இதன்விளைவாக, மாதிரி கணக்காய்வுக் கடன் வட்டி வருமானம் ஆகிய ரூபா 2,108,585 மற்றும் ரூபா 1,792,073 ஆகிய தொகைகள் முறையே 2022, 2023 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையினால் இழக்கப்பட்டுள்ளது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(g) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகளும் பொறுப்புக்களுடனும் இணங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை.

அதிகாரிகளின் கையேடு மற்றும் நிர்வாக விதிகளின் பிரிவு 1.4 இன் படி, சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் நிறுவன நிர்வாக விதிகள் பணியாளர்கள் மற்றும் நிர்வாக விதிகள் போன்ற மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளது. நிறுவன விதிகள் மற்றும் நிதி விதிகள். கூட்டுறவு விதிகள், நிதி விதிகள் கையேட்டின்படி தனித்தனியாக வழங்கப்பட வேண்டும் என்றாலும், இந்த அறிக்கையின் திகதி வரை இந்த விதிகள் வெளியிடப்படவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(h) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர, நிறுவன வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ள விதத்திலும் உரிய காலவெல்லையினுள் குறித்த சட்டதிட்டங்களுக்கமைவாக, கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

CAASL தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 7.5 மில்லியனுக்கு மேலதிகமாக, வீரவில சுற்றுலா பங்களாவின் புனரமைப்புச் செலவாக ரூபா 24,217,285 இனை செலவிட்டுள்ளது. இந்தத் திட்டமானது, ஒரேயொரு விலைமனு கோருபவருக்கு மாத்திரமே வழங்கப்பட்டது. இது, அரசாங்க கொள்முதல் வழிகாட்டிகளுடன் முரண்படுகிறது. எனினும், விதிமுறையான ஒப்பந்தம் ஒன்று இருதரப்பினரிடையே கைச்சாத்திடப்படவில்லை.

ஒப்பந்தம் 2022 மே 18 ஆம் திகதி கையளிக்கப்பட்ட போதிலும், ஒப்பந்ததாரர் பணிகளை 2023 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி ஆரம்ப விலைகளிலேயே பணிகளை ஆரம்பித்தார். எனினும், இடையிலுள்ள 10 மாத காலப்பகுதியில் பொருட்களின் விலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. மேலும், மேலதிக நிதிகளுக்காக விதிமுறையான கோரிக்கை எதனையும் முன்வைக்காது, ஒப்பந்ததாரர் ரூபா 2,193,750 இனை மேலதிகமாகச் செலவிட்டுள்ளார். அத்துடன், இந்தப் பணியானது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலோ (TEC) அல்லது கொள்முதல்

குழுவினாலோ அங்கீகரிக்கப்படவில்லை. மேலும், பூர்த்தியாக்கலுக்கான சான்றிதழ் ஒன்று அரசாங்க கொள்முதல் வழிகாட்டி 8.12.2 க்கு அமைவாக வழங்கப்படவும் இல்லை. மேலும், 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரிவு 11(1) க்கு அமைவாக, ஒப்பந்த பதிவுச் சான்றிதழும் பெறப்படவில்லை. மேலும் ஒப்பந்தாரரின் செயற்திறன் உத்தரவாதம் பணி பூர்த்தியாக முன்னரே காலாவதியாகிவிட்டது. இதனைத்தவிர, குளியலறைக்குத் தேவையான பொருத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை மீறி விநியோகிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 1,792,000 செலுத்தப்பட்டது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2023 ஜனவரி 12 ஆம் திகதி DGCA வினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இல. EL/01/2023 இன் பந்தி 09 இன் பிரகாரம், எம்பாக்கேசன் தீர்வை சேகரிப்பைக் கருத்திற் கொண்டது. எனினும், எயார்லைன்ஸ் மேலே குறிப்பிட்ட பந்தி 6 இல் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் கொடுப்பனவை வரவு வைக்காததன் காரணமாக, ஒவ்வொரு நாளுக்கும் உரிய தாமதக் கட்டணம் நிலுவைத் தொகைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி 06 விமான நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையாக உள்ள எம்பாக்கேசன் தீர்வைக்கான தாமத வட்டிக் கட்டணம் ரூபா 1,408,373,439 எனக் கணக்கிடப்பட்டது. எனினும், இந்த அறிக்கைத் திகதி வரை அதிகார சபை இந்த வட்டி கட்டணங்களை அறவிடவில்லை.

(ஆ) தற்காலிக பிரயாணிகளின் நிலையக் கட்டடம் மற்றும் புறசாலை ஒன்றை நிர்மாணிக்க AASL க்கு ரூபா 215,710,963 இனை முற்பணமாகச் செலுத்தியது. யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமாணப் பணிகள் 2020 ஓக்ஸ்ட் 11 ஆம் திகதி பூர்த்தியடைந்த போதிலும், அதற்குரிய கொடுப்பனவு 2023 ஒகஸ்ட் 31 வரை தீர்க்கப்படவில்லை.

(இ) 04 விமான நிறுவனங்கள், விமானப் பயணத் திகதியன்று இருக்கக்கூடிய நாணய விகிதத்தில் எம்பாக்கேசன் தீர்வையாக ரூபா 1,504,761,392 க்கு பிரயோகதித்தது. இது, DGCA யினால் வழங்கப்பட்ட வழிகாட்டி EL/01/2023 இல் குறித்துரைக்கப்பட்ட வீதத்திற்கு முரணானது.

(ஈ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க CAASL சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விமான நிலைய வசதிகளும், ஒதுக்கப்பட்ட காணியும் AASL இனால் விதிமுறையான எத்தகைய உடன்படிக்கையோ அல்லது வாடகைக் கட்டணமோ இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளது.

(உ) உள்நாட்டு விமானப் போக்குவரத்தை உயர்த்தும் முயற்சியின் ஒரு பகுதியாக திகன, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் PPP ஏற்பாடுகளின் படி ஸ்தாபிக்க 2016 இல் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதிகார சபை 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பதுளை விமான நிலையத்துக்கான அளவையியல் திட்டத்திற்கும், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத் திட்டத்திற்குமாக (EIA) ரூபா 2,013,605 இனை செலவிட்டுள்ளது. எனினும், இந்த மூன்று விமான நிலையங்களின் கட்டுமாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2023

(ஊ) 2016 ஆம் ஆண்டிலிருந்து அதேகம்பனியுடன் வீரவில சுற்று பங்களாவின் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாது அதிகார சபை வலிதான உடன்படிக்கை இன்றி ரூபா 5,960,000 இனை செலுத்தியது. மேலும் புனரமைப்புக் காலப்பகுதியில் சேவை வழங்குநருக்கு ரூபா 1,155,000 செலுத்தப்பட்டுள்ளது.

டப்ளியூ.பி.சி. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு அலுவலகம்
பத்தரமுல்லை

இலங்கை சிவில் விமான அதிகார சபையின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 க்கு அமைய தயாரிக்கப்பட்ட கணக்கியல் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

இந்தக் கடிதம் 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட இல. AAV/B/CAASL/FA/2023/06 என்ற இலக்கத்தை உடைய அறிக்கை தொடர்பான பதிலாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கைக்காக கீழே தரப்பட்டுள்ள பதில்களை அவதானிக்கவும்,

1.2 தகுதிவாய்ந்த கருத்திற்கான அடிப்படை

(அ) CAASL மதிப்பீட்டுத் திணைக்களத்தை 2023 ஓகஸ்ட்டில் இருந்து காணி, கட்டடம் என்பவற்றை மீள் மதிப்பீடு செய்யுமாறு தேவைப்படுத்தியது. அத்துடன், காணி எல்லைகள் மற்றும் உரிமை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, அறிக்கைகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

(ஆ) பெறப்பட வேண்டிய VAT மீதியில் 50% வருமான வரி திணைக்களத்தினால் சரிபார்க்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள தொகைகள் பற்றி தெளிவுபடுத்துவதற்காக, பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றில் இதற்கான ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்படும்.

(இ) சிவில் விமான அதிகார சபையினால் தேவைப்படுத்தியவாறு, இவ் அதிகார சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் மீதான சமூகப் பாதுகாப்புப் பங்கீட்டின் தீர்வை (SSCL) தொடர்பாக, வருமான வரி திணைக்களம், தெளிவுபடுத்தல்களை வழங்கியுள்ளது. இந்தத் தெளிவுபடுத்தலுக்கு அமைவாக, எம்பாக்கேசன் தீர்வைக்கு அதிகார சபை பொறுப்பாகாது. இதற்குரிய காரணம் என்னவெனில், அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற நியதிச்சட்ட ரீதியான கட்டணங்கள் SSCL க்குப் பொறுப்பாகாது. அதனைத் தொடர்ந்து, வருமான வரி திணைக்களம் 20.03.2003 எனத் திகதியிடப்பட்ட இன்னுமொரு கடிதத்தை வழங்கி, அந்தக் கடிதத்தில் எம்பாக்கேசன் தீர்வைக்கான கட்டணத்திற்குப் பொறுப்பு எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் அடிப்படையில் IRD 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி மதிப்பீடுகளை வழங்கியது. CAASL SL இந்த மதிப்பீடுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்தது. எனினும், IRD இறுதித் தீர்மானம் பற்றி இன்னும் அறிவிக்கவில்லை. இதனைவிட, நிதிக் கொள்கைத் திணைக்களம் IRD க்கு எம்பாக்கேசன் தீர்வையானது, VAT அல்லது SSCL க்கு பொறுப்புடையதாகாது என உறுதி செய்துள்ளது.

(ஈ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பெருமளவில் வரி செலுத்துவோர் பிரிவு, கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதுடன், VAT வரிக்கான மதிப்பீடுகளையும், எம்பாக்கேசன் தீர்வை தொடர்பான சேவைக் கட்டணத்திற்கு அறவிடப்படும் VAT வரி தொடர்பாகவும் மதிப்பீடுகளை வழங்கியது. CAASLSL மதிப்பீடுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மேன்முறையீடு, அரசாங்கம் சார்பாக CAASLSL சேவை வழங்குதல் தொடர்பான அனைத்து அடிப்படைகளையும் கொண்டிருந்தது. மேலும், எதிர்பார்க்கப்பட்ட வருமான எம்பாக்கேசன் தீர்வை மீதான சேவைக் கட்டணம் தொடர்பான பிரகடனமும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், உள்ளீட்டு வரி VAT வருமானத்தின் விகிதாசாரமாக அனுமதிக்கப்படவில்லை.

(உ) CAASL - எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கும், திறைசேரிக்கும் இடையில் இடைத்தரகராகச் செயற்பட்டு வருகிறது. இச்செயற்பாட்டின் போது, திறைசேரி சார்பாக எம்பாக்கேசன் தீர்வைகளைச் சேகரித்து அவற்றை விநியோகித்து வருகின்றது.

(ஊ) கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

பொருள்	பெறுமதி (ரூபா)	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
9 DVD பிளேயர்கள்	28,089.00	பொதுமக்கள் கண்காட்சியில் தொடர்ந்து பயன்படுத்துதல்
15 LCD மொனிட்டர்கள்	39,136.00	பொதுமக்கள் கண்காட்சியில் தொடர்ந்து பயன்படுத்துதல்

பொருள்	பெறுமதி (ரூபா)	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
மதுபானம் அருந்தியோருக்கு மூச்சுப் பகுப்பாய்வுப் பரீட்சைக் கருவி	1,705,677.00	ஜப்பான் நாட்டினால் நன்கொடையாக வழங்கப்பட்டது. இவ்விடயத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
KI - 8168 ரெக்ஸ்டன் ஜீப்	7,650,000.00	இவ்விடயத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
YM - 4182 முச்சக்கர வண்டி	1,000,000.00	இவ்விடயத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
மொத்தம்	10,422,902.00	

(ஊ மற்றும் எ) CAASL அனைத்துக் கடனாளிகளுக்கும் மிகுதியாகவுள்ள உறுதிப்படுத்தல்களை அனுப்புமாறு கோரி கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கடிதங்களின் பிரதியொன்று கணக்காய்வுக் கண்காணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

2. சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.2.2

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
(அ) 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவை அதிகார சபை சட்டம்	
பிரிவு 7(c)	2024 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்ற அதன் 197வது சபைக் கூட்டத்தில், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் சபை, தேசிய சிவில் விமானத் துறைக்கான 10 ஆண்டுகள் திட்டத்தை ஸ்தாபித்து, செயற்படுத்த வேண்டிய பிரதான திட்டத்தை அமைச்சரவை ஒப்புதலுக்காகச் சமர்ப்பித்தது. இதேவேளை, எயார்போர்ட் மற்றும் ஏவியேஷன் சேர்விசஸ் (ஸ்ரீலங்கா) லிமிட்டெட், மேலே குறிப்பிடப்பட்ட திட்டத்தைத் திருத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது. CAASLSL தற்போது இந்தப் பரிந்துரைகளை மீளாய்வு செய்து வருகிறது. அதனையடுத்து, பரிந்துரைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய CAMP தேசிய திட்டமிடல் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
பிரிவு 7(h)	இலங்கையில் நடைபெற்ற ICAO வின் உலகளாவிய பாதுகாப்பு கண்காணிப்பு தொடாபான கூட்டத்தில் எடுக்கப்பப்பட்ட விடயம் ஒன்றுக்கு அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமான சுயாதீன விமான விபத்து புலனாய்வுப் பணியகத்தை நிறுவுவதற்கான தீர்மானம் பரிந்துரை செய்யப்பட்டது. சட்ட வரைஞரின் ஆலோசனையுடன், இவ்விடயம் தொடர்பாக சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு, 2016 ஆம் ஆண்டிலிருந்து அதிகார சபை நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றது. AAIB யின் வரைபு மசோதாவின்படி, அமைச்சரவைக் குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பு தொடர்பான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. மேலும், சிவில் விமானத்துறை சம்பந்தமாக பொறுப்பு எடுக்கப்பட்டுள்ள அமைச்சுக்கு வருடாந்தம் ரூபா 50 மில்லியன் நிதியத்தை ஒதுக்குவதற்கான ஏற்பாடு ஒன்றும் உள்ளது. இதற்கு மேலதிகமாக, 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஏற்பாடுகளும் அடங்கியுள்ளன.
பிரிவு 9	குறிப்பிடப்பட்ட வர்த்தமானி, சிவில் விமானத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் உருவாக்கப்படல் வேண்டும். இரண்டாவது மற்றும் மூன்றவாது அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளுடன் இணைக்கப்பட்ட நான்கு விமான நிலையங்களுக்கும் மற்றும் வானூர்திகளுக்கும் மாத்திரமே இந்த வர்த்தமானி பொருந்தும். ஏனைய விமான நிலையங்கள் இராணுவ காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது சிவில் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவன மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுகின்றன.
(iv) பிரிவு 9	சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் 1950 ஆம் ஆண்டு 141.6296 ஹெக்டயர் (சுமார் 349 ஏக்கர்) நிலப்பகுதியை விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக கையகப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, 1986 இல் 261.7365 ஹெக்டயர் (சுமார் 646 ஏக்கர்கள்) நிலப்பகுதி இலங்கை விமானப் படையினரால் கையகப்படுத்தப்பட்டது. எனினும், இந்தக் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான செயன்முறைகள் பூர்த்தியடையாமல் உள்ளன. கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2,962.18 ஏக்கர் நிலப்பரப்பு, இலங்கை விமான நிலையத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளுள் உள்ளடங்கும். அதனைத் தொடர்ந்து, இல. 2142-74 என இலக்கமிடப்பட்ட 2019.09.26 எனத் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி, பலாலி விமான நிலையம் தொடர்பானது. இந்த விடயம், எல்லைகள் குறிப்பிடப்படாமல் பிரசுரிக்கப்பட்டன. ஆகவே, அதிகார சபை எல்லைகள் உள்ளடங்கலாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீளப் பிரசுரிப்பதற்காக வர்த்தமானியைத் தயாரித்துள்ளது. மேலும், இந்த ஆவணம், சட்ட மீளாய்வுக்காக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகார சபை சிவில் விமான திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட 349 ஏக்கர் நிலப்பகுதியை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. எஞ்சிய 2,962.18 ஏக்கர் நிலம் அதிகார சபையின் அதிகாரத்திற்குள் வராது.

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
(ஆ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் (EPF) பிரிவு 47, 1980 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் (ETF) சட்டத்தின் பிரிவு 44 மற்றும் 2013 செப்டம்பர் 11 எனத் திகதியிடப்பட்ட இல. 02/2013 பொதுத் துறைகள் சுற்றிக்கை.	CAASLSL உருவாக்கப்பட்டதில் இருந்து, பிரிவு 4.7 க்கு அமைவாக, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கான கையேடு மற்றும் நிர்வாக விதிகளுக்கு இணங்கியவாறு (SLCAP 5000), EPF மற்றும் ETF ஆகிய நிதியங்களுக்குப் பங்களிப்புச் செய்து வருகிறது. 2024 மே 02 ஆம் திகதி இடம்பெற்ற 199 ஆவது சபைக் கூட்டத்தில் மீளாய்வுக்காக கணக்காய்வு விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது, சபை பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டது. கணக்காய்வாளர் நாயகத்தின் கண்டறிதல்களை, சபை 100% ஏற்றுக்கொள்கிறது. மேலும், கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு EPF மற்றும் ETF சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவுகளுக்காகக் கணக்கிடப்பட்ட EPF மற்றும் ETF பங்களிப்புகளை நிறுத்துவதற்குத் தீர்மானித்தது. இவ்விடயம், 2024.04.02 இல் கணக்காய்வாளர் நாயத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடிதத்தில் கணக்காய்வாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்டவாறு, 2024 ஏப்ரல் மாதத்தில் இருந்து உடனடியாகக் கொடுப்பனவுகள் EPF மற்றும் ETF இல் இருந்து தவிர்க்கப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது விடயத்தை அமுல்படுத்துகின்ற அதேவேளை, தொழில்முறையான கொடுப்பனவுகள், விசேட கொடுப்பனவுகள், முகாமைத்துவ மட்டத்திலான கொடுப்பனவுகள், இடைக்காலக் கொடுப்பனவுகள் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டுமா என்பது தொடர்பில் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள தொழில் ஆணையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. EPF மற்றும் ETF தொடர்பான கழிப்பனவு தொடர்பான விபரங்கள், கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு நியதிச்சட்ட ஏற்பாடுகளுடன் இணங்கி நடக்கும் வகையில் 2013 செப்டம்பர் 11 எனத் திகதியிடப்பட் 02/2013 பொதுத்துறைச் சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு மாதமும் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். CAASL சபைத் தீர்மானத்தை அமுல்படுத்தியது.
(இ) 2023 ஜனவரி 11 ஆம் திகதிய 2314/16 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானி	எயார்லைன் நிறுவனம், எம்பாக்கேசன் தீர்வைக்கான வங்கி உத்தரவாதத்தைப் பாதுகாப்புப் பிணையமாக வழங்கியுள்ளது. இந்த அட்டவணை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது: அட்டவணைப்படுத்தப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், துரித செயற்பாட்டில் இல்லாதவை உத்தரவாதத்திற்காக வைப்புச் செய்யப்பட்ட பணம் மற்றும், வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதம் காலாவதியாக ஒரு மாதத்திற்கு மேல் ஆகக்கூடியவை
(ஈ) 2008 மே 22 ஆம் திகதிய 1550/7 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதி 07 மற்றும் 08 அத்துடன், 2023 நவம்பர் 28 ஆம் திகதிய 24/1937/628/094 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்	2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விமானப் போக்குவரத்து (பிரயாணிகள்) கட்டண ஒழுங்குவிதிகளின் பிரிவு 8, “ஒருங்கிணைந்த நிதிக்காக அறவிடப்படும் அத்தகைய கூடுதல் கட்டணத்தின் வரவு, விமானப் போக்குவரத்து செயலாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு விதிக்கப்படும்" எனக் குறிப்பிடுகிறது. CAASLSL 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகார சபை சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. இதனகத்துப் பின்னர், அதனுடைய சொந்த நிதியத்துடன் இணைத்து (பிரிவு 12) முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும். சிவில் விமானத்துறையின் பணிப்பாளர் நாயகம் (DGCA), பிரிவு 12(2)(c) க்கு அமைவாக, வெளிநாட்டு விற்பனையில் (OSS) இருந்து பெறப்பட்ட வகையில் விமான நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட நிதி, அதிகார சபை நிதிக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதி 1992 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க விமான வழி செலுத்துதல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் அடிப்படையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமானத்துறை சட்டத்தின் 126(2)(b) பிரிவு நீக்கப்பட்ட போதிலும், அதன் பயன்பாடு மற்றும் பிரயோகம் என்பன பிரிவு 12(2)(c) க்கு அமைவாக வரையறுக்கப்பட்டது. எனவே, DGCA க்கு எந்தத் தொகையையும் சேகரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. அதேபோன்று, அதிகார சபையின் நிதியத்திற்கு நேரடியாகக் கணக்குக் காட்டவும் முடியாது. எனவே, இங்கு கூறப்பட்ட கட்டணம், தீர்வையாகவோ அல்லது வரியாகவோ நிதிச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்படவில்லை. இந்தச் சட்ட ஏற்பாட்டை, கடந்த இரண்டு தசாப்தங்களாக தொடர்ந்து பதவி வகித்து வரும் DGCA க்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
	மேலும், முதன்மை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர் நாயகம் CAASLSL சட்டத்திலிருந்து விலகி நடப்பதற்கு தற்றுணிபு அதிகாரம் எதுவும் இல்லையாதலால், சட்டத்தின் ஏற்பாடுகளோடு இணங்கி நடப்பது கட்டாயமாகும். சட்டத்தின் (பிரிவு 12 இலிருந்து) விலகி நடத்தலானது, DGCA வினால் மேற்கொள்ளப்படும் மீறல் ஒன்றாகவே கருதப்படும். அத்துடன், இது, சட்டவிரோதமான நடவடிக்கை ஒன்றாகும். இதற்கமைய, 2008 இலிருந்து 2022 வரை ரூபா 16,981,667,778 மொத்த எடையிடப்பட்ட OSS ஆகும். இது, அதிகார சபைக்குப் பெறப்பட்ட வருமானமாகக் கருதப்படுவதுடன், இன்று வரையான வருவாய் கூற்றுக்களில் இவை பிரதிபலிக்கப்படுகின்றன. அதிகார சபையினால் பெறப்பட்ட வெளிநாட்டு விற்பனை (OSS) வருவாயின் சுருக்கமும், உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன. CAASLSL உருவாக்கப்பட்டதில் இருந்து சபை உறுப்பினர்களின் முறையான அங்கீகாரத்துடன் இலங்கை அரசாங்க திறைசேரிக்கு ரூபா 6,468,000,000 (ஆறு பில்லியன் மற்றும் நானூறு மற்றும் அறுபத்தியாறு மில்லியன்) செலுத்தப்பட்டுள்ளது. இது, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 10(5) க்கு அமைவான வருடாந்த பங்களிப்பு ஆகும். எந்தவிதமான விலகல்களும் இன்றி "பொதுக் கூட்டுத்தாபனம் ஒன்றுக்கான தேறிய மொத்த வருவாய்களின் ஒதுக்கம்" என்ற வகையில் இன்று வரை செலுத்தப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி அதிகார சபை உருவாக்கப்பட்டதில் இருந்து திறைசேரிக்கு எந்தவிதமான சுமையையும் ஏற்படுத்தாது, முறையான நிதி மற்றும் நிர்வாக முகாமைத்துவ நடைமுறைகளில் நல்லாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் பின்பற்றியுள்ளது. CAASLSL 2002 தொடக்கம் 2008 வரை PTA வருமானத்தைப் பெற்று சிவில் விமான சேவை அதிகார சபைக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

	ரூபா
2008 - 2022 வரை பெற்பபட்ட OSS	16,981,667,778.00
கழி:	
ஒருங்கிணைக்கப்பட்ட நிதியத்திற்கான பணப் பெறுகை	6,468,000,000.00
CAASL யின் தலைமைக் காரியாலய கட்டட நிர்மாணம்	895,000,000.00
விமான நிலைய அபிவிருத்தி - சர்வதேச விமான நிலையம், யாழ்ப்பாணம்	900,000,000.00
விமான நிலைய அபிவிருத்தி - சர்வதேச விமான நிலையம், இரத்மலானை	759,800,000.00
விமான நிலைய அபிவிருத்தி - சர்வதேச விமான நிலையம், மட்டக்களப்பு	42,199,000.00
டீஜயு பாதுகாப்பு அபிவிருத்தி - மோப்ப நாய்களுக்கான செலவு	22,111,000.00
இணை அலுவலக நிர்மாணம் - மத்தளை	45,044,000.00
CAASL பரிசோதகர் விடுதி நிர்மாணம் - வீரவில	46,382,000.00
CAASL பரிசோதகர் விடுதி நிர்மாணம் - மட்டக்களப்பு	67,750,000.00
CAASL பரிசோதகர் விடுதி நிர்மாணம் - இரத்மலானை	13,422,000.00
CAASL பரிசோதகர் விடுதி நிர்மாணம் - கட்டுநாயக்க	4,896,000.00
ஏனைய மூலதனச் செலவுகள்	378,690,000.00
இலங்கை சர்வதேச மாநாடுகளை நடத்துதல்	57,700,000.00
2008 - 2022 வரையான தொடர்ச்சியான செலவுகள்	5,906,146,000.00
வருமான வரி	4,039,180,000.00
மொத்தச் செலவுகள்	19,646,320,000.00
CAASL யின் ஏனைய வருமான வழிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள்	(2,664,652,222.00)

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
(உ) 2023 டிசம்பர் 05 ஆம் திகதிய CP/23/2271/604/221 அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் 2023.12.11 ஆம் திகதிய PED 4/2023 சுற்றறிக்கை	முதலாவது அமைச்சரவைத் தீர்மானம் 2023.11.20 இல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, அனைத்து OSS வருமான-ங்களையும் மாற்றுமாறு கோரப்பட்டன. எனினும், இந்தத் தீர்மானத்திற்கு எதிராக கௌரவ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் மேன்முறையீடு ஒன்றைச் செய்துள்ளார். மேன்முறையீட்டின் போது திருத்தப்பட்ட ஆவணம் ஒன்றும், இந்தத் திருத்தத்திற்கான நியாயப்படுத்தல்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இங்கு, நிதி ரீதியாக CAASL நீண்டகாலம் நிலைத்திரு-க்க இது அவசியமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது அமைச்சரவைத் தீர்மானம் 2024.02.19 இல் மேற்கொ-ள்ளப்பட்டது. இதன்படி, 2023 நவம்பர் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 23/1937/628/094 என்ற தீர்மானத்தைக் குறி-ப்பிட்டு, அனைத்து உள்ளடக்கங்களும், சமர்ப்பனங்களும் கருத்திற் கொள்ளப்பட்டன. இதற்கமைய, குறிப்பு 197 பெப்ரவரி 2024/04 என்ற ஆவணம் கருத்திற் கொள்ளப்பட்டு, அமைச்சரவை அமைச்சர்கள் பின்வருமாறு தீர்மானித்தனர். அதன் பிரகாரம், CAASL அதன் செலவுகளுக்காக மாதாந்தம் ரூபா 90 மில்லியனை செலவுகளுக்காக வைத்துக் கொள்ளலாம். சட்டத்தின் பிரகாரம் முதலாவது அமைச்சரவைத் தீர்மானம், இரண்டாவது அமைச்சரவைத் தீர்மானத்தினால் நீக்கப்பட்டது எனக் குறிப்பிடலாம். இதன் பிரகாரம், 2024.02.19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி, சபை OSS தொகைகளை உரியவாறு நிதியத்-திற்கு எடுக்க முடிவு செய்துள்ளது. இந்தத் தீர்மானம் 2023.11.20 இல் இருந்து நடைமுறைக்கு வருகிறது. மேலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், மாதாந்தம் ரூபா 90 மில்லியனைத் தக்க வைத்துக்கொண்டு, மீதித் தொ-கையை திறைசேரி செயற்பாடுகளுக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி TO/REV /01/ 14/ 14-11 என்ற கடிதத்தின் மூலம் இங்கு எழாது. ஆகவே CAASLSL குறிப்பிட்ட கடிதத்துடன் இணங்கி நடந்துள்ளது. எனவே, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான இலாபங்கள் இந்தத் தீர்மானத்தினால் மாற்றமடையாது. மேலும், 2023 ஆம் ஆண்டுக்கான இலாபத் தொகையான ரூபா 4,600,480,452 இல் இருந்து ரூபா 360,288,651 தொகை மாத்திரமே கழிக்கப்படும். இது, 2023.11.20 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய தொகையா-கும். OSS வருமானம் CAASLSL யின் வருமானத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதுடன், 2002 இலிருந்து வருமான வரி செலுத்தப்பட்டுள்ளது.
(ஊ) PED சுற்றிக்கை இல. 04/2003	CAASLSL செயற்திறன் அல்லது சமூகமளிப்புக்கு எதிராக எந்தவொரு முகாமைத்துவக் கொடுப்பனவையோ அல்லது இடைக்காலக் கொடுப்பனவையோ வழங்காது.
(எ) 2021 நவம்பர் 17 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றிக்கை	
பிரிவு 2.3	பணியாளர்களின் கையேடு மற்றும் நிர்வாக விதிமுறைகளின் மீளாய்வு பூர்த்தியாக்கப்பட்டு (SLCAP 5000), இரண்டாவது மீளாய்வு நடைபெற்று வருகிறது. ஏனைய கையேடுகள், சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) ஏற்பாடுகளு-க்கு அமைவாகத் திருத்தப்பட்டுள்ளன.
பிரிவு 3.2	முகாமைத்துவ மட்டக் கொடுப்பனவு முகாமைத்துவக் கொடுப்பனவு, முகாமைத்துவ வகைகளுக்குள் உள்ளடக்கும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். (சம்பள மட்டம் MM 1-1) பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டவர்) இந்த வகுதிக்குள் 19 சிரேஷ்ட சிவில் விமானத்:துறை பரிசோதகர்களும், 15 முகாமையாளர்களும் உள்ளடங்குவர். சபை 2018.03.29 இல் நடைபெற்ற அதன் 143வது கூட்டத்தில், முகாமையாளர்களுக்கு ரூபா 20,000 போக்குவரத்துக் கொடு-ப்பனவுகளுக்குப் பதிலாக, மாதாந்தம் ரூபா 50,000 கொடுப்பனவாக வழங்கத் தீர்மானித்துள்ளது.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
	2023.02.01 இல் நடைபெற்ற 185வது கூட்டத்தில், அதிகார சபை, பின்வரும் காரணங்களுக்காக முகாமையாளர்களுக்கான கொடுப்பனவைத் தொடரத் தீர்மானித்தது. 2018 இலிருந்து கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் காரணமாக, அத்தீர்மானத்தை மீளப்பெற முடியாது. ✈ நடுத்தர அளவிலான முகாமையாளர்களை திறம்பட செயற்படுவதற்காக சீர்படுத்துதல் மற்றும் பின்னுறு திட்டம் மற்றும் மாற்றம்: இந்த வகையைச் சார்ந்த பணியாளர்கள், CAASL இல் உள்ள பணிப்பாளர்களுக்கு உடனடுத்த மட்டத்தில் உள்ளவர்கள், அத்துடன், அவர்கள் வருடாந்த வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக பகுப்பாய்வு, திட்டமிடல், எதிர்வுகூறல் ஆகியவற்றில் பல்வேறு கடமைகளை மேற்கொள்வதுடன், அவர்களுடைய வேலை நேரம், பொது அலுவலக நேரத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர்களின் வேலை நேரம், வார நாட்களில் நீடிக்கப்பட்டால், அத்துடன், வார இறுதி நாட்களில் கடமைக்கு அழைக்கப்பட்டால், CAASL அவர்களுக்கு சாதாரண சூழ்நிலைகளின் கீழ் போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டும். கொடுப்பனவை வழங்குவதன் ஊடாக, போக்குவரத்துச் சேவையை வழங்க அவசியமில்லை. இதன் மூலம் CAASL இன் செலவுகளைச் சிக்கனப்படுத்த முடியும். ✈ அதிகார சபையின் சேவைக்காக திறமையான அதிகாரிகளைத் தக்கவைத்துக் கொள்ளல் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினுடைய (ICAO) தேவைப்பாட்டின்படி, இவ்வகையான தனித்துவமான பணித்தன்மை காரணமாக, சந்தை மதிப்புடன் கூடிய ஊதியத்தை வழங்க வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது. இதன் மூலம், அமைப்புக்குள் உள்ள ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளினுடைய பணியாட்களைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். பாதுகாப்பு மேற்பார்வைக் கையேடு (DOC 9734) சம்பளம், சேவைக்கான நிபந்தனைகள் என்பவற்றை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் குறிப்பிடுகிறது. இது, தகுதிவாய்ந்த ஆட்கள், பாதுகாப்பு மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்வதற்காக பணியமர்த்தப்படுவதையும், தக்க வைக்கப்படுவதையும் உறுதி செய்யும். ✈ பிரயாணம் செய்கின்ற கவலைகளைத் தவிர்த்து, முகாமைத்துவ வகையைச் சார்ந்த பணியாட்கள் சுயாதீனமாக உத்தியோகபூர்வ நகர்வுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம், அவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனாகவும், திறமையாகவும் நிறைவேற்ற உதவுகிறது. ✈ இத்தகைய ஊழியர்கள், அவர்களின் சொந்தப் போக்குவரத்து ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பணிக்குச் சமூகமளிக்கும் போது, அதிகார சபை போக்குவரத்துக்களை வழங்குவதற்கான நடைமுறை ரீதியான சிக்கல்களையும், நிதிச் செலவுகளையும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ✈ கொடுப்பனவு செலுத்துவதை நிறுத்துதலானது, நிறுவனத்தின் அந்தஸ்து, மற்றும் முகாமைத்துவ வகையைச் சார்ந்த அலுவலர்களின் வாழ்க்கைத் தரம் என்பவற்றைக் கடுயைாகப் பாதிக்கும். மேலும், இந்தப் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் விரிவான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். எனவே, அவர்கள் வெளியேறினால் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பெரும் இழப்பாக அமைவதுடன், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து (ICAO) அமைப்பினால் னால் நடத்தப்படும் கணக்காய்வில் தீவிரமானகண்டறிதல்கள் ஏற்படலாம். ✈ இந்தக் கொடுப்பனவின் ஆரம்பக்கட்டத்தில், அனைத்து முகாமைத்துவப் பிரிவுகளையும் சார்ந்த அலுவலர்களும், அவர்களுக்கு விருப்பமான போக்குவரத்து முறைமையை அமைத்துக்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, அவர்கள் அதிகார சபையின் கீழ் உள்ள வாகனக் கடன் திட்டத்தின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்தனர். எனவே, குறிப்பிட்ட கொடுப்பனவை நிறுத்தினால், கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதில் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். ✈ இவ்வகையான அலுவலர்கள், தமது சொந்தப் போக்குவரத்து ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதனால், அதற்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவு, சிரேஷ்ட சிவில் விமான மேற்பார்வையாளர்களால் விமானத்துறைக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள உதவும்.
	இடைக்காலக் கொடுப்பனவு 2022.04.08 இல் நடைபெற்ற சபையின் 180வது கூட்டத்தில் CAASLSL யின் ஊழியர்களுக்கு ரூபா 25,000 இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்து அவர்களின் சம்பளத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படாமையினால், இந்தக் கட்டணம் அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்தப்பட்டது. மேலும், கடந்த வருடத்தில் வாழ்க்கைச் செலவு பாரியளவில் அதிகரித்திருந்தமை இங்கு இன்னுமொரு விடயமாகக் குறிப்பிடப்பட்டது. அதாவது, கடுமையான ஒழுங்குவிதிகள் காரணமாக, தகுதிவாய்ந்த பணியாட்களை சிவில் விமான திணைக்களத்திற்குச் சேர்த்துக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. அத்துடன், 2002 இல் DCA விற்கு கூடிய சுயாதீனத் தன்மை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
	மேலும், சபையின் அவதானத்தின்படி, கடந்த காலங்களில் CAASL எந்தவித நட்டத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதுடன், ஒருங்கிணைந்த நிதியத்திற்கு 2022 இல் ரூபா 1000 மில்லியனைப் பங்களிப்புச் செய்தது. ஆகவே, தற்போதைய பொருளாதார கடின சூழ்நிலைகளின் கீழ், ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீளப் பெறப்பட்டால், அவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதுடன், நாட்டில் விமானப் போக்குவரத்துத்துறை முடக்கப்படுவதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளும் ஏற்படலாம். மேலே குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு 2023.02.01 இல் நடைபெற்ற சபையின் 185வது கூட்டத்தில் இடைக்காலக் கொடுப்பனவைத் தொடரத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், 2022.04.08 இல் நடைபெற்ற 180வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தற்காலிகத் தீர்மானம் ஒன்றாகையால், இது, எதிர்கால சம்பள சீராக்கங்கள் அல்லது அதிகரிப்பு விடயத்தில் உள்வாங்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. அதற்கமைய, 2024.01.19 இல் நடைபெற்ற சபையின் 196வது கூட்டத்தில், ஒவ்வொரு பணியாளருடைய இடைக்காலக் கொடுப்பனவில் இருந்தும் ரூபா 10,000 ஐக் குறைத்து, 01/2024 ஆம் இலக்க OMS சுற்றறிக்கை மூலம், அதிகரித்துள்ள வாழ்க்கைத்தரச் செலவுக் கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. **விசேட கொடுப்பனவு** பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. 01/2022 இல் உள்ள ஏற்பாடுகளின்படி, ரூபா 5000 விசேட கொடுப்பனவு செலுத்தப்பட்டது. இதற்குரிய தீர்மானம் 2022.02.28 இல் நடைபெற்ற 177வது சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.
	தொழில்நுட்பக் கொடுப்பனவு நிதி அமைச்சினால் "சர்வதேச சிவில் விமானத்துறை உடன்படிக்கையின் கீழ் பாதுகாப்புக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டிய அவசரத் தேவை தொடர்பான சர்வதேச கடப்பாடுகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் உள்ள கடமைகள் தொடர்பான" என்ற துறையின் கீழ் 2015.04.09 எனத் திகதியிடப்பட்ட, DMS/1748 ஆம் இலக்க கடிதத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. விண்ணப்பதாரி ஒருவர் தொழில்நுட்பக் கொடுப்பனவுக்கான வேண்டுகோளை மேற்கொள்ளும் போது, இந்த வேண்டுகோள் விசேட குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டு (விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவு தொடர்பான மதிப்பீட்டுக் குழு) பணியாட்கள் குழுமத்தின் பரிந்துரையின்படி செலுத்தப்படும்.
(i) PED சுற்றறிக்கை 04/2022	CAASL - 2023 ஆம் ஆண்டில் நிகழ்ச்சிகளை நடத்துவது தொடர்பான செலவுகளைக் குறைத்துள்ளது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இச்செலவுகளில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84% வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனினும், CAASL ஜனவரி 01 ஆம் திகதி தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டில் பணியாட்களுக்கு ஊக்குவிப்பை வழங்கக்கூடிய விடயங்களுடன் தொடர்புடைய முக்கியமான நிகழ்ச்சிகளுக்குச் செலவிட வேண்டியிருந்தது.
(j) FR 101,103 மற்றும் 104	இந்த விடயம், உள்ளக தர மற்றும் கணக்காய்வுப் பிரிவினால் இல. QIA/2023/ HRPM/06 - வீரவில சுற்றுலா பங்களா பராமரிப்பாளரின் ஓய்வுப் பகுதி - கண்டுபிடிக்கப்பட்டது. CAASL இனுடைய 83வது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் துமிந்து கேட்டரசுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 252,000 செலுத்தப்பட்டது. இதற்கமைய, திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
(k) 2015 ஏப்ரல் 09 ஆம் திகதிய DMS/1748 இலக்க நிதியமைச்சின் செயலாளரது கடிதம்	நிதி அமைச்சினால் "சர்வதேச சிவில் விமானத்துறை உடன்படிக்கையின் கீழ் பாதுகாப்புக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டிய அவசரத் தேவை தொடர்பான சர்வதேச கடப்பாடுகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் உள்ள கடமைகள் தொடர்பான" என்ற துறையின் கீழ் 2015.04.09 எனத் திகதியிடப்பட்ட, DMS/1748 ஆம் இலக்க கடிதத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் சிறப்பு தொழில்நுட்பக் கொடுப்பனவு செலுத்துவதற்கான மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரிலும், பணியாளர் குழுவின் ஒப்புதலின் பேரிலும் விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
(I) பணியாளர் கையேடு மற்றும் நிர்வாக விதிகள்	பணியாளர் கையேடு மற்றும் நிர்வாக விதிகளின் பந்தி 5.2.10 க்கு அமைய, பணி ஒப்படைப்புகள் - அவசர சேவைகளின் போது CAASL அங்கீகரிக்கப்பட்ட பணியாட்கள் தொகுதிக்கு அப்பால் விசேட வேலைகளை மேற்கொள்ள ஆட்களைப் பணியமர்த்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 2017.07.27 இல் நடைபெற்ற 136வது சபைக் கூட்டத்தில் ஒப்படை அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
(i) பணியாளர் கையேடு மற்றும் நிர்வாக விதிகளின் பிரிவு 5.2.6	பணி ஒப்படைப்புக்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் அவசியமில்லை. CAASL சட்டத்தின் பிரிவு 7(v) பகுதி 11 க்கு அமைவாக அதிகார சபை ஒப்பந்த அடிப்படையில் தகுதிவாய்ந்த ஆட்களை வேலைக்கு அமர்த்தவும், கைத்தொழில் துறை தராதரங்களுக்கு அமைவாக ஊதியங்களை வழங்கவும் அதிகாரம் கொண்டுள்ளது. மேலும், பணியாளர் கையேடு மற்றும் நிர்வாக விதிகளின் (SLCAP 5000) கீழ் அவசர சேவைகளுக்கு விசேட ஒப்படை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதிகளுக்கு அப்பால் ஆட்களைப் பணியமர்த்த அதிகார சபைக்கு அதிகாரம் உள்ளது. 2017 ஜுலை 27 இல் நடைபெற்ற 136வது சபைக் கூட்டத்தில் விசேட தொழில்நுட்ப நிபுணத்துவம் தேவைப்படுகின்ற கடமைகளை மேற்கொள்ள ஒப்படை அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட பரிசோதகர்களை நியமிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.
(ii) பிரிவு 14.5.1 மற்றும் 14.8.2(iv)	2023 ஒக்டோபர் 11 இல் நடைபெற்ற 193வது சபைக் கூட்டத்தில், வாகன மற்றும் ஆதனக் கடன் தொடர்பான வட்டி வீதத்தை 7% ஆல் அதிகரிப்பதற்கு பணிப்பாளர்கள் சபை அங்கீகாரம் அளித்தது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2.2.3 தேசிய கணக்காய்வுச் சட்டம் 2018	
(அ) நிதிக் கையேடு மற்றும் கூட்டுறவுக் கையேடு	**நிதி விதிகள்** SLCAP 5000 பிரிவு 4.1 இன் பிரகாரம் : பணியாளர் கையேடு மற்றும் நிர்வாக விதிகள், நிதி நடைமுறைகள் மற்றும் கொள்வனவு வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக CAASL பிரத்தியேகமான நிதிக் கையேடு ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு உள்ளது. இத்தேவைப்பாட்டுடன் இணங்கி நடக்கும் வகையில் CAASL பிரத்தியேகமான நிதிக் கையேடு ஒன்றைத் தயாரித்துள்ளது. இக்கையேடு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பல்வேறு கூட்டங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் (AMC) மீளாய்வு செய்யப்பட்டது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, 2018 மே 25 இல் நடைபெற்ற அதன் 61வது கூட்டத்தில் சபை அங்கீகாரத்திற்காக கையேட்டினைச் சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்தது. எனினும், இந்த அங்கீகாரம் இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை.
	CAASL இனால் உருவாக்கப்பட்ட நிதிக்கையேடு, முக்கியமாக நிதிச் சட்டம், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் கொள்முதல் ஒழுங்கு விதிகளைப் பிரதிபலிக்கின்றன. இவையனைத்தும் ஏற்கனவே நியதிச் சட்ட சபைகளைப் பிணிக்கின்றன. நிதிச் சட்டம் (FR) மற்றும் கொள்முதல் வழிகாட்டிகள் CAASL இனால் தயாரிக்கப்பட்ட கையேட்டினைவிட விரிவானது. மேலே குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு CAASL பின்வரும் விடயங்களைத் தீர்மானிக்கிறது: CAASL க்கு எனத் தயாரிக்கப்பட்ட பிரத்தியேகமான கையேட்டை உருவாக்குவதைத் தவிர்த்து, அதற்குப் பதிலாக, நிதிச் சட்டம், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல்கள் என்பவற்றைப் பின்தொடரத் தீர்மானித்தது. SLCAP 5000 இன் பிரிவு 4.1 இன் கீழ் உள்ள பிரத்தியேகமான கையேட்டின் தேவைப்பாட்டை நீக்குவதற்கு பரிந்துரை செய்துள்ளதுடன், எதிர்காலத்தில் வரும் மீளாய்வுச் செயன்முறையில் இது கருத்திற் கொள்ளப்படும்.
2.2.4 கொள்முதல்	இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை (CAASL) வீரவிலயில் அமைந்துள்ள பங்களாவைப் புனரமைக்க உரிய நேரத்திலான அவசியமான முடிவை மேற்கொண்டுள்ளது. இந்த முடிவானது, அவசரமான திருத்தம் தொடர்பான தேவைப்பாட்டிற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், காலப்போக்கில் இந்தச் சொத்து, மோசமாகப் பாதிப்படையக் கூடும். பங்களாவின் நிலைமை மிகவும் மோசமடைந்திருப்பதுடன், ஊழியர்களும், வாடிக்கையாளரும் அங்கு சமூகமளிக்கவோ, தங்கியிருக்கவோ தயக்கம் காட்டுகின்றனர். இது, சாத்தியமான வருமானத்தை இல்லாமல் செய்யக்கூடும். அரசாங்க கொள்முதல் வழிகாட்டி 7.12.2 க்கு அமைவாக, தேசிய போட்டி ரீதியான ஏலத்தைக் (NCB) கோருகின்ற போது, ஒரேயொரு ஏலம் பெறப்பட்டாலும், சில சூழ்நிலைகளின் கீழ் குறிப்பிட்ட கொள்முதல் செயன்முறை நடைபெறலாம். இந்த வழிகாட்டுதலுக்கு அமைய, மட்டுப்படுத்தப்பட்ட போட்டி சந்தர்ப்பங்கள் உள்ள போதிலும், கொள்முதல் நியாயமாகவும், வினைத்திறனாகவும் அமைய வேண்டும். DPC யினால் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் பொருளாதார நெருக்கடிகளுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட தொகைகளாகும். ஆகவே, இரண்டு அல்லது மூன்று மடங்கு விலை அதிகரிப்பு ஏற்பட்டிருத்தலை அறிந்திருப்பதன் காரணமாக, விலைகளைக் குறைப்பதற்கான திருத்தம் நடைமுறைக்குச் சாத்தியமில்லை.

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
	இதற்கு மேலதிகமாக, 2023 மார்ச் 13 எனத் திகதியிடப்பட்ட அவர்களுடைய கடிதத்தில், ஏலதாரர் நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்டுள்ள உயர் விலை, ஸ்திரமற்ற தன்மை, ஏற்ற இறக்கங்கள் காரணமாக எதிர்கொள்ளப்படும் சவால்கள் பற்றி CAASL க்கு அறிவித்துள்ளார். இங்கு, இந்தச் சிக்கல்கள், கட்டுமானக் கைத்தொழிலைப் பாதித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் கட்டுமானக் கைத்தொழிலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டு CAASL கொள்முதல் அலுவலகம் DPC யிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் சந்தை நிலைமைகள், கொள்முதல் வழிகாட்டிகளின் இறுக்கமான கடைப்பிடிப்பு என்பவற்றின் பின்னணியில் DPC அதன் ஏலதாரருக்கு ஒப்பந்தத்தை மீள வழங்கத் தீர்மானம் மேற்கொண்டது. இந்தத் தீர்மானமானது, மாறுபடுகின்ற சந்தை நிலைமைகள், முன்னைய கொள்முதல் நடைமுறைகள், ஏலதாரரின் செயற்திறன், மிக முக்கியமாக ஏலதாரரை அதேவிலையில் இணங்கச் செய்தல் போன்ற CAASL க்கு அதிக நன்மையை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏலதாரர் C7 மட்டத்தில் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்துள்ளார். இலங்கையில் கட்டுமானக் கைத்தொழில் துறையை ஆளுகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற அதிகார சபையான CIDA பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்களும் தரக் கட்டுப்பாடு, நம்பகத்தன்மை மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துகிறது, C7 பதிவு என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கடுமையான தராதரங்களை ஏலதாரர் பின்பற்றுகிறார் என்பதைப் பிரதிபலிக்கின்ற உயர்மட்ட திறன் மற்றும் நம்பகத்தன்மையைக் குறிப்பிடுகிறது. இந்த ஒப்பந்த நீடிப்பானது, ஆரம்பத் திட்டத்தைவிட மாறுபட்ட ஒன்றாகும். இங்கு 12 குளியலறைகளில் சுவர்களுக்கு சுவரோடுகள் பொருத்தும் பணி வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் முதலில் வழங்கப்பட்ட பணிகளில் இருந்து பரஸ்பர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. எனவே, ஆரம்பத் திட்டத்திற்குப் பொருந்தும் கால எல்லை இதற்குப் பொருந்தாது. கட்டட கட்டுமானப் பணி பூர்த்தியடைந்து 08 வருடங்களின் பின்னர், குறிப்பிட்ட கட்டடத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமை, விரிவான பரிசோதனை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு சிங் கழிப்பறைகள் மற்றும் ஏனைய குளியலறை பாகங்கள் என்பன பாதிப்படைந்துள்ளன. இந்தப் பரிசோதனையில், நிறம் மங்கியிருத்தல், வெடிப்புகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நிறம் மங்கியிருப்பதன் மூலம் குறிப்பிட்ட நிறப்பூச்சு தரம் குறைந்தது என்பதைக் காட்டுவதோடு, உயர் வெப்ப வெளிப்பாடு காரணமாக, சில பொருட்கள் எரிந்துள்ளமையும் தெரிய வருகின்றது. மேலும், சுவர்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புகள் செயற்பாடு மற்றும் அழகியல் இரண்டையும் பாதித்துள்ளன. இந்தச் சிக்கல்கள் காரணமாக, குளியலறைகளில் உள்ள பாகங்களில் பயன்பாட்டுத் தன்மை, தோற்றம் என்பன மோசமாகப் பாதிப்படைந்திருப்பதுடன், அவற்றுக்குப் பதிலீடுகள் அவசியமாகும். புதிய அதி உயர் தரம்வாய்ந்த பொருத்துக்களை இணைப்பதன் மூலம் சுகாதார தர நிலைகளையும், செயற்பாட்டுத் திறனையும், தோற்றப்பாட்டையும் உறுதிப்படுத்துவதன் மூலம், பங்களா அவற்றை பயன்படுத்துபவர்களுக்கு நல்ல நிலையில் வழங்கப்படுதலை உறுதிப்படுத்துகிறது. அத்துடன், இது CAASL உடைய மதிப்பையும் மேம்படுத்தும்.
ஏனைய விடயங்கள்	
(அ) எம்பாக்கேசன் தீர்வை தொடர்பான கட்டணங்களில் தாமதம்	CAASL ஆனது, நிதிச்சட்டத்தின் பிரிவு 4 மற்றும் உப பிரிவு (3) இன் கீழும், எம்பாக்கேசன் தீர்வை ஒழுங்குவிதிகளின் அடிப்படையிலும், தாமதமான வட்டியை மீட்டெடுக்க தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த விடயம், அமைச்சரவை மற்றும் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவையிலுள்ளவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இறுதி நினைவூட்டல்கள் தொடர்புபட்ட எயார்லைன் நிறுவனங்களுக்கு கௌரவ சட்டமா அதிபரினால் கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.
(ஆ) தீர்க்கப்படாத முற்பணங்கள்	2023 ஒக்டோபர் 30 இல் நடைபெற்ற சபையின் 194வது கூட்டத்தில், பணிப்பாளர் சபையினால் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. CAASL யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்திக்காக மதிப்பீடு மற்றும் திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் (PPEC) மற்றும் திட்ட கொள்முதல் அங்கீகாரக் குழு (PPAC) என்பவற்றின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்துள்ளது. இந்தக் குழுக்கள் 2020 ஜுலை 13 ஆம் திகதி இறுதியாக நியமிக்கப்பட்டன. (சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சினால்) குறிப்பிட்ட குழுக்களின் உறுப்பினர்கள் குழுக்களில் இல்லாமையினால், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு குழுக்களை அமைப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், முற்கொடுப்பனவுத் தீர்வுகளை மேற்கொள்ள முடியும். CAASL விபரங்களைச் சமர்ப்பித்தவுடன், தீர்க்கப்படாத முற்பணங்கள் மூலதனமாக்கப்படும். இவ்விடயம் தொடர்பாக தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

நிதிக் கூற்றுக்கள்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் 2023

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
(இ) எம்பாக்கேசன் தீர்வையைக் கணக்கிடும் போது பயன்படுத்-தப்பட்ட நாணயமாற்று வீதங்கள்	எம்பாக்கேசன் தீர்வையைக் கணக்கிடுவதற்கு விமான பயணத் திகதியுடன் தொடர்புடைய நாணயமாற்று விகிதத்தை விமான நிறுவனம் பயன்படுத்தவில்லை. இது, அவர்களுடைய கவனக் குறைவால் ஏற்பட்ட விடயங்களாகும். ஒருசில இடங்களில் மாத்திரம் சரியான முறையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. எனினும், கவனக் குறைவால் ஏற்பட்ட குறைபாடுகள் பின்னர் சீர் செய்யப்பட்டன. CAASLSL 015 - (23-1) இனை சமர்ப்பிக்கத் தவறிய விமான நிறுவனங்கள் பயணச்சீட்டு வழங்கப்பட்ட தி-கதியின் அடிப்படையில் பணமாற்று விடயங்களை வழங்கின. பயணச்சீட்டு வழங்கப்பட்ட திகதியின் அடிப்படையில் விமான நிறுவனங்கள் மாற்று விகித விவரங்களை பணத்தை மீள வழங்கியுள்ளன.
(ஈ) வானூர்தி வசதிகள் மற்றும் காணி	பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனம் தற்போது இந்த சொத்துக்களைப் பயன்படுத்தி வருகிறது. சட்ட சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு, நீண்டகால வரி முறைமை தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் கௌரவ சட்டமா அதிபரினால் வழங்கப்படும் அறிவுரையின்படி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். CAASL மட்டக்களப்பு விமான நிலையம் தொடர்பாக நகல் குத்தகை உடன்படிக்கையைத் தயாரித்துள்ளது. இவ்வுடன்படிக்கை மீளாய்வுக்காக விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்கு (AASL) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் குத்தகை உடன்படிக்கை பூர்த்தியான பின்னர், இதே நடைமுறை ஏனைய விமான நிலைய-ங்களுக்கும், வானூர்தி வசதிகளுக்கும் வழங்கப்படும்.
(உ) திகன, பதுளை மற்றும் புத்-தளம் ஆகிய உள்நாட்டு விமான நிலையங்கள்	பதுளை விமான நிலையத்தின் சாத்தியப்பாடு தொடர்பான கற்கை CEA நிர்வாகக் கட்டணங்கள் EIA ஐப் பிரசுரிப்பதற்க-ான பத்திரிகை விளம்பரம் தொடர்பான கட்டணங்கள், அளவைக் கட்டணங்கள் என்பன செலுத்தப்பட்டுள்ளன. அளவை மற்றும் CEA நிர்வாகக் கட்டணங்கள் என்பன புத்தளம் விமான நிலைய அபிவிருத்திக்காகவும் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. திகன விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் சாத்தியப்பாட்டு கற்கை மாத்திரம் குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
(ஊ) வீரவில முகாமைத்துவக் கட்டணம்	2017 மார்ச் 15 ஆம் திகதி துமிந்த கேட்டரிங்ஸ் உடன் கையொப்பமிட்ட உடன்படிக்கையை 2018 மார்ச் 16 இல் இருந்து 2019 மார்ச் 15 வரை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க முகாமைத்துவத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானமா-னது, குறிப்பிட்ட உடன்படிக்கையில் வாசகம் 2 இல் குறிப்பிடப்பட்ட விதிகளின் அடிப்படையில் நீடிக்கப்பட்டுள்ளது. வாசகம் 2 திருப்திகரமான சேவை அடிப்படையில் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க கொள்முதல் வழிகாட்டிகளுக்கு அமைய, குறிப்பிட்ட பங்களாவுக்குப் பொருத்தமான விநியோகத்தரைத் தெரிவு செய்வதற்கான கொள்முதல் செயன்முறை ஆரம்பித்துள்ளது. இந்த விநியோகத்தர் 2019 மார்ச் 15 இல் இருந்து 2021 மார்ச் 14 வரையான காலப்பகுதிக்கு நியமிக்கப்பட உத்தேசிக்கப்பட்டது. இது தொடர்பான பத்திரிகை விளம்பரங்கள் 2019 பெப்ரவரி 12 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. இது தொடர்பான ஏலம் 2019 மார்ச் 01 ஆம் திகதி நடாத்த தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், போக்குவரத்து மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம், மேலதிக அறிவித்தல் வரும் வரை கொள்முதல் செயன்முறை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையடுத்து, தற்போதுள்ள முகாமைத்துவ நிறுவனத்திற்கு பின்வரும் வகையில் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய நீடிப்புகள் வழங்கப்பட்டன. 1. 1வது நீடிப்பு 2019 மார்ச் 14 இலிருந்து 2019 மார்ச் 28 வரை (2 வாரங்கள்) 2. 2வது நீடிப்பு 2019 மார்ச் 28 இலிருந்து 2019 ஏப்ரல் 14 வரை (2 வாரங்கள்) 3. 3வது நீடிப்பு 2019 ஏப்ரல் 15 இலிருந்து 2019 ஏப்ரல் 30 வரை (2 வாரங்கள்) 4. 4வது நீடிப்பு 2019 ஏப்ரல் 30 இலிருந்து 2019 மே 31 வரை (ஒரு மாதம்) இதனைத் தொடர்ந்து CAASL முறையான முகாமைத்துவம் இன்றி குறிப்பிட்ட பங்களாவின் பராமரிப்பு பாதிக்க-ப்பட்டுள்ளமையினால், அதற்குரிய தீர்மானம் ஒன்றை வழங்குமாறு அமைச்சை வேண்டிக் கொண்டது. இந்த பங்களாவைப் பராமரிக்கும் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே சேவைகளை வழங்கி வரும் நிறுவனங்களின் சேவை-களைப் பயன்படுத்தவும், தொடர்ந்து துப்புரவு மற்றும் பாதுகாப்புப் பணிகளைத் தொடரவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் அதே வீதத்தில் பணம் செலுத்துமாறும் CAASL தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, முகாமைத்துவ சேவை நடவடிக்கைகள் 2021 ஜனவரி 11 வரை நடைபெறவில்லை. எனவே, ஒப்பந்தம் ஒன்றும் அங்கு காணப்படவில்லை. CAASL இன் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஜெனிடோறியல் (Janitorial) ஒப்பந்த அடிப்படை-டயில் துப்புரவு மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன.

சட்டம் / வழிகாட்டி தொடர்பான குறிப்பு	விபரம்
	வீரவில சுற்று பங்களா தொடர்பில் ஆராய்வதற்கென கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் அதாவது 2020 டிசம்பர் 28 இல் நடைபெற்ற கூட்டத்தில், வீரவில சுற்று பங்களாவின் முகாமைத்துவத்தை முன்னைய முகாமைத்துவ ஒப்பந்ததாரரான துமிந்து கேட்டரசுக்கு 03 மாத காலப்பகுதிக்கு வழங்குமாறும், அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் கொள்முதல் விடயங்களைப் பூர்த்தி செய்யுமாறும் DGCA யினால் அறிவுரை வழங்கப்பட்டது. இந்தக் காலப்பகுதிக்கும் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் பொருந்தும். இந்தத் தீர்மானத்தோடு இணங்கி ஒழுகும் வகையில், மேலதிக சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் அவர்களினால் கையொப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று துமிந்து கேட்டரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் கடிதத்தில் 2021 ஜனவரி 11 தொடக்கம் 2021 ஏப்ரல் 10 வரை சேவை வழங்குவதற்கான பொறுப்பு கையளிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட தீர்மானத்திற்காக 2023 மார்ச் 10 இல் DPC யிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது. இதனையடுத்து, அரசாங்க கொள்முதல் செயன்முறையைப் பயன்படுத்தி, துமிந்து கேட்டரசுக்கு மேலும் இரண்டு வருட காலப் பகுதிகளுக்கு வீரவில சுற்று பங்களாவுக்கு முகாமைத்துவ சேவை வழங்கும் பொறுப்பு கையளிக்கப்பட்டது. குறிப்பிட்ட இரண்டு வருட காலப்பகுதி 2021 ஏப்ரல் 12 இல் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான மாதாந்தக் கட்டணம் ரூபா 210,000.00 ஆகும். இங்கு திருப்திகரமான சேவைகளின் அடிப்படையில் இன்னும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கான ஏற்பாடும் உள்ளடக்கப்பட்டது. மேலும், இரண்டு வருட சேவைகளின் பின்னர், ஒப்பந்தம் 2023 ஏப்ரல் 13 இல் இருந்து 2023 ஒக்டோபர் 12 வரை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது இது, ஏற்கனவே கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் வாசகம் 2 ஐ அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாசகம் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் ஒப்பந்தம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இதே நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்பந்தம் இன்னும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இக்காலப்பகுதி 2023 ஒக்டோபர் 13 இருந்து 2024 பெப்ரவரி 12 வரையாகும். இவ்வேற்பாடு கொள்முதல் நடைமுறையைப் பயன்படுத்தி புதிய ஒப்பந்ததாரரை நியமிக்கும் வரை மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடாகும். பாதுகாப்புச் சேவைகள், துப்புரவு செய்தல் பணி, தோட்டப்பகுதியைச் சுத்தம் செய்தல், வடிகாலமைப்பு முறையைச் சீர்திருத்துதல், மலர்ச் செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், திரைச்சீலைகளை அகற்றி புதிதாக மாற்றுதல், இருக்கை உறைகளை மாற்றுதல், பொருள் விபரப்பட்டியலைப் பராமரித்தல் மற்றும் அவசர பராமரிப்பு தொடர்பாக தலைமைக் காரியாலயத்திற்கு அறிக்கையிடும் பணி என்பன இக்காலப்பகுதியில் முகாமைத்துவ ஒப்பந்ததாரரால் நிறைவேற்றப்பட்டன. மீள் புதுப்பிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், அதற்குரிய ஒதுக்கீடுகள் இன்னும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய சேவைகள் மேலே விளக்கப்பட்டவாறு நடைபெற்றன. இதன் காரணமாக, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்தமைக்காக முகாமைத்துவ ஒப்பந்த நிறுவனத்திற்கு கட்டணம் செலுத்தப்பட்டது. DPC யின் தீர்மானத்தைப் பின்தொடர்ந்து, குறிப்பிட்ட ஒப்பந்தம் அபான்ஸ் என்வயர்மன்டல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 2024 பெப்ரவரி 13 இருந்து 2025 பெப்ரவரி 12 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.



ஜீ. எஸ். விதானகே
தலைவர்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை

இணைப்புக்கள்

ஒழுங்குபடுத்தல் எல்லை

ஒழுங்குபடுத்தப்பட்ட துறை	2023	2022	மாற்றம் (%)
விமான நிலையங்கள்			
உள்நாட்டு நில விமான நிலையங்கள்	10	10	-
உள்நாட்டு நீர் விமான நிலையங்கள்	11	11	-
சர்வதேச விமான நிலையங்கள்	4	4	-
விமான நிறுவனங்கள்			
உள்நாட்டு விமான சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான நிலையங்கள்	5	5	-
சர்வதேச விமான சேவைகளில் ஈடுபடும் விமான நிறுவனங்கள்	2	2	-
சர்வதேச வெளிநாட்டு விமான நிறுவனங்கள்	37	31	19%
பயிற்சி நிறுவனங்கள்			
விமானப் பயிற்சியளிக்கும் பாடசாலைகள்	7	8	-13%
மதிப்பிடல் வகை பற்றி பயிற்சியளிக்கும் நிறுவனங்கள்	1	2	-50%
பொறியியல் / பராமரிப்புப் பாடசாலைகள்	5	4	25%
சிவில் விமானத்துறைப் பயிற்சி நிலையங்கள்	1	1	-
விமான வழி செலுத்துகை			
விமான வழிசெலுத்துகை சேவை வழங்குநர்கள்	1	1	-
விமானத்தின் பதிவுகளும் பெறுமதிகளும்			
பெரிய விமானம் (தாங்கக்கூடிய அதிகூடிய நிறை 5700கிகி மற்றும் அதற்கு மேல்)	29	30	-3%
சிறிய விமானம் (அதிகமாக எடுக்கக்கூடிய ஆகக்கூடிய நிறை 5700கிகி குறைவானது)			
இலகு போக்குவரத்து விமானம்	40	41	-2%
அல்ட்ரா - இலகு விமானம்	1	1	-
ஹெலிகொப்டர்	7	7	-
ஹொட் விமான பலூன்கள்	4	4	-
பயிற்சி உபகரணங்கள் மற்றும் பறக்கும் பயிற்சி உபகரணங்கள்			
உள்நாட்டு விமான சிமியுலேட்டர்கள் - A 320/A 330/ ஒருங்கிணைக்கப்பட்ட குழுமப் பயிற்சி	3	3	-
ATC சிமியுலேட்டர்	1	1	-
தனிப்பட்ட உரிமங்கள்			
மாணவர் விமானி உரிமம் வைத்திருப்போரின் தொகை	253	145	74%
தனிப்பட்ட விமானி உரிமம் வைத்திருப்போரின் தொகை	100	124	-19%

ஒழுங்குபடுத்தப்பட்ட துறை	2023	2022	மாற்றம் (%)
வர்த்தக விமானி உரிமம் வைத்திருப்போரின் தொகை	300	174	72%
விமானப் போக்குவரத்து விமானி உரிமம் வைத்திருப்போரின் தொகை	768	293	162%
விமானப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் உரிமங்களைப் பெற்றவர்கள்	68	45	51%
விமானப் பராமரிப்பு உரிமங்களைப் பெற்றோர்	275	60	358%
விமான அனுப்புகை உரிமம் வைத்திருப்போர் / விமானத் தொழிற்பாட்டு அலுவலர்களின் உரிமம்	4	0	-
விமான நிலைய தொழிற்பாட்டு உரிமம் வைத்திருப்போர்	0	1	-100%
விமானப் பணியாளர் உரிமைச் சான்றிதழ்களை வைத்திருப்போர்	501	253	98%
விமான அறிவுறுத்துநர்கள்	22	7	214%
விமான அறிவுறுத்துநர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட)	11	0	-
விமானத் தரைப்பகுதி அறிவுறுத்துநர்களின் அங்கீகாரம்	28	25	12%
* வகுப்பு மதிப்பீட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்	1		-
* வகை மதிப்பீட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்	9	*புதிய குறிகாட்டிகள்	-
* செயற்கை விமானப் பயிற்றுவிப்பாளர்கள்	4		-
விமானப் பரிசோதகர்கள்	6	6	-
* வகுப்பு மதிப்பீட்டுப் பரிசோதகர்கள்	1		-
* வகை மதிப்பீட்டுப் பரிசோதகர்கள்	23	*புதிய குறிகாட்டிகள்	-
* செயற்கை விமானப் பரிசோதகர்கள்	3		-
குறித்துரைக்கப்பட்ட சரிபார்க்கும் விமானிகள்	20	20	-
சிவில் விமானத்துறை மருத்துவப் பரிசோதகர்கள் / மருத்துவ மதிப்பீட்டாளர்கள்	6	6	-
சான்றுபடுத்தப்பட்ட விமானப் பாதுகாப்புத்துறை சரிபார்ப்பவர்கள்	1056	747	41%
சான்றுபடுத்தப்பட்ட விமானத்துறைப் பாதுகாப்பு அறிவுறுத்துநர்கள்	20	19	5%
சான்றுபடுத்தப்பட்ட விமானத்துறைப் பாதுகாப்பு முகாமையாளர்கள்	23	19	21%
விமானப் போக்குவரத்துச் சேவை வழங்குநர்கள்			
உலகளாவிய பங்கீட்டுச் சேவை வழங்குநர்கள்	3	3	-
விமானப் போக்குவரத்துச் சேவை வழங்குநர்களின் உரிமங்களை வைத்திருப்போர்	528	442	19%
விமானப் போக்குவரத்துச் சேவை வழங்குநர் உரிமம் - குழுமம் A	510	420	21%
விமானப் போக்குவரத்துச் சேவை வழங்குநர் உரிமம் - குழுமம் B	18	22	-18%
பொது விற்பனை முகவர்கள்	26	23	13%

இணைப்புக்கள்

CAASL இன் தொழில்நுட்ப செயற்திறனின் சுருக்கம்

ஒழுங்குவிதிகள் / அறிவித்தல்கள் / விதிகளின் தொகை	2023	2022
விமானத் தொழிற்பாடுகள்	12	4
விமானங்களின் பதிவும் தகுதியும்	1	-
வானூர்திகள்	3	5
விமான வழிசெலுத்துதல் சேவை	2	5
விமானத்துறைப் பாதுகாப்பு	11	6
விமான மருத்துவ சேவைகள்	2	3

நிறுவனங்கள் / ஆட்களின் ஆரம்ப சான்றுபடுத்துகை	2023	2022
விமான நிறுவனங்கள் (வெளிநாடு)	7	4
பராமரிப்பு நிறுவனங்கள்	2	1
விமானிகள்	492	201
விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள்	7	20
விமானப் பராமரிப்பு உரிமங்களை வைத்திருப்போர்	38	30
விமானத் தொழிற்பாட்டு அலுவலர்கள் (விமானம் அனுப்புவோர்)	4	-
விமான அறிவுறுத்துநர்கள்	15	7
விமான அறிவுறுத்துநர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட)	9	-
வகுப்பு மதிப்பீட்டு அறிவுறுத்துநர்கள்	1	*New Indicators
வகை மதிப்பீட்டு அறிவுறுத்துநர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட)	-	
வகை மதிப்பீட்டு அறிவுறுத்துநர்கள்	9	
செயற்கை விமான அறிவுறுத்துநர்கள்	4	
விமான நிலைய தரைப் பகுதி அறிவுறுத்துநர்கள்	27	25
விமானப் பணியாட்களின் எண்ணிக்கை	137	7

சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் / ஆட்களின் கண்காணிப்புகள்	2023	2022
சரிவுப்பாதைக் கண்காணிப்பு - தொழிற்பாடுகள்	13	10
தூண்டுதல் தொடர்பான மேற்பார்வை	3	3
இடை-வழி பற்றிய பரிசோதனை	10	6
ஆபத்தான பொருட்கள் பரிசோதனை	13	15
பிரதான தளப் பரிசோதனை / அறிவுறுத்துநர் அவதானிப்புகள்	6	6
குறித்துரைக்கப்பட்ட பரீட்சை விமானிகள் (DCP கண்காணிப்பு)	0	5
சரிவுப் பாதைப் பரிசோதனைகள் - பறக்கும் தகுதி	15	15
விமானப் பராமரிப்பு நிறுவன மேற்பார்வைகள்	22	22
அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்புப் பயிற்சி நிறுவன மேற்பார்வைகள்	4	11
தொடர்ச்சியான பறக்கும் தகுதி முகாமைத்துவ நிறுவனத்தின் (CAMO) மேற்பார்வைகள்	9	10
பறக்கும் பயிற்சிப் பாடசாலை மேற்பார்வைகள்	16	13
வானூர்திப் பரிசோதனைகள்	60	31
ATM பரிசோதனைகள்	42	36
AIM பரிசோதனைகள்	6	12
SMS பரிசோதனைகள்	15	15
CNS பரிசோதனைகள்	25	26
MET பரிசோதனைகள்	3	-
வரைபடங்கள் பற்றிய பரிசோதனைகள்	3	3
PANS-OPS பரிசோதனைகள்	3	-
ANS எழுமாறியான பரிசோதனைகள்	0	2
SKED அல்லாத விமானப் பரிசோதனைகள்	5	5
விமானத்துறைப் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை நடத்துதல் (பரிசோதனைகள், கணக்காய்வுகள், விசாரணைகள், பரீட்சைகள்)	97	75
குறித்துரைக்கப்பட்ட வைத்தியசாலைகள் - மேற்பார்வைகள்	5	-

பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வுகள்	2023	2022
விமானத்துப் பாதுகாப்பு	1	3

இணைப்புக்கள்

முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் - 2023

வழிகாட்டியும் முகாமைத்துவமும்	2023	2022
அதிகார சபையின் கூட்டங்கள்	11	9
கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்	5	4
பணியாட்கள் குழுக் கூட்டங்கள்	3	2
கைத்தொழில் ஆலோசனைக் கூட்டங்கள்	13	39

சட்ட விடயங்களும் அமுலாக்கமும் (LA&E)	2023	2022
இயற்றப்பட்ட முதன்மையான சட்டங்கள் / மீளாய்வு செய்யப்பட்ட நகல் சட்டமூலங்கள்	6	-
வழங்கப்பட்ட / மீளாய்வு செய்யப்பட்ட / புதுப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டங்கள்	41	22
உடன்படிக்கைகள்/MOU	24	30
சட்ட மா அதிபர் திணைக்களம் / சட்ட வரைஞர் திணைக்களம் ஆகியவற்றின் பங்கு பற்றிய ஆலோசனைக் கூட்டங்களின் எண்ணிக்கை	14	18
சட்ட விடங்கள் மீது CAASL/DGCA ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட சட்ட அறிவுரை தொடர்பான ஏற்பாடுகள்	86	110
நீதிமன்றத் தோன்றல்கள் / வழக்கு நடவடிக்கைகள்	27	31
தயாரிக்கப்பட்ட சட்ட ஆவணங்கள்	10	9
மீளாய்வு செய்யப்பட்ட CAASL ஆவணங்களின் எண்ணிக்கை	5	9

விமானத்துறைப் பாதுகாப்பு (AVSEC)	2023	2022
மீளாய்வுகள் / திருத்தங்கள் – NCASP மற்றும் துணை ஆவணங்கள்	10	13
மதிப்பீடுகள் / மீளாய்வுகள் - உள்நாட்டு விமான நிறுவனம் / விமான நிலைய தொழிற்பாட்டு விமானப் பாதுகாப்புத் திட்டம்	6	5
மதிப்பீடுகள் / மீளாய்வுகள் - வெளிநாட்டு விமான நிறுவன தொழிற்பாட்டு விமானப் பாதுகாப்புத் திட்டம்	14	9
மதிப்பீடுகள் / மீளாய்வுகள் - விமானப் பாதுகாப்பு பயிற்சித் திட்டங்கள் / பாடநெறிகள்	4	2
விமானத்துறைப் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை நடத்துதல் (மேற்பார்வைகள், கணக்காய்வுகள், விசாரணைகள், பரீட்சைகள்)	97	75
விமானத்துறைப் பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றுபடுத்துதல் மற்றும் மீள் சான்றுபடுத்தல்	23	19
விமானத்துறைப் பாதுகாப்பு அறிவுறுத்துநர்களின் சான்றுபடுத்துதல் மற்றும் மீள் சான்றுபடுத்தல்	20	19
விமானத்துறைப் பாதுகாப்பு திரையிடுபவர்களின் சான்றுபடுத்துதல் மற்றும் மீள் சான்றுபடுத்தல்	1,056	747
விமானத்தில் ஆயுதங்களை ஏற்றிச் செல்வதற்கு / பொருட்களை வைத்திருப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம்	87	36
விமான நிலைய அணுகல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான பரிந்துரைகள்	572	297
விமானத்துறைப் பாதுகாப்பு பயிற்சி / விரிவுரைகள் / சமர்ப்பணங்களை நடத்துதல்	2	1

சுற்றாடல், ஆய்வு மற்றும் திட்டங்கள் (ER&P)	2023	2022
சர்வதேச விமான நிறுவன புள்ளி விபரவியல் அறிக்கை	357	322
உள்நாட்டு விமான நிலைய புள்ளிவிபரவியல் அறிக்கை	51	47
அனுப்பப்பட்ட ICAO உடைய அறிக்கையிடல் படிவங்கள்	69	52
CAASL உடைய செயற்திறன் புள்ளிவிபரவியல் அறிக்கைகள்	240	239
அரசாங்க நிறுவனங்கள் / பொது மக்கள் / CAASL உடைய ஏனைய பிரிவுகளுக்கான புள்ளிவிபரங்கள் பற்றிய ஏற்பாடுகள்	38	22
ஏல விற்பனைகள் / RFP (பரிந்துரைகளுக்கான வேண்டுகோள்) - வழங்கப்பட்ட	19	18
வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள்	130	66
தயாரிக்கப்பட்ட CAASL இன் சபை ஆவணங்கள்	3	3
CAASL யின் பயிற்சிப் பட்டறைகள் / பணிகள் / நிகழ்வுகள் / விசேட நாட்கள் ஆகியவற்றுக்கான நிர்வாக உதவி	3	4
கூட்டங்கள் / பயிற்சிகள் / கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறைகள் (விமானத்துறை) ஆகியவற்றை ஏற்பாடு செயவதற்கான நிர்வாக உதவி	13	1

விமான வழிசெலுத்துதல் சேவைகள் (ANS)	2023	2022
நடத்தப்பட்ட ATM பரிசோதனைகள்	42	36
நடத்தப்பட்ட AIM பரிசோதனைகள்	6	12
நடத்தப்பட்ட SMS பரிசோதனைகள்	15	15
நடத்தப்பட்ட CNS பரிசோதனைகள்	25	26
நடத்தப்பட்ட MET பரிசோதனைகள்	3	-
நடத்தப்பட்ட வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் பற்றிய மேற்பார்வைகள்	3	3
நடத்தப்பட்ட PANS-OPS பரிசோதனைகள்	3	-
ANS எழுமாரி சோதனைகள்	-	2
SKED அல்லாத விமானப் பரிசோதனைகள்	5	5
NOTAM வழங்குகைக்கான அங்கீகாரங்கள்	326	416
வழங்கப்பட்ட AIP குறைநிரப்பி	13	7
AIP திருத்தம்	4	2
வழங்கப்பட்ட AIC எண்ணிக்கை	6	4
அங்கீகாரமளிக்கப்பட்ட வான்வழி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	73	53
வழங்கப்பட்ட தரையிறங்குதல் அனுமதிகள்	591	383
வழங்கப்பட்ட மேல் பறப்பதற்கான அனுமதிகள்	1,667	991
அங்கீகாரமளிக்கப்பட்ட அட்டவணை இடப்படாத விமான சேவைகளின் எண்ணிக்கை	2,258	1,374
அனுப்பப்பட்ட AFTN	1,983	813
பெறப்பட்ட AFTN	4,249	4,250
தரையிறங்குதல் மற்றும் நிறுத்துவதற்கான கட்டணங்கள் தொடர்பாக பெற்ற விதிவிலக்குகளின் எண்ணிக்கை	9	6
இராஜதந்திர விமான சேவைகளுக்காக வழங்கப்பட்ட தடைக் குறிப்புகளின் எண்ணிக்கை (தரையிறங்குதல்)	103	73
இராஜதந்திர விமான சேவைகளுக்காக வழங்கப்பட்ட தடைக் குறிப்புகளின் எண்ணிக்கை (மேலே பறப்பதற்கு)	176	93
கொழும்பு FIR இன் மேலே பறந்த விமானங்களின் எண்ணிக்கை	35,929	24,177

இணைப்புக்கள்

முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் - 2023

வானூர்திகள்	2023	2022
அங்கீகாரம் வழங்கப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கை	266	209
உயரமான அமைப்புகளை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம்	85	122
தரை விமான நிலைய சான்றிதழ் - புதுப்பித்தல்கள்	2	4
நடத்தப்பட்ட வானூர்தி கண்காணிப்புகள்	60	31

விமானத்துறைப் பயிற்சி மற்றும் தனிப்பட்ட உரிமங்கள்	2023	2022
பயிலுநர் விமானி உரிமங்கள் (SPL) (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	253	145
தனிப்பட்ட விமானி உரிமங்கள் (PPL) (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	100	124
வர்த்தக விமான உரிமங்கள் (CPL) (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	300	174
விமான நிறுவன போக்குவரத்து விமானி உரிமங்கள் (ATPL) (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	768	293
விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் உரிமங்கள் (ATC) (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	68	45
விமான பராமரிப்பு உரிமங்கள் (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	275	60
விமானப் பராமரிப்பு உரிமங்கள் - வகை மதிப்பீடுகள் (வழங்கப்பட்ட)	59	107
விமானப் பராமரிப்பு உரிமங்கள் - வகைகள் (வழங்கப்பட்ட)	8	12
விமானப் பணியாட்கள் சான்றிதழ்	501	253
விமான தொழிற்பாட்டு அலுவலர் உரிமம் (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	4	-
PPL, CPL மற்றும் ATPL வழங்குகைகளுக்கான விமான வகை மதிப்பீடு	96	66
அறிவுறுத்துநர் மதிப்பீடு – (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	47	7
பறக்கும் பயிற்சியளிக்கும் பாடசாலை உரிமங்கள் (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	7	9
விமான நிலைய தரைப்பகுதி அறிவுறுத்துநர் அங்கீகாரம் (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	28	25
விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் மதிப்பீடு (வழங்குதலும் + புதுப்பித்தல்களும்)	118	106
NIB அனுமதிகளை வழங்குதல்	231	56
PPL பரீட்சை (வினாத்தாள்களின் எண்ணிக்கை)	573	493
AML பரீட்சை பரீட்சைகளின் எண்ணிக்கை)	5	2
AML பரீட்சை (வினாத்தாள்களின் எண்ணிக்கை)	2,650	1,440
ATPL (A) பரீட்சைகள்	109	101
ATPL (A) வழங்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை	1,653	1,375
ATPL (H) பரீட்சைகள்	3	9
ATPL (H) பரீட்சை (வினாத்தாள்களின் எண்ணிக்கை)	17	27
ஆங்கில மொழி தகுதிகாண் பரீட்சை (ELPC)	127	140
விமான அறிவுறுத்துநர் (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சை (கோட்பாடு மற்றும் வாய்மூலப் பரீட்சை)	9	4

விமானத் தொழிற்பாடுகள்	2023	2022
விசேட தொழிற்பாடுகள்	1	-
வெளிநாட்டு விமானத் தொழிற்பாட்டாளர் சான்றிதள் - ஆரம்ப	7	4
வெளிநாட்டு விமானத் தொழிற்பாட்டாளர் சான்றிதள் - புதுப்பிக்கப்பட்ட	34	42
ஆபத்தான பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் உரிமங்கள் - ஆரம்ப	2	5
ஆபத்தான பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் உரிமங்கள் - புதுப்பிக்கப்பட்ட	11	17
DCP/TRE ஆரம்ப	-	1
DCP/TRE புதுப்பிக்கப்பட்ட	-	7
சர்வதேச விமானத் தொழிற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பிக்கப்பட்ட	1	3
உருவகப்படுத்தல் புதுப்பிக்கப்பட்ட	2	3
PPC அதிகாரம்	57	62
நடத்தப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள்	67	45
பதிவு செய்யப்பட்ட டிரோன் - உள்நாட்டு உரிமையாளர்கள்	1,388	1,091
பதிவு செய்யப்பட்ட டிரோன் - வெளிநாட்டு உரிமையாளர்கள்	2,388	1,526

விமானப் பதிவும் பறக்கும் தகுதியும் (AR&AW)	2023	2022
நடத்தப்பட்ட கண்காணிப்புச் செயற்பாடுகள் (சரிவுப்பாதை, கணக்காய்வு)	96	98
விமானங்களின் பறக்கும் தகுதி தொடர்பான சான்றிதழ் - ஆரம்ப	2	1
விமானங்களின் பறக்கும் தகுதி தொடர்பான சான்றிதழ் - புதுப்பிக்கப்பட்ட	40	45
பதிவு செய்யப்பட்ட விமானம் தொடர்பான சான்றிதழ் - ஆரம்ப	4	1
பதிவு செய்யப்பட்ட விமானம் தொடர்பான சான்றிதழ் - புதுப்பிக்கப்பட்ட	63	55
பராமரிப்பு நிறுவனம் (உள்நாடு) - ஆரம்ப	1	-
பராமரிப்பு நிறுவனம் (உள்நாடு) - புதுப்பிக்கப்பட்ட	17	18
பராமரிப்பு நிறுவனம் (வெளிநாடு) - ஆரம்ப	1	1
பராமரிப்பு நிறுவனம் (வெளிநாடு) - புதுப்பிக்கப்பட்ட	45	56
பராமரிப்பு பயிற்சி நிறுவனம் - ஆரம்ப	1	-
பராமரிப்பு பயிற்சி நிறுவனம் - புதுப்பிக்கப்பட்ட	4	1
தொடர்ச்சியான பறக்கும் தகுதி முகாமைத்துவம் - ஆரம்ப	1	6
தொடர்ச்சியான பறக்கும் தகுதி முகாமைத்துவம் - புதுப்பிக்கப்பட்ட	9	5
விமான விபத்துக்கள் பற்றிய விசாரணைகள்	339	298

இணைப்புக்கள்

முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் - 2023

விமானப் போக்குவரத்தும் பொருளாதார ஒழுங்கு விதிகளும் (ATER)	2023	2022
உள்நாட்டு விமான அட்டவணை அங்கீகாரம்	72	55
விமானப் போக்குவரத்து வழங்குநர்களுக்கு நடத்தப்பட்ட மதிப்பீடுகள்	123	46
சர்வதேச விமான சேவை அட்டவணை அங்கீகாரங்கள்	477	492
வெளிநாட்டு தொழில்நுட்ப / தொழில்நுட்பம் அல்லாத நிபுணத்துவப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட வீசா பரிந்துரைகள்	110	86
இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமான நிறுவனத்திற்கான பட்டய அனுமதிப்பத்திரம்	4	7
இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமான நிறுவனத்திற்கான விமான அனுமதிப்பத்திரம்	2	2
பட்டய அனுமதிப்பத்திரங்கள் - சர்வதேச தொழிற்பாடுகள்	2	2
பட்டய அனுமதிப்பத்திரங்கள் - உள்நாட்டு கிரம தொழிற்பாடுகள்	2	8
விமானப் போக்குவரத்து வழங்குநர்களுக்கான உரிமங்கள்	528	442
வெளிநாட்டு விமான நிறுவன உரிமங்கள்	33	6
மீளாய்வு செய்யப்பட்ட தற்போது இருக்கக்கூடிய விமான சேவை உடன்படிக்கைகள்	1	1
கையாளப்பட்ட நுகர்வோர் முறைப்பாடுகள்	52	48
வருட இறுதியின் போது இருந்த திறந்த ஆகாய விமான சேவை உடன்படிக்கைகள்	19	19

மனித வளங்களும் ஆதன முகாமைத்துவமும் (HR&PM)	2023	2022
பணியாளர் சேர்ப்புகள்	10	1
மொத்தப் பணியாளர்கள் (நிரந்தர தரங்கள்)	168	172
உதவியளிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் / கருத்தரங்குகள் / பயிற்சிப் பட்டறை வசதிகள்	15	7
உதவியளிக்கப்பட்ட வெளிநாட்டுக் கூட்டங்கள் / மகாநாட்டு வசதிகள்	18	4
உதவியளிக்கப்பட்ட வெளிநாட்டுப் பரிசோதனைகள்	16	8
உதவியளிக்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகள் / கருத்தரங்ககள் / பயிற்சிப்பட்டறைகள்	14	1
உதவியளிக்கப்பட்ட உள்நாட்டு நிறுவனத்திற்குள்ளான பயிற்சி நிகழ்வுகள் (ஆரம்பப் போதனை உள்ளடங்கலாக)	09	11
உதவியளிக்கப்பட்ட நிகழ்நிலைப் பயிற்சி / கருத்தரங்கு, பயிற்சிப் பட்டறைகள்	11	18
உதவியளிக்கப்பட்ட நிகழ்நிலைக் கூட்டங்கள் / மகாநாடுகள்	02	2
ஏற்படுத்தப்பட்ட செயற்திறன் மதிப்பீடுகள்	102	98
வழங்கப்பட்ட பணியாளர் கடன்கள்	80	72

தரமும் உள்ளகக் கணக்காய்வும் (Q&IA)	2023	2022
நடத்தப்பட்ட கணக்காய்வுகள்	104	94
கேள்விக்குட்படுத்தப்பட்ட கண்டறிதல்கள்	133	86

விமானத்துறைப் பாதுகாப்புக் கண்காணிப்பு	2023	2022
அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள்	16	6
அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள்	364	321
பிரயாணிகள் அல்லது விமானப் பணியாளர்களுக்கு ஏற்பட்ட சிறிய காயங்கள்	1	2
தயாரிக்கப்பட்ட புதிய வழிகாட்டி நூல்கள்	-	2
மீளாய்வு செய்யப்பட்ட தற்போதைய வழிகாட்டி நூல்கள்	1	2
புதுப்பிக்கப்பட்ட IS	1	-
உரிமம் வைத்திருப்போர் மீதான விபத்து / சம்பவம் தொடர்பான சரிபார்ப்புகள்	96	106

விமானத்துறை மருத்துவ சேவைகள் (AMS)	2023	2022
மருத்துவப் பரீட்சைகள்	1,657	1,348

தகவல் தொழில்நுட்பம் (IT)	2023	2022
முறைப்பாடுகளின் எண்ணிக்கை - உதவிக்குழுவின் ஆதரவு	11,732	12,583
தீர்ப்பளிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை - உதவிக்குழுவின் ஆதரவு	11,732	12,583
புதிதாகக் கொள்வனவு செய்யப்பபட்ட தகவல் தொழில்நுட்ப உபகரணங்களுக்கான மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு	9	2

சிவில் விமானத்துறை ஊக்குவிப்பு மற்றும் ஊடகம்	2023	2022
நடத்தப்பட்ட ஊயுனுநுஊ நிகழ்ச்சி	5	5
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்	8	2
நடத்தப்பட்ட விசேட நிகழ்வுகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்	4	1
பத்திரிகைக் கட்டுரைகள்	30	20
தொலைக்காட்சி நிகழ்சிகள்	24	21

தொழில்நுட்ப நூலகம்	2023	2022
அனுகப்பட்ட மற்றும் பங்கிடப்பட்ட ICAO யின் ஆவணங்கள்	267	1,085

இணைப்புக்கள்

போக்குவரத்து விபரங்கள்

	2023	2022	வளர்ச்சி (%)
சர்வதேச போக்குவரத்து			
பிரயாணிகள்			
விமானம் ஏறியவர்களின் தொகை	3,837,541	2,878,370	33%
விமானத்திலிருந்து இறங்கியவர்களின் தொகை	3,637,041	2,624,169	39%
இடைத்தங்கள்	899 229	881,226	2%
சரக்கு (மெற்றிக் தொன்)			
உள்ளே வந்த	65,071	63,612	2%
வெளியே சென்ற	93,544	103,357	-9%
விமானங்களின் நகர்வு			
அட்டவணைப்படுத்தப்பட்ட விமான சேவைகள்	44,995	35,917	25%
சாட்டட் விமான சேவைகள்	1,309	1,682	-22%
செயற்படுத்தப்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை			
அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகள்	33	30	10%
பட்டய	35	25	40%
அனைத்து சரக்கு	4	4	-
உள்நாட்டுப் போக்குவரதது			
கொண்டு செல்லப்பட்ட பிரயாணிகள்	11,955	6,519	83%
விமான நகர்வுகள்	4,070	1,539	164%
செயற்படுத்தப்பட்ட விமான நிறுவனங்களின் எண்ணிக்கை	5	5	-
அட்டவணைப்படுத்தப்பட்ட விமான சேவைகள்	2	2	-
பட்டய விமான சேவைகள்	3	3	-

குறிப்புகள்

இணைப்புக்கள்

குறிப்புகள்

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

CAASL

Civil Aviation Authority
Sri Lanka

Safe and Efficient Skies for All

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை
இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க, இலங்கை
தொலைபேசி : +94 112 358 800 பெக்ஸ் : +94 112 257 154
மின்னஞ்சல் : info@caa.lk
இணையம் : www.caa.lk